www.tamilarangam.net

# எரிமலை

ஜுன் 2000



## குடாநாட்டை மீட்கும் வரலாற்றுச்சமர்
## புலிப்படை சரித்திரம் படைக்கின்றது

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அக்கறைப் பூக்கள்




எரிமலை ஆசிரியருக்கு,

ஏப்ரல் இதழ்யில் ஆனையிறவு பெருந் தளம் மீட்கப்பட்ட நிகழ்வினை கட்டுரை யாகப் படித்த போது நெஞ்சு கொள்ளாத மகிழ்ச்சி பெரு வெள்ளமாய் ஓடியது. நிதானமாக, குறைந்த இழப்புக்களுடன் ஆனையிறவை மீட்டெடுத்த புலிகளின் போர்த்திறன் எவர்க்கும் கிட்டாத பேரறி வாகும்.

ஜெனிவா பேரணியில் ஈழமக்கள் ஒன்று திரண்ட செய்தி உலகமக்களுக்கு, தமிழர்கள் மண் மீது கொண்டுள்ளபற்று, அக்கறை யைப் புலப்படுத்தியிருக்கும்.

மீள் பார்வை எம்மைப் போன்றவர் களுக்கு மிகவும் உதவியாக உள்ளது.

ச.வேல்முருகன்
புதுச்சேரி - இந்தியா

✉ ✉ ✉

எரிமலை ஆசிரியருக்கு,

2000 ஆம் ஆண்டு மார்ச் மாத இதழ் கிடைக்கப்பெற்றேன். எமது மக்களின் விடுதலைத்தாகம் கலை இலக்கியங் களாக வேண்டும் என்ற தேசியத் தலை வரின் வேண்டுகோள் மிகவும் முன் னோக்கிய சிந்தனை ஒவ்வொரு எழுத் தாளர்களும் விளங்கிக்கொள்ள வேண் டியது. இன்றிருக்கின்றது நாளையின் களஞ்சியம். நாளை என்பதோ இன்று நாம் விதைப்பதன் அறுவடையே எனும் தத்துவத்திற்கு இணங்க எம் மக்களின் விடுதலைப் போராட்ட வரலாறும் அவர் தரும் ஈகங்களும் மிக உயர்ந்தது.

பெண் விடுதலை என்றால் என்ன? தலைவர் அளித்த விளக்கம் படித்தேன். உலகப் பெண்கள் யாரும் நினைத் துக்கூட பார்த்திராத உயரத்திற்கு தமிழீழப் பெண்களை எம் தேசியத் தலைவர் வளர்த்து எடுத்துள்ளார். மனித விடுதலை என்றால் அதில் ஆண் பெண் என்ற பாகு பாடு இல்லாமல் இருவருக்கும் சமபங் களிப்பு இருக்க வேண்டும். அப்போது தான் சமூகம் முழுமையடையும் என்பதை முற்றாக உணர்ந்தவர் தலைவர் என்பதால் எமது புரட்சி இயக்கத்துடன் பெண்ணினம் அணிசேரும் பொழுதுதான் எமது போராட் டமும் முழுமை பெறும் என்றார்.

பெண் போராளி பொதி சுமந்தபடி முன்னேறும் அட்டைப்படம் காலப்பொருத் தம் கருதி வெகு சிறப்பாக அமைந்தது.

கி.ஆறுமுகம்
விருதுநகர் - தமிழ்நாடு

✉ ✉ ✉

எரிமலை ஆசிரியர் குழுவிற்கு,

புலம்பெயர் நாடொன்றில் நீங்கள் புரியும் அளப்பரிய சேவையினைப் பாராட் டாமல் இருக்கமுடியாது. எம்மக்களிடையே எமது பாரம்பரியங்களையும் தாயகப்பற்றை யும் வேரூன்றச் செய்வதற்கும், அவர்களை மேலைத்தேய நாகரீகத்தில் மூழ்கவிடாமல் செய்வதற்கும், எமது உறவுகள் தாயகத் தில் அனுபவிக்கும் வேதனைகளையும், எமது தேசியத்தலைவரின் வழிகாட்டலில் புயலாகப் புறப்பட்டுக் கொண்டிருக்கும், ஆயிரமாயிரம் போராளிகளின் துன்பங் களையும் எம்மிடையே பகிர்ந்து கொள் ளும் பத்திரிகை என்ற வகையில் எரிம லைக்கு எமது நன்றிகள்.

எரிமலையில் வருகின்ற அனைத்து அம்சங்களும் நன்றாக உள்ளன. மிக முக்கியமாக மண்ணிற்காக வித்தாகிப் போன மாவீரர்களது சரித்திரங்களே எம் மைக் கவர்ந்துள்ளன. அவர்கள் வாழ்ந்த ஒவ்வொரு கணத்தையும் உங்களது பத்தி ரிகைகள் மூலம் நினைவு கூரும் பொழுது நாம் எம்மை மறந்து அவர்கள் வாழ்ந்த இடத்திற்கே சென்று விடுகின்றோம்.

ஆதவன், நிலவன்
ரஸ்சியா

✉ ✉ ✉

எரிமலை ஆசிரியர் குழுவிற்கு,

இராணுவ இனவாத ஒடுக்குமுறை களினால் பாதிக்கப்பட்டு மனமுடைந்து போய், மூலையில் கிடந்த எனக்கும் என்னைப் போன்றவர்கள் மத்தியில் எரி மலை போதிக்கும் ஒவ்வொரு வார்த்தை களும், விழிப்புணர்வையும், எழுச்சியை யும் ஊட்டி நிற்கின்றது என்பதை முன் னிட்டு பெருமிதம் கொள்கின்றேன். மனம் திறந்து பாராட்டுகின்றேன்.

பாலன்.
பாரிஸ்-10 பிரான்ஸ்

✉ ✉ ✉

அன்பான தோழர்களுக்கு,

மனம் நெகிழ்ந்துபோய் எழுதுகின் றேன். தங்களின் 5ஆம் மாத எரிமலை கிடைக்கப்பெற்றேன். களச்செய்திகளை அறிந்தேன். என் நண்பர்கள் பார்த்து, படித்து பரவசநிலையில் உள்ளனர். தம்பியின் தெளிவான படம் கண்டு நாங் கள் கொண்ட மகிழ்விற்கு எல்லை இல்லை. 2000 ஆண்டு அனைத்து இதழ்களும் ஒழுங்காக வந்து சேர்ந்துள்ளன. தொடர்ச் சியாக தமிழகத்தில் ஈழ ஆதரவுக்குரல் கள் வலுத்து வருகின்றது. மாயை அகன்று தமிழகமக்கள் தினமும் ஈழப்போர்ச் செய் திகளை படித்து கலந்து பேசுகின்ற நிலை உள்ளது.

தொடர்ந்து ஈழத்தின் வெற்றிச் செய் திகளை எரிமலையில் பார்ப்பதற்கு காத்து நிற்கின்றோம்.

ச.கலைச்செல்வம்
கொரமாச்சேரி -தமிழ்நாடு

✉ ✉ ✉

எரிமலை ஆசிரியர் குழுவிற்கு,

ஈழத்து மக்களின் உணர்வுகளை. அவர்தம் வாழ்வின் அவலங்களை தாய கத்து செய்திகளை குமுறும் எரிமலை யாகத் தருகின்ற தமிழீழத் தகவற் பெட்ட கமே நீ வெளிவந்த காலம் தொட்டு உன்னால் பலன் பெறும் பல லட்சம் வாசகர்களில் நானும் ஒருவன். சர்வதேச சஞ்சிகைகளை மிஞ்சிவிட்ட நேர்த்தி யான வடிவமைப்பு. எமது, எதிர்கால சந்ததியினருக்கு ஆவணமாக போற்று தற்குரிய செய்திகள், கதைகள், கவிதை கள் என்னும் பல அம்சங்களுடன் வெளி வரும் தமிழர் உணர்வின் எரிமலையே நின் சேவை மென்மேலும் சிறப்புடனே அமைவதற்கு வாழ்த்துகின்றேன்.

பிரபாகரதாசன்
ஒஸ்லோ - நோர்வே

✉ ✉ ✉

எரிமலை வெளியீட்டாளர்களுக்கு,

தமிழீழத்தில் நடக்கும் இனமீட்பு போராட்டம் என்பது இன்று உலக நாடு களையே உற்று நோக்கி மெய்சிலிர்க்க வைத்துள்ளது. உலக மக்களின் பார்வை சிறு தீவில் வாழும் தமிழ் வீரர்களின் மீது விழுந்துள்ளது. 40,000 சிங்கள இராணு வத்தினர் விடுதலைப் புலிகளிடம் மாட் டிக் கொண்டது, ஆதிக்க வல்லரசு களுக்கு பெரும் அதிர்ச்சியைத் தந்துள்ள தோடு அல்லாமல், சிங்களப் படைகளை மீட்க மறைமுக ஆதரவு, வெளிப்படை யான ஆதரவு என்று நீலிக்கண்ணீர் வடிக்கிறது. மனிதநேய அடிப்படையில் சிங்கள இராணுவத்திற்கு உதவியாம்? அந்த மனித நேயம் தமிழர்கள் மீது இல்லையா? தமிழக மக்கள் விழித்துக்கொள்ள வேண்டிய நேரமிது.

அ.தமிழ்ச்செல்வம்
விடுதலை செய்தியாளர்
தர்மபுரி - தமிழ்நாடு



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உள்ளே...

# எரிமலை
ஜூன் 2000

## கட்டுரை

பேய்களின் கூட்டு பக்கம் - 08
அர்த்தமற்ற வாதம்! பக்கம் - 09
நிலமீட்பு என்ற இராணுவ அம்சமும்..... பக்கம் - 13
தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசம் பக்கம் - 16
களங்களிலிருந்து தேசங்கள் பிறக்கும் பக்கம் - 18
ஆண்டான் அடிமை மனோபாவத்தில் சந்திரிகா பக்கம் - 20
தொன்மைத் தமிழே.... பக்கம் - 28
வெற்றிகள் தொடர வெற்றிகள் காப்போம் பக்கம் - 30
கல்வியில் மாற்றத்தை ஏற்படுத்த இன்றைய கல்விச் சமூகம் முன்வர வேண்டும் பக்கம் - 34
துணிவுடன் நடந்த வெளியேற்றம் பக்கம் - 44
ரத்வத்தவின் பலிக்கடாக்கள் பக்கம் - 43
சர்வதேச சமூகத்திற்கு ஒரு வேண்டுகோள் பக்கம் - 47


## அணையாத தீபங்கள்

கப்டன் ரஞ்சன் லாலா பக்கம் - 46


## சிறுகதை

வயல் வெளியில் நிற்பவர்கள் -சிதம்பர திருச்செந்திநாதன்- பக்கம் - 40


## கவிதை

தொட்டில் பிள்ளையும் துடிக்குதிங்கே தமிழீழம் காண... -பிரின்ஸ்- பக்கம் - 07
யார் அழகு -அ.அன்ரனி- பக்கம் - 19
ஓராயிரம் வேர்ப்பின்னல்கள் -சுதாமதி- பக்கம் - 37
மக்களுக்காகவே அவர்கள் -யாழ் வீரன்- பக்கம் - 39


## தொகுப்பு

தமிழர் விடுதலை வரலாற்றில் ஆனி பக்கம் - 21
நீங்காத நினைவுகள் பக்கம் - 38
வடக்கும்/தெற்கும் பக்கம் - 48
மீள்பார்வை மே பக்கம் - 49



**10** யாழ் நகரின் கிழக்கு வாயிலில் ஓயாத அலைகள் 3 படையணிகள்





**14** சொந்தப்படையில் நம்பிக்கை இழந்த சிங்களம்





**22** முரண்பட்டு நிற்கும் அரசியல் இராணுவத் தலைமைகள்






தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மாணவ சமூகத்திற்கு விழிப்புணர்வை ஊட்டுவது எமது கல்விமான்களின் தேசியக்கடமைப்பாடாகும்.

கல்வி பெறும் உரிமை மனித சுதந்திரங்களில் அடிப்படையானது. அறியாமையிலிருந்து விழிப்புற்று, தனது வாழ்க்கை பற்றியும் தான் வாழும் உலகம் பற்றியும் அறிந்து கொள்வதற்கு ஒவ்வொரு தனி மனிதப்பிறவிக்கும் உரிமையுண்டு. தனது ஆற்றல்களை வளர்த்து, தனது ஆளுமையை மேம்படுத்தி, சுதந்திரமாகச் சிந்தித்துச் செயற்படும் உரிமை ஒவ்வொருவருக்கும் உரித்தானது.



இந்த மூலாதார உரிமையைப் பறித்தெடுத்து தமிழீழத்தின் கல்வித்துறையைச் சிதைத்துவிட சிங்களப் பேரினவாதம் நீண்ட காலமாகவே முயன்று வருகின்றது. இதன் விளைவால் எமது சமூகத்தின் கல்வி வாழ்வு பாரதூரமான அளவிற்குப் பாதிக்கப் பட்டிருக்கிறது.

கல்வியும், மொழியும், பண்பாடும், நிலமும் எமது இனக்கட்டமைப்பைத் தாங்கி நிற்கும் தூண்கள். இந்தத் தூண்களைத் தகர்த்துவிட எதிரி முனைகின்றான். இனத் தனித்துவத்தை அழிப்பது அவனது நோக்கம்.

நாம் எமக்கு உரித்தான உரிமைகளை வென்றெடுக்கப் போராடுகிறோம். அதேவேளை, சமூக வாழ்விற்கு ஆதாரமான அமைப்புக்கள் அழிந்து போகாது பாதுகாக்கவும் நாம் போராட வேண்டியிருக்கிறது. ஆகவே இரு முனைகளில், ஒரே வேளையில் போராட வேண்டியவர்களாக நாம் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளோம். இது தவிர்க்க முடியாத ஒரு வரலாற்று நிர்ப்பந்தம்.

தமிழீழ மக்களின் விடுதலை இயக்கம் என்ற ரீதியில் இந்த இரு முனைப்போராட்டத்தை முன்னெடுப்பதில் நாம் தெளிவோடு, உறுதியோடு, தீர்க்கமாக உழைத்து வருகின்றோம். இந்த இரு முனைகளுக்கும் இடையில் வெடிக்கும் முரண்பாடுகளைக் களைந்து விடுவதிலும் நாம் நிதானமாகச் செயற்படுகிறோம்.

உரிமைகளுக்காக நாம் தொடுத்த போராட்டம் இன்று உயிர் வாழ்வதற்கான போராட்டமாக விரிவாக்கம் பெற்றிருக்கின்றது. அன்றொரு காலம் நாம் அமைதி வழியில் உரிமை கேட்டோம். இன்று நாம் இரத்தம் சிந்திப் போராட வேண்டியிருக்கின்றது. உயிர்ப்பலி கொடுத்து உயிர் வாழ வேண்டியிருக்கின்றது.

இன அழிவைத் தடுத்து எமது மண்ணையும், மக்களையும் பாதுகாப்பது இன்று எமது விடுதலை இயக்கத்தின் முதன்மையான கடனாக உள்ளது. இதற்குப் போராடியே ஆகவேண்டும். போராடி வாழ்வதைத் தவிர எமக்கு வேறுவழியில்லை.

போராடுவதற்கு போராளிகள் வேண்டும். எதிரியுடன் போர் நடத்த ஒரு படை வேண்டும். இந்த விடுதலைப் படை இல்லாது போனால் எமது இனத்தின் அழிவைத் தடுத்து நிறுத்த முடியாது. இந்தப் போராளிகளை, இந்த இளம் புலி வீரர்களை, நாம் எமது மக்கள் சமுதாயத்திலிருந்தே அணிதிரட்ட வேண்டியுள்ளது. நாம் வலுக்கட்டாயமாக ஆட்சேர்ப்பதில்லை. இது ஒரு தேசிய விடுதலைப் போர் என்பதால் சுயவிருப்பிலேயே இளம் போராளிகள் எமது இயக்கத்தில் இணைந்து கொள்கிறார்கள். தமது சுயத்தைத் துறந்து, தமது சொந்த வாழ்வின் சுகபோகங்களைத் துறந்து, தமது மண்ணையும், மக்களையும் நேசிக்கும் விடுதலைப் பற்றாளர்கள் எம்முடன் இணைகின்றார்கள். இந்தப் போராளிகளின் இலட்சிய வாழ்க்கையையும், அர்ப்பணிப்பையும் நாம் போற்ற வேண்டும். கௌரவிக்க வேண்டும்.

தாயக விடுதலைக்குத் தம்மை அர்ப்பணிக்கும் தெரிவிற்கும், கல்வி கற்கும் உரிமைக்கும் இடையில் நாம் என்றுமே முரண்பாட்டைக் கற்பிக்க முயலவில்லை. இரண்டுமே எமது சமூகத்தின் வாழ்வியக்கத்திற்கு இன்றியமையாதவை. போரும், கல்வியும் இணைந்த ஒரு வாழ்வு இன்று எமது வரலாற்றுத் தேவையாக உள்ளது. எமது போராட்டம் கல்விக்கு கவசமாக இருப்பதுபோல கல்வியும் எமது போராட்டத்திற்கு காப்பரணாக நிற்க வேண்டும். எமது விடுதலைப்போராட்டத்தின் உன்னதத்தை உணர்ந்துகொள்ளும் வகையில் மாணவ சமூகத்திற்கு விழிப்புணர்வை ஊட்டுவது எமது கல்விமான்களின் தேசியக்கடமைப்பாடாகும்.


**தமிழீழத் தேசியத் தலைவர்**
**மேதகு வே. பிரபாகரன்**

(13.02.1993ஆம் திகதி தமிழீழப் பொதுக்கல்வித் தேர்வில் சித்தி எய்திய மாணவர்களைப் பாராட்டி வெளியிட்ட அறிக்கையிலிருந்து)



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




# தலைவாசல்

கலை பண்பாட்டு

அரசியல் சமூக ஏடு

★

பத்தொன்பதாம் ஆண்டு

ஜூன்
2000

★

ஆக்கங்கள்

அபிப்பிராயங்கள்

மற்றும் தொடர்புகட்கு

★

**எரிமலை**

தாய்மண் வெளியீடு

தமிழர் ஒருங்கிணைப்புக் குழு

C/O T.C.C-France,

341, Rue des Pyrenees,

75020 Paris.

Tel: 01 - 43 58 11 42

Fax: 01 - 43 58 11 91

e.mail: erimalai@freesurf.fr

## பிரதேச ஒருமைப்பாடல்ல மக்களின் தேர்வே முடிவானது!

அண்மையில் சிறீலங்காவிற்கு பயணம் செய்த அமெரிக்க உயரதிகாரி ரொம் பிக்கரிங் முதல் பலர் தமிழீழ சிங்கள முரண்பாடு தீர்க்கப்படவேண்டும் என உரத்துக் குரல் எழுப்பியுள்ளனர். பெரும் மனித அழிவுகள் ஏற்படலாம் என்ற அச்சத்தை தாம் கொண்டுள்ளதாகவும் அவர்கள் கூறுகின்றனர். ஒரு இணக்க வழித் தீர்வு கண்டுபிடிக்கப்பட வேண்டும் எனவும் கூறுகின்றனர். புலிகள் பேச்சுக்களில் கலந்துகொள்ள வேண்டும் என அழைப்பு அவர்களால் விடுக்கப்படுகின்றது. தத்தமது அரசுகள் இரு தரப்புக்கும் மத்தியத்துவம் வகிக்கத் தயாராக உள்ளதாக அறிவித்துள்ளன. இவற்றுடன்கூடவே, இலங்கையின் பிரதேச சுயாட்சிக்கு கூறு ஏற்படாத வண்ணம் தீர்வு காணப்பட வேண்டும் என்ற விசித்திரமான நிபந்தனையையும் இவர்கள் பிரேரிக்கின்றனர்.

இலங்கையின் பிரதேச ஒற்றுமை என்பது என்ன? தமிழீழம் மீதான அடக்கு முறையின் வடிவமே இப்பிரதேச ஒருமைப்பாட்டுக் கோசமானது சிங்களத்தின் கொடிய இனவெறியாட்சிக்கும், இனப் படுகொலை நடவடிக்கைகளுக்கும் கொடுக் கப்பட்ட அனுமதி போன்று இயங்கியது. உணவுத்தடை, மருந்துத்தடை என்பன இவ்வாறான பிரதேச ஒருமைப்பாட்டுக் கோசத்தின் கீழ்த்தான் இடம்பெற்றது. செம்மணிப் படுகொலைகளை சர்வதேச சமூகம் சரியாக விசாரணைக்கு உட் படுத்தாது தடுப்பதற்கு, பிரதேச ஒருமைப்பாட்டை ஒரு கூறாகக் கொண்ட இறைமை என்ற ஆயுதத்தை பிரயோகித்தது. இத்தனை கொடுமைகளையும் கொண்ட சிறீலங்கா பிரதேச ஒருமைப்பாட்டை ஏன் ஈழத்தமிழர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

1977இல் ஈழத் தமிழர்கள் சனநாயக பூர்வமாக இப்பிரதேச ஒருமைப்பாட்டை நிராகரிக்கும் தேர்வை மேற்கொண்டனர். அதனைத் தொடர்ந்து சிங்கள அரச பயங்கரவாதமும், அடக்குமுறையும் உச்ச எல்லைவரை சென்று பெரும் சட்டத் தடைகளையும் வன்முறைகளையும் மக்கள் மீது திணித்தது. அதனை எதிர்த்து தமிழர்களின் ஆயுதப் போராட்டம் பெரு வளர்ச்சி கண்டது. இவ்வாறான வரலாற்றுப் பின்னணியில், இன்று பிக்கரிங் போன்றவர்கள் போலியான கொடூரமான சிறீலங்கா ஒருமைப்பாட்டை எம் முன் நிபந்தனையாக வைப்பது சனநாயக விரோதமானதும், நீதிக்குப் புறம்பானதுமாகும்.

இலங்கைத் தீவு இரு தேசிய இனங்களின் அடையாளமிடப்பட்ட தாயக பூமிகளைக் கொண்டது. தமது அரசியல் சுதந்திரத்திற்கும், பாதுகாப்பிற்கும் ஒரே சாத்தியமான வழி தமது இழந்துபோன இறைமையைப் பெறுவதே என்பதை முடிவு செய்யும் உரிமையை தமிழர்கள் கொண்டவர்கள். இதனை அமெரிக்காவோ அல்லது பிற தரப்பினரோ மறுத்துவிட முடியாது.

உண்மையில் தமிழீழ- சிறீலங்கா இனமுரண்பாட்டிற்கு இணக்க வழியில் தீர்வு காணப்படல் வேண்டுமெனில் அது முற்றிலும் பக்கச்சார்போ அல்லது தேர்வுகளோ இல்லாத முறையில் மக்களின் உண்மையான அபிலாசைகளைப் பிரதிபலிக்கும் விதத்தில் இடம்பெற வேண்டும். மாறாக தமிழர்களின் துன்ப துயரங்கள் பற்றிய அக்கறைகள் அற்ற, ஆனால் சிறீலங்கா ஒருமைப்பாட்டைப் பேணும் கோட்பாடு களைப் பேசுபவர்கள், எழுதுபவர்கள் அனைவருமே மறைமுகமாக சிங்களப் பேயரசின் கொடிய போர்க் குற்றங்களுக்குச் சார்பாகப் பேசுகின்றனர். ஒருமைப் பாடு என்பதல்ல கேள்வி, மாறாக மக்களின் தேர்வே முடிவானதாகும். தமிழ் மக்கள் தமது விடுதலைக்கான அவாவை வெளிப்படுத்திவிட்டனர். அதற்காக பல்லாயிரம் உயிர்ஈகங்களை புரிந்துள்ளனர். இத்தகைய துன்ப துயரங்களுடனும் நம்பிக் கையாக உள்ளனர். இவையனைத்தும் சிறீலங்காவின் கேடுகெட்ட இறைமை யையும், பிரதேச ஒருமைப் பாட்டையும் பாதுகாக்க அல்ல!



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மனிதாபிமான நடை
# கொடூரச் செயல்கள்

வடபோர் முனையில் நாளுக்கு நாள் போரின் தீவிரம் அதிகரிக்கப்பட்டுள்ளது. புலிகளினால் மீட்கப்பட்ட பகுதியிலும், படையினர் வசமுள்ள அப்பாவிப் பொதுமக்களைப் பாதுகாப்பான இடங்களுக்கு நகர்த்துவதற்காகவும், வீண் உயிரிழப்புக் களை தவிர்ப்பதற்காகவும் புலிகள் 12 மணித்தியால தாக்குதல் நிறுத்தம் ஒன்றை அறிவித்தனர். இவ்விடயத்தில் சர்வதேச தொண்டர் நிறுவனங்களினதும் உதவியையும் கோரியிருந்தனர்.

ஆயினும் புலிகளால் மீட்கப்பட்ட பிரதேசத்திலிருந்து மக்களில் கணிசமானதொரு தொகையினரே பாதுகாப்பான இடங்களுக்கு நகர்த்தப்பட்டுள்ளனர். இராணுவத்தின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதியில் சிக்கியுள்ள மக்களை வெளியேற படையினர் அனுமதி மறுத்ததோடல்லாமல் புலிகளினது அறிவிக்கப்பட்ட தாக்குதல் நிறுத்தச் செய்தி தமக்கு அறிவிக்கப்படவில்லையென உண்மைக்குப் புறம்பானதொரு பொய்யை விட்டெறிந்துள்ளனர்.


தாம் இந்தத் தாக்குதல் நிறுத்தச் செய்தியினை அரசுக்கு அறிவித்த போதிலும் சாதகமான பதிலேதும் கிடைக்கவில்லை என்றும் மக்களைப் பாதுகாப்பான இடங்களுக்கு அகற்றுவதற்கு அரசு ஒத்துழைப்பு வழங்கவில்லை எனவும் சர்வதேச தொண்டர் நிறுவனங்கள் கூறியுள்ளன. மீட்கப்பட்ட பகுதியிலிருந்து வன்னிப் பகுதிக்கு இடம்பெயர்ந்து கொண்டிருந்த மக்கள் மீதே அகோர எறிகணைத் தாக்குதல்களையும் விமானத் தாக்குதல்களையும் தீவிரப்படுத்தி பலரது உயிரிழப்புக்களுக்கும், நூற்றுக் கணக்கானவர்களை காயமடையவும் அரச படைகள் காரணமாயமைந்ததையிட்டுத் தாம் வேதனையுறுவதாயும் அவை சுட்டிக்காட்டியுமுள்ளன.

தன் நாட்டு மக்களினது உயிர் விடயத்தில் எதுவித அக்கறையும் காட்டாது, தனது காட்டுமிராண்டித்தனமான போர்வெறிக்கனவுக்கு பல்லாயிரம் அப்பாவிச் சிங்கள இளைஞர்களையும், போரில் சம்மந்தமில்லதா அப்பாவி மக்களினது உயிர்களையும் அழித்தொழிக்கும் விபரீத விளையாட்டில் சந்திரிகா அம்மையார் இறங்கியுள்ளார்.

யாழ் குடாவில் நெருக்குதல்களுக்குள்ளாகியிருக்கும் படையினர் விடயத்தில் புலிகள் தாமாக முன்வந்து அப்பகுதியில் சிக்கியுள்ள படையினரை அகற்றிக் கொள்வதற்கென யுத்தத் தவிர்ப்பு அறிவிப்பினையும், சரணடைவதற்கென ஒரு கிழமை அவகாசமும் கொடுக்க முன்வந்த போதிலும் அரசு இவ்விடயத்தில் சிறிதும் அக்கறையின்றி நடந்து கொண்டது மட்டுமல்லாது புலிகளின் அறிவிப்புக்களை நிராகரித்துக் கிண்டலும் செய்து கொண்டது.

வட போர்முனையில் சகல முனைகளாலும் நெருக்குதல்களுக்குள்ளாகி வரும் அரசபடையினரது நிலை நாளுக்குநாள் மோசமாகி வருவதோடு நாளை என்ன நடக்குமோ என்ற கேள்விக்குறியும் எழுந்துள்ள இவ்வேளையில்கூட அரசு அந்நிய நாட்டுப்படை உதவிகளைக் கோருவதிலும், அதி நவீனரக ஆயுதங்களை கொள்வனவு செய்வதிலும் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றது. நவீனரக ஆயுதங்களினால் புலிகளைத் தோற்கடிக்கலாம் என இவர்கள் எண்ணுவது மிகவும் தவறானதொரு விடயமாகும். ஏனெனில் இந்தியப் படையினரை இம்மண்ணிலே தோற்கடிப்பதற்கு புலிகள் எந்தவகையான நவீன ஆயுதங்களையும் பிரயோகிக்கவில்லை என்பதை இவர்கள் மறந்துவிடமுடியாது.

அரசும் அரச படைகளும் மனிதாபிமானமற்ற முறையில் தமிழினத்தைக் கொடுமைப்படுத்தி சர்வதேச போரியல் சட்டதிட்டங்களை மீறும் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற வேளையிலும், தமிழினப் போர் முனைப்படைந்த காலம் தொட்டு இன்று வரையிலான காலகட்டம் வரைக்கும் புலிகள் இவ்வழிமுறைகளை சரியான முறையிலேயே கடைப்பிடித்து வருகின்றார்கள். சர்வதேச போரியல் சட்டதிட்டங்களில் அடங்கும் வழிமுறைகளான போரில் கைதாகும் படையினரை மனிதாபிமான முறையில் பராமரிப்பது, கைதிகளைப் பரிமாறுவது, இறந்த வீரர்களது உடல்களுக்கு மரியாதை செய்வது, உறவினர்களுடனான தொடர்பை ஏற்படுத்திக் கொடுப்பது.



இன அழிப்புக்கென நவீன ஆயுதக் கொள்வனவு செய்துள்ள சிறீலங்கா அ



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# றைகளைப் புறந்தள்ளி
# ல் இறங்கியுள்ள அரசு

-அ. அன்ரனி-

போன்ற சட்ட திட்டங்களை அனுசரித்து, கடைப்பிடித்து வந்துள்ளமைக்கும் சான்றுகள் பல தமிழீழப் போர்வரலாற்றில் நடந்தேறியுள்ளன.


நீதியுடனான பேச்சுக்கள் மூலமும் உளத்தூய்மையுடனும் ஆரம்பம் முதல் இன்று வரை செயற்படுத்த தவறிய பொ.ஜ.மு அரசானது, அன்று தொட்டு இன்றுவரை போரை முன்னெடுத்துச் செல்வதிலேயே முனைப்பாக நின்றது. போரில் புலிகள் பலம் மேலோங்கி படையினர் படுதோல்வி பெறும் வேளைகளில் எல்லாம் தமிழ் மக்கள் மீது இவ்அரசுகள் பல போர்வைகளில் போர்ச்சுமை அழுத்தங்களைப் பிரயோகித்தன. ஆயினும் இவ்வாறான கொடுஞ்செயல்கள் பல வெளியுலகிற்கு எட்டாதபடி கடும் இருட்டடிப்புச் செய்யப்படுகின்றன. சர்வதேசச் சட்டங்களை மீறியதான செயற்பாடுகளில் ஒன்றான பத்திரிகைச் சுதந்திரத்தைப் பறிக்கும் செயலை செய்தித்தணிக்கை எனும் அத்தியாயத்தின் மூலம் மிகவும் இறுக்கமான முறையில் கடைப்பிடித்து வருவதனால் மேற்படி சம்பவங்கள் பல வெளியுலகினைச் சென்றடைய வாய்ப்பில்லாமல் போகின்றது.

தமிழர்களிடமிருந்து புலிகளை பிரித்தெடுப்பதற்காகவும், தமிழர்களின் நீதிக்காகவும் தம்மால் போர் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றது என சர்வதேசத்திற்கு போக்குக் காட்டியபடி போரைத் தொடரும் அரசு, மறுபுறத்தில் ஒட்டுமொத்த தமிழின அழிப்பு நடவடிக்கைகளை, கடும் பொருளாதாரத்தடை, மருந்துத்தடை கடுமையான அணுகுமுறைகள் மூலம் தமிழினத்தை துயரத்தில் வீழ்த்துவது போன்ற நடவடிக்கைகளை கட்டவிழ்த்து விட்டிருக்கின்றது. வன்னியிலும் ஏனைய தமிழ்ப் பிரதேசங்களிலும் தமிழினம் கடும் பட்டினி, நோய்த்தாக்கம் போன்றவற்றினால் தாக்குண்ட போதிலெல்லாம் அவ்விடயத்தில் சிறிதும் கரிசனை காட்டத்தவறிய அரசு தென்னிலங்கையில் ஆடம்பர நிகழ்வுகள் போன்றவற்றில் திளைப்பதோடு, போருக்குச் சகலதும் எனும் வழியில் நடந்து கொண்டதன் மூலம் தன்னை ஒரு நீதியற்ற கொடிய இனத்துவேசம் கொண்ட அரசாக இனம்காட்டிக் கொண்டது.

புலிகளுடனான யுத்தம் நடைபெறும் நாட்களில் மாத்திரமன்றி சர்வதேச யுத்தத் தவிர்ப்பு நாட்களாகக் கடைப்பிடிக்க வேண்டிய நாட்களைக்கூட சிங்களப்படைகள் உதாசீனம் செய்து அந்நாட்களில்கூடத் தமிழ் மக்களைக் கொடுமைப்படுத்தும் நிகழ்வுகளில் இறங்கியுள்ளதினையும் நாங்கள் அறிவோம். புலிகளின் தலைமை தாமாக முன்வந்து அறிவிப்புச் செய்த யுத்தத் தவிர்ப்பு நாட்களைக்கூட கேலி செய்து நிராகரித்துப் போரில் தம்மவர் இழப்பு கூடுதலாக அமைகின்ற போது அதனைச் சகிக்கமுடியாத இவர்கள் போருக்குப் பயந்து மக்கள் ஒதுங்கியிருக்கும் கோயில்கள், பாடசாலைகள் வைத்தியசாலைகள் போன்றவற்றின் மீது மோசமான குண்டுத்தாக்குதல்களையும் செல் தாக்குதல்களையும் தீவிரப்படுத்தி இனஅழிப்பு நடவடிக்கைகளில் மனக் கூச்சமின்றி செயற்படுவதாவது உண்மையில் மன்னிக்க முடியாததும் ஈவிரக்கமற்ற செயலொன்றாகவுமே கருதமுடியும்.

தமிழீழப் போர்வரலாற்றில் ஓர் திருப்பு முனையை ஏற்படுத்தியிருக்கும் ஓயாத அலைகள் தாக்குதல்கள் தொடங்கப்பட்ட நாள் முதல் இன்று வரை புலிகள் மக்களது பாதுகாப்பு விடயத்தில் அதிக கவனம் செலுத்தி வருகின்றமை யாவரும் அறிந்த ஒன்றே. தாக்குதல்கள் நடைபெற்ற வேளையிலும்கூட தமிழ் மக்களுக்குச் செய்தி ஊடகங்கள் மூலமாகவும் சர்வதேச தொண்டர் நிறுவனங்களூடாகவும் அடிக்கடி பாதுகாப்பு இடங்களைத் தேடுமாறும் இடம்பெயருமாறும் அறிவித்தபடி இருந்தனர். ஆயினும் படையினரோ தமிழ் மக்களை மனிதக் கேடயமாக்கி, விதிமுறைகளை மீறி நடந்த போதிலெல்லாம் புலிகள் நிதானமிழக்காது மக்கள் மீது கொண்ட பற்றுதல்களினால் அந்த இடங்களில் போர்த் தவிர்ப்பு நடவடிக்கைகளில் கூட ஈடுபட்டனர்.

புலிகளின் போர்த் தீவிரத்தை கண்டஞ்சியதால் தம்மைப் பாதுகாத்துக் கொள்ளக்கூடமுடியாது திணறிய படையினர் போரில் திசையை மாற்றுவதற்காக மக்கள் பாதுகாப்புத் தேடிய இடங்களில் மிகவும் கொடூரமான முறையில் தாக்குதலைத் தொடுத்து





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பல அப்பாவிப் பொதுமக்களைக் கொன்றும் காயப்படுத்தியுமுள்ளனர். அப்பழியினை விடுதலைப் புலிகள் மீது போட்டு சர்வதேசக்கண்டனங்களிற்கு புலிகளை உட்படுத்தும் செயற்பாடுகளிலும் அரசபடைகள் ஈடுபட்டு வருகின்றன.

தமிழர் தாயகப் பிரதேசங்களை அபகரித்து ஆக்கிரமித்துக் கொள்ள பல திட்டங்கள் போட்டு நடவடிக்கைகளை முடுக்கிவிட்ட போதிலும் புலிகளின் அதிதீவிர எதிர்த்தாக்குதல்களினால் நடவடிக்கை சிதைக்கப்பட்டதின் பின்னால் ஆத்திரமுற்று அவதியுறும் அரசானது இழப்புக்களையும் தோல்விகளையும் நிவர்த்தி செய்யும்பொருட்டு தமிழ்மக்கள் மீது இன்னுமதிகமாய் தாங்க முடியாத போர்ச்சுமைகளையும், போர் அழுத்தங்களையும் கடும்பொருளாதாரத் தடைகளையும் கட்டவிழ்த்து விடுகின்றன. இப்படியான பல சம்பவங்களை சர்வதேசமும் அறியாமலில்லை. அவர்களினால் பலமுறை இலங்கை அரசு கண்டனத்திற்கு உள்ளான சம்பவங்களும் நடந்தேறியுள்ளன.

புலிகளினால் விடுக்கப்பட்ட நல்லெண்ண சமிக்ஞைகளை நிராகரித்து போர் நடைபெறும் பிராந்தியத்தில் அகப்பட்டுள்ள தமிழ் மக்களினது பாதுகாப்பு விடயத்தில் அக்கறையோ கரிசனையோ காட்டத் தவறிய சந்திரிகா அரசு, யாழ் குடாவில் சிக்கியுள்ள படையினர் விடயத்தில் அதீத அக்கறை காட்டுவதாக இல்லை. ஆகவே அப்பிராந்தியத்தில் முப்பதினாயிரத்திற்கும் மேற்பட்ட படையினரது நிலை கேள்விக்குறியானதொன்றாகவே உள்ளது. இவ் அசமந்தப் போக்கினால் நாளை படையினரது நிலை கவலைக்கிடமானதொன்றாக மாற வாய்ப்புண்டு. மிக மோசமானதொரு மனிதப் பேரழிவு நிலைக்கு அவர்கள் தள்ளப்படுவார்கள் எனும் அச்சம் நிலவுகின்றது. இந்நிலை அரசின் இனஅழிப்பு நோக்கினாலேயே ஏற்பட்டதேயன்றி வேறு எவரும் பொறுப்பாளியாக இருக்கமுடியாது என்பதே இங்கு உண்மையாகும். ■

**உலகின் கவனத்திற்கு**

# சிறீலங்கா இராணுவத்தினால் அப்பாவிப் பொது மக்கள் பலிக்கடாக்களாக்கப்பட்டுள்ளனர்.

[12.05.00 அன்று யாழ் குடாநாட்டில் சிறீலங்கா இராணுவம் தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளும் தாக்குதல்களை நிறுத்தக் கோரியும், யுத்த நெருக்கடிக்குள் சிக்கியுள்ள பொதுமக்களுக்கு அத்தியாவசிய உணவுப் பொருட்களை அனுப்ப ஆவன செய்யுமாறும் தொண்டர் நிறுவனங்களின் மூலம் பல்வேறு வெளிநாட்டுத் தூதரகங்களுக்கு மன்னார் ஆயர் அவசர கடிதக் கோரிக்கை விடுத்துள்ளார். அதன் விபரத்திலிருந்து]



மன்னார் ஆயர் அருட்திரு. இராயப்பு ஜோசப் ஆண்டகை அவர்கள்.

சிறீலங்கா இராணுவத்தின் எறிகணை வீச்சுக்களால் மட்டுவில் பகுதியில் 500க்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டும், மேலும் பலர் காயமடைந்தும் உள்ளனர். இந்தப் பொதுமக்களைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தினுள் அனுமதிப்பதைவிட அவர்களைக் கொன்றுவிடுவதே மேல் என்பதே இராணுவத்தின் மனப்பாங்காக உள்ளது. சாவகச்சேரி, கொடிகாமம் ஆகிய பகுதிகளில் யுத்த நெருக்கடிக்குள் சிக்கியுள்ள அப்பாவிப் பொதுமக்களுக்கு அவசியமான உணவு, மருந்து மற்றும் அத்தியாவசியப் பொருட்களை உடனடியாகத் தொண்டர் நிறுவனங்களின் மூலம் கிடைக்கச் செய்யுங்கள்.

யாழ் குடாநாட்டின் யுத்தப்பிரதேசத்தினுள்ளே சிக்கியுள்ள அப்பாவிப் பொதுமக்களின் துயரமானதும், ஆபத்துமிக்கதுமான நிலைமைகள் கவலை தருவதாக உள்ளது. இந்தப் பிரதேசத்தில் இருந்து பெரும் கஸ்டங்களுக்கும், உயிராபத்துக்களுக்கும் நடுவே, சாவகச்சேரி பங்குத்தந்தை அருட்திரு. ஆனந்தகுமார் அடிகளார் 76 குடும்பங்களுடன் கிளிநொச்சி மாவட்டத்தின் கோணாவில் பகுதிக்கு வந்து சேர்ந்துள்ளார். சங்குப்பிட்டி- பூநகரி வழியாக 5 இலிருந்து 6 தினங்கள் கஸ்டமான பிரயாணத்தை மேற்கொண்டே இவர்கள் வந்து சேர்ந்துள்ளார்கள்.

அருட்தந்தை ஆனந்தகுமார் மடுவிலில் இருந்து என்னுடன் தொடர்புகொண்டு தங்களின் நிலைகுறித்தும், யுத்தப் பிரதேசத்தின் உயிராபத்து நிலைமைகள் குறித்தும் தெரியப்படுத்தினார். இந்த யுத்தத்தினால் இரக்கமற்ற முறையில் சிறீலங்கா இராணுவத்தினரால் அப்பாவிப் பொதுமக்கள் பலிக்கடாக்களாக்கப்பட்டுள்ளனர். இந்த துயரமான மரண நிலைமைகளில் இருந்து தப்பிச் செல்ல முடியாதவாறு அவர்கள் சிக்கியுள்ளார்கள். இவர்களிற் சிலர், இராணுவத்தினரின், தொடர்ச்சியான ஆட்லறி எறிகணைத் தாக்குதல்கள், விமானக்குண்டுத் தாக்குதல்களுக்கு மத்தியில் தங்கள் உயிர்களைப் பணயம் வைத்துப் பாதுகாப்பான பகுதிகளுக்கு வந்து சேர்ந்துள்ளார்கள்.

வன்னிக்கு சங்குப்பிட்டி- பூநகரி வழியாக துயரங்களுக்கு மத்தியில் இவர்கள் வந்து சேர்ந்துள்ளார்கள். இதேவேளையில் இந்த முயற்சியின்போது, பலர் கொல்லப்பட்டுள்ளார்கள். யுத்தத்தின் பிடியில் சிக்கியுள்ள பொதுமக்கள் பதுங்குகுழிகளுக்குள்ளேயே பட்டினியோடு உதவியற்ற நிலைமையில் சோர்ந்து கிடக்க நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளார்கள். எனக்குக் கிடைத்த தகவல்களின்படி, இந்தப்பிரதேசத்தில் 500ற்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டும், காயமடைந்தும் உள்ளனர். இந்தத் துக்ககரமானதும், ஆபத்தானதுமான நிலைமை தென்மராட்சிப் பகுதியின் ஏனைய பிரதேசங்களுக்கும் பரவி வருவதாக அறியக்கூடியதாக உள்ளது. மீசாலை, சரசாலை, ஏனைய பிரதேசங்களுக்கும் பரவி வருவதாக அறியக்கூடியதாக உள்ளது. மீசாலை, சரசாலை, மந்துவில் பகுதிகளைச் சேர்ந்த பொதுமக்கள் பாடசாலைக் கட்டிடங்களில் தஞ்சமடைந்துள்ளார்கள். கைதடி வயோதிபர் இல்லத்தில் மாத்திரம் இவ்வாறான 157 பேர் உதவியற்றவர்களாகவும், நோயாளிகளாகவும் இருக்கின்றார்கள். துரதிஸ்டவசமாக இந்த யுத்த நிலைமைக்குள் இருந்து பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேறிச் செல்வதற்கும் படையினர் அனுமதிக்கின்றார்கள் இல்லை.

ஆகவே மோசமடைந்து செல்லும் ஆபத்தான நிலைமையில் உள்ள சாவகச்சேரி, கொடிகாமம் பிராந்தியங்களைச் சேர்ந்த அப்பாவிப் பொதுமக்களுக்கு உணவு மருந்து மற்றும் அத்தியாவசியப் பொருட்களை யூ.என்.எச்.சி.ஆர் மற்றும் ஐ.சி.ஆர்.சி ஆகிய தொண்டர் நிறுவனங்களின் மூலமாக அப்பகுதிகளுக்கு அனுப்பிவைக்க அரசாங்கத்தையும், விடுதலைப் புலிகளையும், அனுமதிக்கச் செய்யுமாறு தங்களை வேண்டிக்கொள்கிறேன். அவசியமாக, தற்காலிகமான ஒரு போர் நிறுத்தத்தின் மத்தியில், இந்தப் பொதுமக்களை யுத்தத்தின் பிடியில் இருந்து, பாதுகாப்பாக வெளியேறிச் செல்ல வழி செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன். ■



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தொட்டில் பிள்ளையும் துடிக்குதிங்கே தமிழீழம் காண...

பணிவோடு கேட்டான் பண்பான வீரன்.
உரிமையோடு கேட்டான் உண்மையின் ஒளியான்.
அச்சுறுத்தி எச்சரித்தான் அன்றே எம் தலைவன்.
பண்புடனே விடுவித்தான் பகைவரையும் சோதரர் போல்
சொன்னதைச் செய்தான் எம் தமிழ் வீரன்.
திட்டமிட்டே செய்தான் எம்மவர் எதிர்காலத்தை.

புலி வீரர் கழுத்தில் மாலை விழ – தெற்கில்
புதல்வர் இல்லாதது கண்டு புலம்ப
மாமனும் மருமகளும் கட்டியழ
மாமான் முகம் துடைக்க மருமகள்
முந்தானை கொடுக்க
முச்சிரைக்க மாமன் ஓடி வர மக்கள்
முண்டு கொடுத்து கைபிடித்து வர மனம் விரும்புதே!

பளைப் படைத்தளம் பற்றியெரிய
பாரிய ஆயுதங்கள் கையில் கிடைக்க
இயக்கச்சியில் விழுந்த இடியில் தளம்
இருந்த இடம் தெரியாமல் போனது போல
நாவற்குழியும் இதற்குள் அடங்குதே!

ஆனையிறவெங்கே? இயக்கச்சியெங்கே?
இனிவரும் காலத்தில் யாழ்ப்பாணம் எங்கே?
பலாலி எங்கே? காங்கேசன்துறை எங்கே?
இன்னும் காலம் போகவில்லை
இன்றும் போகலாம் இல்லை நாளையும் போகலாம்
தவறினால் நாளை மறுதினம் எம் தாய் மண்ணில்
நீங்கள் பிணமாகவும் போகலாம்
முடிவு உங்கள் கையில்தான்.

நான் வைக்கும் மாமரம் எனக்கல்ல என் சந்ததிக்கே
எம் தலைவன் திட்டம் எமக்கும் எதிர்கால
எம் சந்ததிக்கும் அதன் பின்னாலுள்ள சந்ததிக்கும்
மறக்காதே! என் மகனும் உன்னிடம் கேட்பான்!
இன்று தொட்டில் பிள்ளையும் துடிக்குதிங்கே
தமிழீழம் காண்பதற்கு!!

-பிரின்ஸ் - ஜோர்ஜ் - பிரான்ஸ்-



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பேய்களின் கூட்டு

யாழ் போர்முனையில் உள்ள ஆயுதப் படையினருக்கு விரைவில் நவீன ஆயுதங்கள் வாங்கப்படும். எனவே யாழ்ப்பாணத்தைத் தக்க வைத்துக் கொள்வதற்கு படையினர் தீவிரமாகப் போராட வேண்டும் என சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கோரியுள்ளார். மேலும், இராணுவத்தினருக்குப் போர் வெறியூட்டும்வகையில் பேரினவாத உணர்வைக் கிளறிவிடவும் முற்பட்டுள்ளார்.

நமது வரலாற்றில் மிகப்பெரும் மன்னர்களான துட்டகைமுனு, கஜபாகு, விஜயபாகு, பராக்கிரமபாகு ஆகியோர்கூட சில கட்டங்களில் யுத்த களத்தில் பின்னடைவுகளைச் சந்தித்தார்கள். ஆனால், இறுதியில் வென்றார்கள். அதுபோலவே இன்றைய எமது பின்னடைவுகளில் இருந்து மீண்டெழுந்து வெற்றியைப்பெற வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சிங்கள ஆட்சியாளர்கள் எப்பொழுதுமே துட்டகைமுனுக்களாகவும் பராக்கிரமபாகுக்களாகவுமே இருக்கவிரும்பினார்கள். இதன் காரணமாகவே தமது படை அணிகளுக்குக்கூட அவர்கள் அம் மன்னர்களின் பெயர்களை இட்டுள்ளார்கள். அதாவது இனவாதிகளாகவும் பேரினவாதிகளாகவுமே இருக்க விளைந்தார்கள். இதன் காரணமாக இலங்கையில் இனப்பிரச்சினை என்பதும் பெரும் இரத்தம் சிந்தும் அளவிற்கு தற்பொழுது யுத்தம் ஏற்படக் காரணமாகியது.

இதேபோன்றே சிறீலங்கா ஆட்சியாளர்கள் இலங்கைத் தமிழ் மக்களுக்கு எதிரான நடவடிக்கைக்கென உலகின் எவருடனுமே கூட்டுச் சேரவும், எவற்றை இழக்கவும் தயாராகவே இருந்தனர். இது தனியாக இன்றைய ஆட்சியாளர்களுக்கு மட்டுமல்ல சந்திரிகா குமாரதுங்க கூறிய சிங்களப் பெருமன்னர்களுக்கும் பொருந்தும்.

சிங்கள மன்னர்களான துட்டகைமுனுவும் சரி, பாராக்கிரமபாகுவும் சரி இலங்கையின் வரலாற்றில் தமிழருக்கு எதிராகவே போரிட்டார்கள். சில வேளைகளில் தமக்குள்ளும் போரிட்டுக் கொண்டார்கள். அதாவது அன்றும் சிங்கள ஆட்சியாளர்கள் தமிழருக்கு எதிராகவே போரிட்டார்கள். இன்றும் அதுவே தொடர்வதாக உள்ளது.

இதேசமயம் சிங்கள ஆட்சியாளர்கள் தமிழருக்கு எதிரான போரில் எவருடனும் கூட்டுச் சேரவும் தயாராய் இருந்தனர். சிறீலங்காவின் முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் மொழியில் கூறுவதானால் எந்தப் பேயுடனும் கூட்டுச்சேர அவர்கள் தயாராகவே இருந்தனர். இதற்காக அவர்கள் கொள்கை கோட்பாடுகள் என்பனவற்றைப் புறம்தள்ளவும் தயாராகவே இருந்தனர்.

இன்று சந்திரிகா அரசின் கோரிக்கைக்கு இணங்கி இஸ்ரேலும், பாகிஸ்தானும் நவீன குண்டுவீச்சு விமானங்கள், எறிகணைச் செலுத்திகள், பெருமளவு வெடிப்பொருட்கள் என்ற ரீதியில் முதற்கட்ட உதவிகள் கிடைக்கப் பெற்றுள்ளன. ஆனால் இவற்றை மட்டும் கொண்டு போரை வெற்றிபெற முடியுமா? இது வேறு விடயம்.

சந்திரிகா குமாரதுங்க யுத்தத்திற்காக உறவுகொண்டுள்ளவர்கள், உதவமுன்வந்தவர்கள் உலகின் பேய்களாகக் கருதத்தக்கவர்கள் என்பதில் சந்தேகமில்லை. இஸ்ரேலியர்கள் இனஅழிப்பு நடவடிக்கையில் பெயர் பெற்றவர்கள். பாகிஸ்தானியர்களோ ஜனநாயக விரோதச் செயல்களிலும், இஸ்லாமியத்தின் பெயரில் சர்வதேச ரீதியில் பயங்கரவாதத்தை ஏற்றுமதி செய்பவர்கள் என்ற குற்றச்சாட்டிற்கும் உள்ளாகி உள்ளார்கள். இந்த வகையில் சந்திரிகாவும் பேய்களுடன்தான் கூட்டுச் சேர்ந்துள்ளார் என்பதில் சந்தேகம் இல்லை. இவ்வாறாகக் கூட்டுச் சேர்வதற்கு சிங்கள ஆட்சியாளர்களும் இனவெறிப் பேய்களாக இருப்பதே காரணம் ஆகும். அவ்வாறு இல்லாது மனிதர்கள் எவ்வாறு பேய்களுடன் கூட்டுச்சேர முடியும்.

ஆனால் சிறீலங்காவின் இப்போக்கும் நடவடிக்கையும் இலங்கைத் தமிழ் மக்களுக்கு ஒன்றும் ஆச்சரியமானதல்ல. அத்தோடு, எப் பேய்களைக் கண்டும் தமிழ் மக்கள் அஞ்சிவிடப் போவதில்லை. ஆனால் சிறீலங்காவை உலகம் குறிப்பாக இலங்கை இனப்பிரச்சினைக்கு அரசியற் தீர்வு பற்றியும் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் தமக்கு ஆபத்தானதாகக் கற்பிதம் செய்பவர்களும் புரிந்து கொள்ளுதல் அவசியமானதாகும். ஏனெனில் சிறீலங்காவின் நட்புகள் தமிழர்களைப் பாதிப்பதை விடஅவர்களின் நலன்களைப் பெரிதாகப் பாதித்துவிடக்கூடும். ■

ஈழ
ம
வன்னியிலிருந்து
பத்திரிகையில்
ஆசிரியர் தலைய



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அர்த்தமற்ற வாதம்!

இந்தியாவில் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் நடவடிக்கைகளைத் தடை செய்வதற்கும் தமிழீழத்தை அங்கீகரிப்பதற்கும் இந்தியத் தரப்பில் தெரிவிக்கப்படும் காரணம் அர்த்தமற்றதும், யதார்த்தத்திற்குப் பொருத்தப்பாடற்றதுமாகும். அதாவது தமிழீழம் உருவாகின் அது இந்தியாவில் குறிப்பாக தமிழ்நாட்டில் தனிநாட்டுக்கோரிக்கை தலைதூக்கலாம் என்று கூறும் காரணம் பொருத்தமற்றது.

இந்தியத் தரப்பில் இவ்வாதமானது பொருத்தப் பாடானதொன்றெனில், இன்று உலகில் தனி அரசைக்கொண்ட ஒரு இனம் வேறு எந்தவொரு நாட்டிலுமே சிறுபான்மை இனமாக அமைதியாக இருக்கமுடியாது. ஏனெனில் தனியரசாகவுள்ள இவ் இன அரசு தமதினம் சிறுபான்மையாக உள்ள நாடுகளில் போராட்டத்திற்கு வித்திட்டுவிடும்.

ஆனால் உலகில் அவ்வாறு எதுவுமே இல்லை. ஒரே இனத்தவர்கள் பல நாடுகளைக் கொண்டவர்களாக இருக்கின்றனர். வேறு நாடுகளிலும் சிறுபான்மையினராகவும் இருக்கின்றனர். அதிலும் அண்டை நாடுகளாகக்கூட உள்ளனர்.

ஒரு நாட்டில் உள்ள சிறுபான்மை இனம் ஒன்று தான் பிரிந்து செல்ல விரும்புகின்றதெனில் அதற்கு அடிப்படையாக அமையக்கூடியது அவ்வினம் இனரீதியில் ஒடுக்கப்படுகின்றது என்பதே ஆகும். இந்த நிலையில் அவ் இனம் தனது பாதுகாப்பிற்காகவும் சுதந்திரத்திற்காகவும் போராடவும் தனி அரசு ஒன்றை அமைக்கவும் முற்படுகின்றது.

இவ்வாறு சிறுபான்மை இனம் ஒன்று முற்படுகையில், இவ்இனம் சுதந்திரம் பெறின் தமது நாட்டிலும் போராட்டங்கள் வலுவடையும் எனக்கூறி அண்டை நாடு அதனை அங்கீகரிக்க மறுப்பது அபத்தமானதொன்றாகும். ஏனெனில் சிறுபான்மை இனம் என்பதற்காக உலகில் உள்ள சிறுபான்மை இனங்கள் எல்லாம் சுதந்திரம் கோரிப்போராடவில்லை. அண்டை நாட்டில் விடுதலைப்போராட்டம் நடப்பதினால் தாமும் போராட இவர்கள் முற்படவும் இல்லை.

அதாவது ஒரு பல்லின நாட்டில் ஒரு சிறுபான்மை இனத்தவரோ அன்றி பல சிறுபான்மை இனத்தவரோ தமது சுதந்திரத்திற்காகவும் விடுதலைக்காகவும் போராடமுற்படுகின்றனர் எனில் ஆட்சிமுறை தவறானதாக, மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண முடியாதவர்களாக இருப்பதே காரணமாகும். அவ்வாறு இல்லாவிடில் அவர்கள் ஏன் போர்க்கொடி தூக்கவேண்டும்.

மாறாக ஒரு நாட்டில் சமநீதியும் சமத்துவமும் நிகழும் எனில் அங்கு போராட்டம் தலைதூக்குவதற்கான வாய்ப்பும் இல்லை. அண்டை நாட்டில் அரசின் இன ஒடுக்குமுறைக்கு எதிராக ஒரு விடுதலைப்போராட்டம் நடத்தப்பட்டுக் கொண்டிருப்பினும் கூட நாட்டில் சகல மக்களும் சமஅந்தஸ்த்துடன், சமநீதியுடன் வாழ்கின்றனரெனில் அங்கு விடுதலைப்போராட்டமோ வர்க்கப் போராட்டமோ உருவாவதற்கு வாய்ப்பில்லை.

மேலும், ஒரு நாடு இனரீதியிலோ, மொழிரீதியிலோ, அன்றி மதரீதியிலோ பிரிக்கப்படின் அண்டை நாடுகளிலும் அவ்வாறே நிகழும் என எதிர்பார்ப்பதும், கருத்துக் கூறுவதும் மடமையாகும். அதிலும் இந்திய அரசு கூறுவது வரலாற்றை மறுதலிப்பதாகும்.

ஏனெனில், இவ்வாறான அனுபவம் இந்தியாவிற்கே உண்டு. எடுத்துக்காட்டாக பங்களாதேசத்தை இந்தியா தனது படைப்பலத்தால் மீட்டெடுத்துக் கொடுத்தபோது மேற்குவங்காளிகள் தமக்கும் தனிநாடு வேண்டும் எனக் கோரவில்லை. இதேபோன்றே இனரீதியாக, மொழிரீதியாக நாடுகள் பிரிக்கப்படும் போது மற்றவன் பிரிந்து செல்கின்றான் நானும் பிரிந்து செல்ல வேண்டும் என்ற கோரிக்கைகளும் எழுவதில்லை. அதிலும் குறிப்பாக தமிழ்நாடு போன்றவற்றில் இவ்வாறான கோரிக்கைகள் எழுவதற்கான வாய்ப்பே இல்லை. ஏனெனில் அவர்களின் இன்றைய அரசியல் வேறு.

ஆகையினால், தமிழகத்தில் தனிநாட்டுக் கோரிக்கை எழாமல் தடுப்பதற்காக இலங்கைத் தமிழ் மக்களின் உரிமைக் கோரிக்கை ஏற்பதற்கில்லை என்ற வாதமானது தமிழகத்திலும் மக்கள் சுதந்திரமான பாதுகாப்பான வாழ்வைக் கொண்டிருக்கவில்லையா என்ற கேள்வியை எழுப்புவதாக உள்ளது. மடியில் கனமுள்ளவன்தான் வழிப்பயணத்திற்கு அஞ்சுபவனாக இருப்பான் என்பது முதுமொழி. ■

நாதம்
ள் தினசரி
ளிவரும் ஈழநாதம்
வந்த
கங்கள்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



— ஜெயராஜ் தமிழீழம் —

# யாழ். நகரின் கிழக் ஓயாத அலைகள்

ஓயாத அலைகள் - 03இன் மூன்றாம் கட்டம் வடக்கு நோக்கித் திரும்பியபோது யாழ் குடாநாட்டுக்குள் மூன்று களமுனைகள் திறக்கப்பட்டன. இம் மூன்று முனைகளும் அன்று இராணுவ நோக்கர்களினால் ஆனையிறவுப் பெரும் படைத்தளத்தின் மீதான தாக்குதல் தந்திரோபாயத்தின் ஒரு பகுதியாகவே பார்க்கப்பட்டது. அது யாழ் குடாநாட்டு மீட்பிற்கான ஒட்டுமொத்த மூலோபாயத்தின் ஓர் அங்கமாக அவ்வேளையில் பார்க்கப்படவில்லை.

ஆனால் ஆனையிறவுப் பெரும் படைத்தளம் ஓயாத அலைகள் - 03 படையணிகளினால் வெற்றிகொள்ளப்பட்ட பின்னர் கடந்த மே பத்தாம் திகதி வலிகாமத்தில் அரியாலை கிழக்கில் இருந்தும், தென்மராட்சியின் கேரதீவு, அறுகுவெளிப் பகுதியில் இருந்தும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டபோதே இவ்யுத்த முனைகளின் முக்கியத்துவம் பலரையும் திகைப்படைய வைத்தது.

ஏனெனில் அரியாலை கிழக்கில் இருந்து ஓயாத அலைகள் - 03 படையணிகள் மேற்கொண்ட ஒருநாள் நகர்வே யாழ்நகரின் கிழக்குப்புற வாயிலைப் புலிகளின் கைகளில் வீழ்த்தியது. அதாவது ஓயாத அலைகள் - 03 படையணிகள் யாழ் மாநகரசபை எல்லைக்குள் சுமார் இரு கிலோமீற்றர்கள் வரை முன்னேறியிருந்தன.

இதேவேளை தென்மராட்சியின் கிழக்கில் நாவற்குழி, கைதடிப் படைத்தளங்களை அழித்து யாழ் குடாநாட்டின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்ததொரு நிலையை ஓயாத அலைகள் படையணிகள் கைப்பற்றுவதற்கு வாய்ப்பை உருவாக்கிக் கொடுத்ததாகவும் இருந்தது.

இந்தவகையில் ஓயாத அலைகள் - 03இன் ஐந்தாம் கட்ட நடவடிக்கை ஒரு வாரகாலத்தில் யாழ் குடாநாட்டின் களமுனையில் பெரும் திருப்பங்களை ஏற்படுத்தும் அளவிற்கு ஓயாத அலைகள் - 03இன் மூன்றாம் கட்ட நகர்வு அடித்தளம் இட்டிருந்ததெனலாம். இது தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு பிரபாகரனின் எதிர்கால நடவடிக்கைக்கான மதிநுட்பத்துடன்கூடிய திட்டமிடலின் வெளிப்பாடே ஆகும்.

ஆனால் தேசியத் தலைவர் அவர்களின் இந்நகர்வினை சிறீலங்காத் தரப்பில் எவருமே புரிந்திருந்ததாகத் தெரியவில்லை. அவ்வாறு புரிந்திருப்பின் குறைத்தது கிழக்கு அரியாலைப் பகுதியில் இருந்தாவது புலிகளை வெளியேற்ற இராணுவத்தரப்பு ஒன்றிற்கு மேற்பட்ட தடவை முயற்சிகள் மேற்கொண்டிருத்தல் வேண்டும். ஏனெனில் அது ஏற்படுத்தக்கூடிய விளைவு யாழ் நகரம் குறித்து கேள்வி எழுப்பக்கூடியது. அவ்வாறு மேற்கொண்டிருந்தால்க்கூட வெளியேற்றி இருக்க முடியுமா என்பது வேறுவிடயம்.

ஆனால் ஓயாத அலைகள் - 03 படையணிகள் 11ஆம் திகதி அரியாலை, மணியந்தோட்டம், கொழும்புத்துறை, கோயிலாக்கண்டி, தனங்கிளப்பு படைத்தளங்களையும், 17ஆம் திகதி நாவற்குழி, கைதடியின் நிலைகளையும் கைப்பற்றியபோது அது யாழ் குடாநாட்டில் யுத்த களநிலவரத்தில் பெரும் மாற்றத்தை விளைவிக்கும் ஒன்றாகக் கருதப்பெற்றது.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# த வாயிலில்
# 3 படையணிகள்

எவ்வாறெனில் இந் நகர்வுகள் ஏ9 பிரதான வீதியின் யாழ்நகருக்கும் சாவகச்சேரிக்கும் இடையில் சுமார் ஆறு கிலோ மீற்றர் நீளமான பாதையைப் புலிகளின் கட்டுப்பாட்டில் கொண்டுவர வழிசெய்தது. இதில் வலிகாமத்திற்கும், தென்மராட்சிக்கும் இடையிலான இரு பாதைகளும் யாழ் குடாநாட்டிலிருந்து வன்னிப் பிரதேசத்திற்கான இரண்டாவது பிரதான பாதையான நாவற்குழி கேரதீவு சந்தியும் யாழ் குடாநாட்டின் மையப்பகுதி போன்றதொரு நிலப்பகுதியும் புலிகளின் கட்டுப்பாட்டினுள் வந்தது. இந்நிலையானது இராணுவ ரீதியில் பல்வேறு வகையில் முக்கியம் பெற்றதாக இருந்தது.

1. ஆனையிறவுப் பிரதேசம் எவ்வாறு யாழ் குடாநாட்டின் நுழைவாயிலோ அதேபோன்று யாழ்நகரினதும் வலிகாமத்தினதும் நுழைவாயிற்பகுதியான அரியாலைப் பகுதி புலிகளின் கட்டுப்பாட்டினுள் வந்தது.

2. வலிகாமத்திற்கும், தென்மராட்சிக்கும் இடையிலான தரை வழிப்பாதைகள் இரண்டு. ஒன்று கண்டிவீதி மற்றையது கோப்பாய் கைதடி வீதி. இவை புலிகளின் பிடிக்குள் வந்தது.

3. மறுவளமாக வலிகாமத்தின் தென் கிழக்குப் பகுதியில் தென்மராட்சியின் மேற்குப் பகுதியிலும் நிலை கொண்டிருந்த ஓயாத அலைகள் - 03 படையணிகள் தரைமார்க்கமாக இணைவதற்கு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தது.

4. இவையாவற்றிக்கும் மேலாக நாவற்குழி, கைதடிப் பகுதிகள் யாழ் குடாநாட்டின் மையப்பகுதி போன்றதாகும். இதன் காரணமாக இப் பிரதேசத்தைக் கட்டுப்பாட்டில் கொண்டு வந்தது. யாழ் குடாநாட்டின் பலபகுதிகளும் குறிப்பாக சிறீலங்கா ஆயுதப் படையினரின் பிரதான விநியோக மார்க்கங்கள் மீதும் பலாலிப் படைத்தளம் காங்கேசன்துறை துறைமுகம் என்பன மீதும் ஓயாத அலைகள் - 03 படையணிகளின் எறிகணைத் தாக்குதலுக்கு இலக்காகும் வாய்ப்புகளையும் கொடுத்தது.

அதாவது நாவற்குழி கைதடிப் பகுதியின் வீழ்ச்சியானது சிறீலங்கா இராணுவத்தின் யாழ் குடாநாட்டின் இருப்புக் குறித்து கேள்விகளைப் பலமாகவே கேட்கவைக்கும் ஒன்றாக மாறக்கூடியது எனலாம். எடுத்துக் காட்டாக வலிகாமத்தில் இருந்து தென்மராட்சிக்கான இரு விநியோகப் பாதைகள் துண்டிக்கப்பட்ட நிலையில் சிறீலங்கா இராணுவம் இனிப் போரிடுவதானாலும் சரி வெளியேறுவதானாலும் சரி குறிப்பிட்ட ஓரிரு பாதைகளையே பயன்படுத்தவேண்டிய நிலை உருவாகியுள்ளது. அது எவ்வளவு காலத்திற்குப் பேணப்படத்தக்கது என்பது ஒருபுறம் இருக்க இது எவ்வளவு அவலமும் ஆபத்தையும் கொடுக்கும் என்பதை இராணுவம் கிளிநொச்சியிலும், ஆனையிறவிலும் பெற்றுக் கொண்ட அனுபவத்தை மறந்திருக்க வாய்ப்பில்லை.

இதேசமயம், யாழ்நகர் மீதும் புலிகளின் உக்கிரமான தாக்குதல்கள் எவ்வேளையிலும் நிகழலாம் என்றதொரு நிலையும் உருவாகியுள்ளது.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அதாவது அரியாலை கிழக்கில் இருந்து முன்னேறிய ஓயாத அலைகள் - 03 படையணிகள் யாழ்நகரின் மையத்தில் இருந்து மூன்று கிலோமீற்றர் தொலைவில் நிலைகொண்டிருப்பினும், வன்னியுடனான தொடர்பு கடல் மார்க்கமானதாகவே இருந்ததன் காரணமாக சில இடையூறுகள் இருக்கவே செய்தன. தற்போதைய நிலையில் கேரதீவு சங்குப்பிட்டி பாதையூடான வன்னித் தொடர்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளதன் காரணமாக யாழ்நகர் மீதான தாக்குதலுக்கான தயாரிப்பு ஓயாத அலைகள் - 03 படையணிகளுக்கு இலகுவான தாகியுள்ளது.

ஆனால், இவையாவற்றையும்விட தற்பொழுது பலாலிப் படைத்தளமும், காங்கேசன்துறைப் படைத்தளமும் ஓயாத அலைகள் - 03 படையணிகளின் பீரங்கித் தாக்குதல் வீச்சிற்கு முழுமையாக உட்பட்டுள்ளமையானது இராணுவத் தரப்பிற்குப் பெரும் பாதிப்புக்களை விளைவிக்கும் ஒன்றாக மாறியுள்ளது. ஏனெனில் யாழ் குடாநாட்டில் நிலைகொண்டுள்ள சுமார் 35,000 துருப்புக்கள் இவ்விமானத் தளத்தினூடாகவும் துறைமுகத்தின் ஊடாகவும் கிடைக்கப்பெறும் விநியோகத்தையே நம்பியுள்ளன. இவை இரண்டும் பீரங்கித் தாக்குதல் வீச்சுக்குள் உள்ளாவதினால் விநியோகம் பெரும் பாதிப்பிற்கு உள்ளாவது தவிர்க்க முடியாததாகவே இருக்கும்.

இதற்கும் அப்பால் பலாலி விமானப் படைத்தளமே காயமுற்ற இராணுவத்தை தென்னிலங்கைக்குக் கொண்டு செல்வதற்கான மார்க்கமாகவுள்ளது. இந்நிலையில் இத்தளத்தின் ஓடுபாதை பாதிக்கப்பட்டாலோ இத்தளம் தாக்குதலுக்கு உள்ளானாலோ அது காயமுற்ற படையினரை வெளிக்கொண்டு செல்லப் பெரிதும் சிரமம் அளிப்பதாகவே இருக்கும். அதே சமயம் இப்படைத்தளத்திலுள்ள இராணுவ வைத்தியசாலையே காயமுற்ற படையினருக்கு உடனடி வைத்திய சேவையை வழங்கும் இடமாக உள்ளது. இவ் வைத்தியசாலையும் தனிப் பிரதேசத்திற்குள் இருப்பதினால் பாதிப்பிற்கு உள்ளாவது தவிர்க்க முடியாது போய்விடலாம்.

இதேவேளை ஓயாத அலைகள் - 03 படையணிகளின் தற்போதைய நகர்வானது கண்டி பிரதான வீதியில் கிழக்குப் புறமாகத் திரும்பி சாவகச்சேரி நோக்கியதாக அமைந்துள்ளது. இந்நிலையில் யாழ்நகரத்திற்கு முன்பாக தென்மராட்சிப் பகுதியினை ஓயாத அலைகள் - 03 படையணிகள் தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர முற்படக்கூடும்.






அவ்வாறானதொரு நிலை உருவாகும் பட்சத்தில் ஓயாத அலைகள் -03 படையணிகள் வலிகாமப் பகுதியிலும் மேற்கொள்ளப்பட வேண்டிய அடுத்த கட்ட நடவடிக்கைகளுக்கு தென்மராட்சிப் பிரதேசம் பெரும் வாய்ப்பானதாக அமையும்.

மறுவளமாகச் சிறீலங்கா இராணுவம் தென்மராட்சிப் பகுதியை இழப்பின் இராணுவத்தைப் பொறுத்து அது மிகவும் அபாயகரமானது. இதனை இராணுவ அதிகாரிகள் புரிந்து கொண்டிருப்பினும் ஆட்சியாளர்கள் ஏற்றுக் கொள்வார்களா என்பது கேள்வியே.

இவர்கள் நவீன ஆயுத தளபாடங்கள் மூலம் நிலைமையைச் சீர்செய்துவிடலாம் என்ற ரீதியில் பெருமளவு ஆயுத தளபாடக் கொள்வனவில் ஈடுபட்டுள்ளனர். இதன் மூலம் இராணுவத்தினைக் குடாநாட்டில் நிலை நிறுத்திவிடலாம் எனக்கருதுகின்றனர். அத்தோடு வெளியாரின் ஆதரவுகிட்டும் எனவும் காட்டவிளைகின்றனர்.

இது எவ்வாறு இருப்பினும் ஓயாத அலைகள் - 03 படையணிகளின் அடுத்தகட்ட நகர்வை அது எதிர்கொள்வது மிகவும் கடினம் மிக்கதொன்றாகவே இருக்கும். ஆனையிறவுப் பெரும் படைத்தளம் இழக்கப்பட்டபோது யாழ் குடாநாட்டில் இராணுவத்தின் இருப்புக் குறித்த கேள்வி எழும்பியிருந்தது. ஆனால் சிங்கள வரட்டுக் கௌரவம் அதனை ஏற்கவில்லை.

ஆனால், தற்பொழுதுகூட அவர்கள் சூழ்நிலையைப் புரிந்து கொள்வார்களா? என்பது சந்தேகமே. ஆகையினால் யாழ் குடாநாட்டிலுள்ள சிறீலங்கா இராணுவம் பெரும் அபாயம் நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது என்று மட்டுமே தற்பொழுது கூறக்கூடியதாகும். ■



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நிலமீட்பு என்ற இராணுவ அம்சமும் நிரந்தர அரசியல் விடுதலைக்கான ஆரம்பமும்

எப்போது சாத்தியமாகும் என தமிழ்மக்கள் ஆதங்கப்பட்ட ஒரு இராணுவ நிகழ்ச்சி அனைத்துத் தரப்பினரையும் ஆச்சரியத்திற்குள்ளாக்கியபடி சாத்தியமாக்கப்பட்டுவிட்டது.

வடபுல மக்களது வாழ்வியல் அவலத்திற்க்கு முக்கிய காரணியாகவும், தமிழர்சேனையின் இராணுவபல வளர்ச்சிக்கு பலத்த சவாலாகவும் திகழ்ந்துவந்த ஆனையிறவுப் பெருந்தளம் புலி வீரர்களால் அழித்தொழிக்கப்பட்டுவிட்டது.

தலைவர் பிரபாகரனது மதிநுட்பமான தாக்குதல் திட்டத்துடன்கூடிய துணிச்சலான தந்திரோபாயப் படைநகர்த்தலுடன், போராளிகளின் வீரம் செறிந்த போர்த்திறனும் ஒன்றிணைந்து இந்த இராணுவ அற்புதத்தை நிகழ்த்திக்காட்டிவிட்டன.

ஆனையிறவு நிலப்பரப்பு வகித்து வரும் பூகோளத் தனித்துவத்தால் எழுந்த இராணுவ முக்கியத்துவம் காரணமாக, ஆனையிறவுத்தளம், வடபுலப்போரரங்கின் பிரதான கேந்திர நிலையாக விளங்கிவருகின்றது.

இந்தக் கேந்திர நிலத்தின் இராணுவக் கட்டுப்பாட்டை சிங்களப்படையிடமிருந்து புலிகள் இயக்கம் கைப்பற்றியதன் மூலம் தமிழீழ விடுதலைப் போராட்டம் பெரியதொரு அரசியல் - இராணுவ வெற்றியை தனதாக்கியுள்ளது.

ஆனையிறவு நிலமீட்பும் அங்கிருந்து புலிவீரர்களால் கைப்பற்றியெடுக்கப்பட்ட நீண்டதூர வீச்சைக்கொண்ட ஆட்டிலறிப் பீரங்கிகளும் குடாநாட்டுச் சமர்க்களத்தின் இராணுவச் சமநிலையை புலிகள் இயக்கத்திற்குச் சார்பாகத் திசைதிருப்பிவிட்டுள்ளது.

இந்தச் சமநிலை மாற்றம் சிங்கள - பௌத்த பேரினவாத அரசாங்கத்தை நிலைதளரச் செய்துவிட்டது.

தமிழீழ விடுதலைக்கான ஆயுதப் போராட்ட வரலாற்றில் முதற்தடவையாக சிங்களத் தேசம் தொடர் அபாயங்களை உள்ளுடனாகக் கொண்ட ஒரு மாபெரும் இராணுவத் தோல்வியை அனுபவித்தபடியுள்ளது.

சிங்கள மக்கள் - சிறீலங்கா அரசாங்கம் - சிங்களப் படைத்துறை - பேரினவாத அமைப்புக்கள் - சிங்களத் தொடர்பூடகங்கள் என சிங்களதேசமே இந்தத் தேசியத் தோல்வியையும் இதன் விளைவாக குடாநாட்டில் நிலைகொண்டுள்ள படையினர் சந்திக்கப் போகும் பேரனர்த்தம்மிக்க நெருக்கடி நிலையையும் எண்ணிப் பீதியடைந்துள்ளன.

ஆனையிறவுப் பெருந்தளத்தை வெல்லப்படமுடியாத கோட்டை என்றும், வீழ்த்தப்படமுடியாத படைத்தளம் என்றும் தான் நம்பியதுபோல சிங்கள அரசாங்கம் உலகத்தையும் நம்பச் செய்தது.

இந்தப் பேரினவாத இராணுவ நம்பிக்கையை உடைத்தெறிந்த புலிகள் இயக்கம் போரியல்ரீதியாக ஒரு இராணுவ சாதனையைப் படைத்ததுடன், சர்வதேசத்தின் கவனத்தையும் ஈர்த்து தமிழ் மக்களைப் பூரிப்பிலும் ஆழ்த்திவிட்டது.

புலிகள் இயக்கம் வெளிப்படுத்திய இந்தப் பலவளர்ச்சிகண்டு ஈழத்தமிழர்கள் புளகாங்கிதம் அடைந்துள்ளனர்.

தமிழர்சேனையைக் களமிறக்கி தமிழர் தாயக நிலம் முழுமையையும் படிப்படியாக மீட்டெடுக்கப் புலிப்படையால் முடியும் என்ற இராணுவ உண்மையை ஆனையிறவு வெற்றிமூலம் புலிகள் இயக்கம் தெட்டத்தெளிவாக நிரூபித்துள்ளது.

படைவலுவைப் பயன்படுத்தி புலிகள் இயக்கம் காலத்திற்குக் காலம் தமிழர் தாயகத்தின் கணிசமான அளவு நிலத்தை கட்டுப்பாட்டினுள் வைத்திருந்தாலும், அது ஒரு நிரந்தரமான இராணுவ அம்சமாக இருந்திருக்கவில்லை. கைமாறிக் கைமாறி ஒரு ஊசலாட்டப் போக்கிலேயே காணப்பட்டது.

ஆனால், ஓயாத அலைகள் மூன்று படை நடவடிக்கை இந்த தற்காலிக இராணுவ அம்சத்திற்கு முடிவுகட்டிவிட்டதெனலாம்.

ஆக்கிரமிக்கப்பட்ட வன்னிப் பெரு நிலப்பரப்பில் பெரும் பகுதியையும் விடுவித்து ஆனையிறவு நிலத்தையும் மீட்டெடுத்ததுடன் இப்போது விடுதலைப் போராட்டத்தில் நிரந்தரமான இராணுவ அம்சமாக நிலைபெற்றுவிட்டது. இதன் வாயிலாக தமிழரின் அரசியல் இலட்சியமான தமிழீழத் தனியரசு உறுதியான தளத்தில் உருவாகத் தொடங்கிவிட்டது.

*“விடுதலைப்புலிகள்” பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கம். [வைகாசி–ஆனி 2000]*



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சொந்தப் படையில் ந
# இழந்த சிங்களம்

-வேலவன்-



சிறீலங்காவின் இராணுவச் சிப்பாய் பெருமையுடன் கூறினார். "நானும்கூட அதிசிறப்பு வாய்ந்த சிறீலங்கா இராணுவத்தைச் சேர்ந்தவன்"

மேற்கூறப்பட்ட துணுக்கு வன்னியில் சிங்கள இராணுவம் கைவிட்டோடிய முகாமொன்றில் கண்டெடுக்கப்பட்ட குறித்த ஒரு படைப்பிரிவால் வெளியிடப்பட்ட பிரசுரம் ஒன்றில் காணப்பட்டதாகும்.

தற்பெருமை அடித்துக்கொள்வது என்பது சிறீலங்கா இராணுவத்திற்கு மட்டுமல்ல சிங்கள இனவாதிகளுக்கே இயல்பான ஒரு குணாம்சமாகும்.

ஆனால், இந்த "அதிசிறந்த" இராணுவத்தின் இன்றைய நிலைமை என்ன? அவ்வாறு சிறீலங்கா இராணுவத்தின் சிறப்புக்குறித்து இன்று பெருமைப்படுபவர்கள் யார்?

ஆனையிறவுப் பெருந்தளத்தின் வீழ்ச்சியைத் தொடர்ந்து தென்னிலங்கையிலுள்ள சகல தரப்புகளும் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் இந்தக் கேள்வியையே எழுப்புகின்றன.

"விடுதலைப் புலிகளை நசுக்க இந்தியா உதவவேண்டும். இதற்காக உடனடியாக இராணுவ உதவியை நாம் கோர மாட்டோம். இந்தியக் கடற்படை மட்டுமல்ல விமானப்படையும் எமக்கு உதவ முடியும். தேவையானால் இராணுவ உதவியைக்கூட கோருவோம்" இவ்வாறு சகல பௌத்த பீடங்களினதும் ஒருமிய மாக தேசிய பௌத்த கவுன்சிலின் தலைவர் வண மாதலுவாவே சோபிததேரர் இந்தியத் தூதுவரைச் சந்தித்துக் கூறியிருக்கிறார்.

அவர் இந்தியத் தூதுவருடன் உரையாடிவிட்டு வெளியே வந்து "செச்சினியப் போராளிகளை அடக்கிய ரஷ்யாவிடம் ஏன் சீனாவிடம் கூட நாம் உதவி கோரலாம்" என பத்திரிகைகளுக்குத் தெரிவித்திருக்கிறார். தொடர்ந்தும் இந்தியத் தூதுவரைச்சந்தித்து இது குறித்துப் பேசஇருப்பதால், இந்தியாவிடம் எவ்வாறு எவ்வகை உதவிகளைக் கோருவது என ஆராய மாநாடு கூட்டிஇருக்கின்றனர் இந்தப் பௌத்த துறவிகள்.

மொத்தத்தில் துட்டகைமுனுக்கள் மீது முற்றாக நம்பிக்கையிழந்துவிட்ட பௌத்த மதத்துறவிகள் "தமிழ் மக்களை வென்றுவா...! கொன்றுவா...!" என ஆசீர்வதித்து தாம் கட்டிவிட்ட பிரித்நூலிலும்கூட நம்பிக்கை இழந்துவிட்டமையையே இது காட்டுகிறது.

சிங்களப் பேரினவாத அமைப்புகளின் நிலைமையும் இதுவேதான். யாழ் குடாநாட்டில் சிக்கியிருக்கும் இராணுவம் அங்கிருந்து போராடி வெளியேறும் என்ற நம்பிக்கையை அவை அறவே இழந்துவிட்டன. "பிரித்தானியாவின் இராணுவத்தில் அரைவாசி நாட்டுக்கு வெளியே நிர்மூலமாக்கப்பட்டது. மறுபாதி நாட்டுக்குள் வரமுடியாது தொங்கிப்போய் நின்றது. பிரித்தானிய அரசு மக்களுக்கு உண்மையைக் கூறியதால் மக்கள் படகுமூலம் சிக்கியிருந்த இராணுவத்தினரை மீட்டுக் கொண்டு வந்தனர்" என்று இரண்டாம் உலக யுத்த படிப்பினையைக் கூறி "உண்மையைக் கூறு நன்மையைப் பெறுவாய்" என சந்திரிகா அரசாங்கத்திற்கு "சிங்கள உறுமய" என்னும் அமைப்பு ஆலோசனை கூறுகிறது. பல இனவாத அமைப்புக்கள் சர்வதேச இராணுவ உதவியைக் கோருமாறு கூக்குரலிடுவதும் இதனையே காட்டுகிறது.

சிறீலங்காவின் எதிர்க்கட்சி யாழ்ப்பாணத்தில் சிக்கியுள்ள இராணுவத்தைப் பாதுகாக்க புத்தபிரானை கோருவதென தீர்மானித்துள்ளது. இதற்கென தென் பகுதியிலுள்ள பல விகாரைகளிலும் விசேட "பிரித்" வைபவங்களுக்கு ஏற்பாடு செய்ய திட்டமிட்டிருக்கின்றது.

சிறீலங்கா இராணுவத்தின் ஐம்பது ஆண்டுகால வரலாற்றில் அது என்றுமே சந்தித்திருக்காத நெருக்கடியைச் சந்தித்துள்ள இவ்வேளையில் அனைத்து நடவடிக்கைகளுக்கும் பொறுப்பான தளபதி உல்லாசப்பயணமாகவோ, அல்லது குசலம் விசாரிக்கவோ அல்லது பிரார்த்தனைக்காகவோ அவர் இந்தியா சென்றிருக்க முடியாது. செல்ல அனுமதிக்கப்பட்டிருக்கவும்மாட்டார்.

1995இல் புலிகளை இராணுவ நடவடிக்கைமூலம் ஒழித்துக்கட்டுவது என்ற தீர்மானத்துடன் புதிய தந்திரோபாயம்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ம்பிக்கை

ஒன்றை வகுக்க சந்திரிகா அரசாங்கம் முடிவு செய்தபோது அனைத்து நட வடிக்கைத் தலைமைத் தளபதி ஒருவரை நியமித்தது. இதற்கு முதன் முதலில் நியமனம் பெற்றவர் மேஜர் ஜெனரல் ஏ. எம். யு. செனிவிரட்ண. அவரது கருத்து யாழ் குடாநாட்டுக்கு தரைவழிப்பாதை யின்றி குடா நாட்டைக் கைப்பற்றுவது பின் விளைவுகளை ஏற்படுத்தக்கூடியது என்பதாகும். ஆனால் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த உடனடி யாகவே யாழ் குடாநாட்டை கைப்பற்றும் முடிவில் இருந்தமையால் ஏ. எம். யு. செனிவிரட்ண பதவியைவிட்டே விலக வேண்டி ஏற்பட்டது.

அதன் பின்னர் அனைத்து நடவடிக் கைக்கும் பொறுப்பான அதிகாரியாக பொறுப்பேற்றவர் றொஹான் தளுவத்த. யாழ் குடாநாட்டைக் கைப்பற்றுவதற்காக திட்டமிடலை மேற்கொண்டவரும் அவரே. இதன் பயனாக அவருக்கு இராணுவத் தளபதிப் பதவியும் கிட்டியது.

வலிகாமம் பகுதியை இராணுவம் கைப்பற்றியதும் கொடி ஏற்றல் வைபவத் தில் உரையாற்றும் "பாக்கியம்" அவருக்கே கிடைத்தது. அப்போது அவர் இராணு வத்தினரைப் பார்த்து "இந்த நாட்டு மக்கள் சந்தோஷக்களிப்பில் இருக் கிறார்கள். அத்துடன் அவர்கள் "சப்புமல் குமாரயா"க்கள் மீண்டும் வந்து யாழ்ப் பாணத்தில் சண்டையிட்டு கைப்பற்றி விட்டார்களோ என உங்களைப் போற்று கின்றனர் எனவும் கற்பனை செய்து பார்க்கிறேன்" என்று கூறினார்.

இப்பொழுது அந்த "சப்புமல் குமார யா" க்களைக் காப்பாற்ற உதவி கோரியே இவர் இத்தியாவுக்குச் சென்றிருக்க வேண்டும் என அவதானிகள் கூறு கின்றனர்.

இவர்களுக்கு அரசியல் தலைமையை வழங்க முயன்ற பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தகூட இவர்கள் மீது நம்பிக்கை இழந்துவிட்டார் போலவே தோன்றுகின்றது. அவர் இவ்வாறுதான் பல சபதங்களையும் உறுதி மொழிகளையும் அள்ளி வீசிக் கொண்டிருப்பதிலும், அவர் தனது அரசி யல் செல்வாக்கில் ஏற்படப்போகின்ற வீழ்ச்சி குறித்து ஏற்பட்ட கவலையினா லேயே ஒழிய சிறீலங்காவின் இராணு வத்திலோ அல்லது தான் வாங்கிக் கொடுக்கும் போர்த்தளபாடங்களிலோ நம்பிக்கை வைத்தல்ல.

ஆனையிறவுப் படைமுகாமின் வீழ்ச்- சிக்கு அவர் காரணம் கூறுகையில் "புலி கள் இயக்கத்தினர் முகாம்களை இனங் கண்டு எறிகணைத் தாக்குதலை நடத்தி யதால் குறைந்த எறிகணைகள் மூலம் படையினருக்கு கூடிய இழப்பை ஏற் படுத்தக் கூடியதாக இருந்தது. ஆனால் படையினர் நடத்திய கூடுதலான எறி கணைத் தாக்குதல்கள் மூலம் குறைந்த இழப்புகளையே ஏற்படுத்த முடிந்தது" என்று கூறியிருக்கிறார். இது படையி னரின் "திறமைக்கு" அவர் வழங்கிய சான்றிதழ் என்றே கூறவேண்டும்.



இதேவேளை சிறீலங்காவின் ஜனாதி பதியும் முப்படைகளின் தளபதியுமான சந்திரிகா குமாரதுங்க பலவீனப்பட்டுப் போயிருந்த இராணுவத்தைப் பொறுப் பேற்று ஐந்து வருடமாக எவ்வளவோ கொட்டிப் பயிற்சி வழங்கியும் அதனைப் பலப்படுத்துவதில் தமது அரசு தோல்வி கண்டுவிட்டதாக வெளிப்படையாகவே ஒப்புக் கொண்டுள்ளார். அத்துடன் அவர் "புலிகள் இயக்கத்தின் நோக்கத்திற்காக தமது உயிரைத் தியாகம் செய்யப் பலர் இருக்கிறார்கள். ஆனால் நம்மவர்கள் உயிரைப் பாதுகாத்துக்கொள்ளவே முயற்சிக்கின்றனர்" என பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில் தமது ஆதங்கத்தை வெளியிட்டு இருக்கின்றார்.

யாழ் குடாநாட்டில் சிக்கியுள்ள படை யினரை மீட்க இந்தியக் கடற்படையினரின் உதவியை சிறிலங்கா அரசாங்கம் கோரியதும் இராணுவரீதியில் இந்தியா தலையிடுவதில்லை எனக் கூறியிருப் பதால் இந்தியாவால் எதனையும் பெரி தாகச் சாதித்துவிட முடியாது என சிறீ லங்கா அரசு விரக்தியுடன் கூறியிருப் பதும் சிறீலங்காப் படையினர் மீதான அரசாங்கத்தின் நம்பிக்கையீனத்தை முற்றுமுழுதாக வெளிப்படுத்தியிருக்கிறது.

மொத்தத்தில் சிறீலங்காவிலுள்ள யுத் தத்தைக் கோரும் அனைத்துத் தரப்புமே சிங்கள இராணுவத்தின் மீது முற்று முழுதாக நம்பிக்கையிழந்துவிட்ட நிலை மையே காணப்படுகின்றது. ஆனால் இவர்கள் யுத்தத்தின் மீதான நம்பிக் கையை இழக்கவில்லை. எவர்காலில் விழுந்தாவது யுத்தத்தைத் தொடர்ந்து தமிழ் மக்களின் விடுதலைப் போராட் டத்தை அழித்துவிட வேண்டும் என கங்கணம்கட்டி நிற்கின்றனர். ஆனால் உதவி கிட்டுவதுதான் மிகக் கடினமாக உள்ளது.


ஏனெனில் யுத்தத்தின் மூலம் தமிழர் பிரச்சினையைத் தீர்த்துவிடலாம் என்ற நம்பிக்கை இன்று உலகநாடுகளில் அருகிவருகின்றது. இவ்வளவு காலமும் அவ்வாறு நம்பி பல்வேறு வகைகளிலும் உதவி வந்த ஐரோப்பிய ஒன்றியமும் சரி, அமெரிக்காவும் சரி வேடிக்கை பார்த்த உலக அமைப்புகளும் சரி இப்போது பேச்சுவார்த்தை, சமாதானம், மனிதா பிமானம் என அழகான வார்த்தைகளை அடுக்கி வருவது இதனையே காட்டு கிறது. ■



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசம்



கலாநிதி சி.க.சிற்றம்பலம்
(வரலாற்றுத்துறை, யாழ்/பல்கலைக்கழகம்)

[முன்னிதழ் தொடர்ச்சியும் முடிவும்]

1977இல் ஆட்சிக்கு வந்த ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவராக விளங்கிய திரு.அ.அமிர்தலிங்கம் அவர்கள் தமிழ் மக்களின் எதிர்பார்ப்புக்கள் பற்றி ஆற்றிய உரை பின்வருமாறு அமைந்தது.

"1972ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட குடியரசு அரசியல்யாப்பு கடந்த காலத்துடனான சட்ட அரசமைப்பு உறவுகளைத் துண்டிக்க விளைந்தது. சட்டரீதியான தொடர்ச்சியில் ஓர் துண்டிப்பு ஏற்பட்டால் ஈழத்து வாசிகளின் இறைமை - இந்த இறைமை அந்நியர் ஆட்சிக்காலத்தில் அல்லது வெளிநாட்டவரால் ஆக்கப்பட்ட அரசமைப்பு ஆட்சியில் ஒரு காலப்பகுதிக்கு இல்லாது போய்விட்டது. மீண்டும் மேலெழுகின்றது. எனவே தமிழினத்தின் இறைமை - இந்தத் தேசிய இனரீதியாகவும், புவியல் அமைப்பிலும் மொழி ரீதியாகவும் தனி வேறான அடையாளம் கொண்டதாக இருந்தது. மீண்டும் உயிர்ப்புப் பெற்றுள்ளது. சிங்கள மக்களின் இறைமையை நிலைநாட்டுவதற்கும் புதிய அரசமைப்பை ஆக்குவதற்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்குத் தெளிவான திட்டவட்டமான ஆணையை மக்கள் அளித்தார்கள். தமிழ் இனத்தைப் பொறுத்தவரையில் தமிழர்களிற் பெரும்பாலானவர்கள் அளித்த ஆணை



வேறு கடமைப்பாடு கொண்டதாக இருந்தது."

1977ஆம் ஆண்டிற்குப் பின்னர் தமிழர் தாயகக் கோட்பாடு புதிய உத்வேகத்தை அடைந்தது. குறிப்பாகத் தமிழ் இளைஞர்கள் இத்தகைய கோட்பாட்டின் வளர்ச்சிக்கு ஆற்றிய பங்கு அளப்பரியது. இவ் விளைஞர் இயக்கங்களில் தமிழீழ விடுதலைப் புலிகள் முதன்மை வகித்தனர். இக்காலகட்டத்திற்தான் தமிழ் சிங்கள இனக்கலவரம் 1983இல் வெடித்தது. இதோடு பாராளுமன்றத்தின் கதவுகளும் தமிழர் பிரதிநிதிகளுக்கு பூட்டப்பட்டது. இந்தியா ஈழத்தமிழர் பிரச்சனையில் அதிக அக்கறை காட்டத்துவங்கியது. இக்காலத்திற்றான் தமிழர் அமைப்புக்கள் ஒன்று சேர்ந்து தமிழ்மக்களின் கோரிக்கைகளை நான்கு அம்சத்திட்டமாக 13-07-1985இல் நடைபெற்ற திம்பு மாநாட்டில் முன்வைத்தனர்.

அவையாவன


(1) ஈழத்தமிழர் தனியான தேசிய இனம்.

(2) தமிழ்மொழி பேசப்படும் வடகிழக்கு மாகாணங்கள் ஒன்றிணைந்து தமிழரின் மரபுவழிப் பிரதேசங்களாகும்.

(3) தமிழ் மக்களுக்குச் சுயநிர்ணய உரிமையுண்டு.

(4) இந்நாட்டினைத் தாயகமாகக் கொண்ட சகல தமிழருக்கும் பிரஜா உரிமை வழங்கப்படல் வேண்டும்.

ஒரு காலத்தில் சாத்வீக நெறியைப் போற்றிய தமிழ் மக்கள் இப்போது பலாத்கார வழியிற்றான் தமது உரிமைகளைப் பெறலாம் என நம்பத் தொடங்கினர். இந்நிலையிற்றான் பல்வேறு பேச்சுவார்த்தைகளின் பின்னர் தமிழர் அமைப்புக்களை கலந்து ஆலோசிக்காது இந்திய அரசாங்கம் ஓர் புதிய நகல் திட்டத்தினை முன்வைத்தது. இதுதான் 1987ஆம் ஆண்டு ஜூலை மாதம் 29ஆம் திகதியில் உருவாக்கப்பட்ட ராஜீவ்- ஜெயவர்த்தனா ஒப்பந்தமாகும். இவ்வொப்பந்தம் வடகிழக்கு மாகாணங்கள் தமிழரின் மரபுவழித்தாயகம் என ஏற்றுக்கொண்டாலும், இதிலுள்ள சர்வசனவாக்கெடுப்பு அம்சம் இதனை நடைமுறைச் சாத்தியமற்றதாக்கிற்று. அத்துடன் வட-கிழக்கு மாகாண அரசிற்கு வேண்டிய பூரண அதிகாரங்களையும் இது அளிக்கவில்லை. இதனால் இதனை தமிழீழ விடுதலைப் புலிகள்



17ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஊர்காவற்றுறைக் கோட்டையும் சூழவுள்ள பகுதிகளும்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எதிர்த்தனர். தொடர்ந்தும் தமிழர் விடிவிற்குத் தமிழீழமே ஒரே வழி எனத் தமிழீழ விடுதலைப் புலிகள் மேதகு வே. பிரபாகரன் அவர்களின் தலைமையில் போராடிக் கொண்டிருக்கின்றார்கள்.


பிரித்தானியர் ஆட்சியின் தொடக்க காலத்தில் வடகிழக்கு மாகாணங்களில் செறிந்து வாழ்ந்த தமிழ் மக்கள் இந் நூற்றாண்டின் ஆரம்பகாலத்தில் சிங்கள-தமிழர் உறவுகள் விரிசலடையத் தொடங்கிய காலத்திலிருந்து திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட குடியேற்றத்திட்டங்களினால் எவ்வாறு தமது சொந்த மண்ணிலே தமது பெரும்பான்மைப் பலத்தினைக் குறிப்பாகக் கிழக்கு மாகாணத்தில் இழந்தனர். என்பதைப் பிரித்தானியர் ஆட்சிக் காலத்திலும் சுதந்திர இலங்கை அரசுகளின் காலங்களிலும் மேற்கொள்ளப்பட்ட குடிசன மதிப்பீடுகள் எடுத்துக் காட்டுகின்றன. 1827ஆம் ஆண்டிற்றான் முதற்குடிசன மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டது. இக்காலந்தொடக்கம் கடைசியாக 1980 வரை மேற்கொள்ளப்பட்ட குடிசன மதிப்பீடுகள் எவ்வாறு பாரம்பரிய தமிழ் மக்களின் பிரதேசமாகிய கிழக்கு மாகாணம் திட்டமிட்ட சிங்களவர் குடியேற்றத்தினால், தமிழ் மக்களின் பெரும்பான்மைப் பலத்தை இவ்விடங்களிலிருந்து குறைக்க உதவியது என்பதனைப் பின்வரும்

| ஆண்டு | தமிழர் % | முஸ்லீம்கள்% | தமிழ்மொழிபேசுவோர்% | சிங்களவர் % |
|---|---|---|---|---|
| 1827 | 74.52 | 24.72 | 99.24 | 00.53 |
| 1881 | 59.11 | 33.71 | 92.82 | 04.66 |
| 1891 | 58.40 | 34.49 | 92.89 | 05.06 |
| 1901 | 55.83 | 35.97 | 91.80 | 05.05 |
| 1911 | 55.08 | 38.32 | 93.40 | 03.76 |
| 1921 | 53.54 | 39.41 | 92.95 | 04.53 |
| 1946 | 48.74 | 39.06 | 87.8 | 09.87 |
| 1953 | 47.37 | 38.18 | 85.55 | 13.11 |
| 1963 | 45.06 | 34.19 | 79.25 | 19.90 |
| 1971 | 43.97 | 34.64 | 78.61 | 20.70 |
| 1981 | 42.13 | 32.37 | 74.40 | 24.92 |

அட்டவணை எடுத்துக் காட்டுகின்றது.

மேற்கூறிய அட்டவணை கிழக்கு மாகாணத்திற்கு மட்டுமே உரியது. வடமாகாணத்தில் தமிழரின் பெரும்பான்மையை முறியடிக்கச் சிங்கள அரசினால் முடியவில்லை. கிழக்கு மாகாணத்தில் 1827இல் சிங்கள மக்களின் எண்ணிக்கை 0.53 வீதம் மட்டுமே இருந்தது.

தமிழ் மக்களோடு கண்டியரசர் காலந்தொட்டு இப்பகுதியில் பரவிய முஸ்லீம்கள் குடித்தொகையும் சேர்த்தால் தமிழ் பேசும் மக்களின் எண்ணிக்கை 99.24 வீதமாக இருந்தது. சுதந்திரமடைந்த



பண்டத்தரிப்பில் ஒல்லாந்தர் கட்டிய பாடசாலையும் கிறித்தவ தேவாலயமும் (17ம் நூற்றாண்டு)

காலத்தில் கிழக்கு மாகாணத்தில் 9.87 வீதமாக இருந்த சிங்கள மக்கள் 1957இல் பண்டா-செல்வா ஒப்பந்த காலத்தில் 13.11 வீதமாக 1965இல் டட்லி-செல்வா ஒப்பந்த காலத்தில் 19.90 வீதமாக உயர்ந்து 1971இல் முதலாவது குடியரசு அரசியற் திட்ட காலத்தில் 20.7 வீதமாக உயர்ந்தது அவதானிக்கத்தக்கது. இன்று இம்மாகாண சனத்தொகையில் 1/3 வீத மக்கள் சிங்களமொழி பேசுவோராக விளங்குவது ஆச்சரியப்படுவதற்கில்லை.

இறுதியாக நோக்கும்போது பின்வரும் முடிவுகளுக்கு நாம் வரலாம். நம் நாட்டின் ஆதிக்குடிகள் கற்கால மக்களாவர். இவர்களின் சந்ததியினரே தற்கால வேடர்களாவர். இவர்களின் கலாச்சாரத்தினை அடுத்து இந்நாட்டின் நாகரீகத்திற்கு வித்திட்ட திராவிடர் கலாச்சாரம் ஈழத்திற்கு தென்னிந்தியாவிலிருந்து புகுந்தது. இதனை உருவாக்கியோர் தற்காலச் சிங்கள-தமிழ் மொழி பேசுவோரின் மூதாதையினராவார். இவர்கள் ஒன்றுக்கு மேற்பட்ட திராவிடமொழிகளைப் பேசினர். இதில் தமிழைவிட சிங்களத்தின் மூதாதை மொழியாகிய எலுவும் காணப்பட்டது. இம் மக்கள் ஈழவர் என அழைக்கப்பட்டனர். மொழிரீதியாக இவர்களிடையே தனித்துவம் காணப்பட்டாலும்கூட மொழியோடு இனத்துவம் சேர்ந்த தொனி கி.பி 6ஆம் நூற்றாண்டின் பின்னரே காணப்பட்டது. இதற்கு முன்னர் நாட்டின் பெயராக வழங்கப்பட்ட ஈழத்திலிருந்து மருவிய சீகள/சிம்கள என்ற சொல் ஓர் இனத்தின் பெயராக எழுச்சி பெற்றது. நாட்டின் பல பகுதிகளில் வியாபித்திருந்த தமிழ் மக்கள் பிற்பட்ட அநுராதபுர காலத்தில் வடகிழக்குப் பிராந்தியத்தினைத் தமது மரபுவழித் தாயகமாகக் கொள்ளத் தொடங்கினர். இம்மரபுவழித் தாயகத்தை சோழராட்சியின் படர்க்கை மேலும் உரம் பெற்று வளர்க்க உதவியது. யாழ்ப்பாண அரசின் எழுச்சியும் வடகிழக்குப் பகுதிகளில் தமிழ்வன்னி அரசுகளின் தோற்றமும் பாரம்பரிய தாயகத்தின் வளர்ச்சியில் முக்கிய மைல்கற்களாக அமைந்தன. ஐரோப்பியரான போர்த்துக்கேயர் (கி.பி. 1505-1658) டச்சுக்காரர் (கி.பி 1658-1796) ஆங்கிலேயர் (1796-1948) ஆகியோர் குறிப்புக்கள் இம்மரபுவழித் தாயகத்தினைப் பற்றிய தகவல்களைத் தருவதோடு இந்நூற்றாண்டிலும் சிங்களத் தலைவர்களுடன் தமிழ்த் தலைவர்கள் செய்து கொண்ட உடன்படிக்கைகளும் இதனை அங்கீகரித்ததும் ஈண்டு அவதானிக்கத்தக்கது. ■





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 'களங்களிலிருந்தே தேசங்கள் பிறக்கும்'

-வே. பாலகுமாரன்-

21ஆம் நூற்றாண்டிலே உலகம் முதலடி எடுத்து வைத்த 6ஆம் மாதத்திலே, 3ஆவது மில்லேனியம் எனப்படும் 3ஆவது ஆயிரமாவது ஆண்டாக புத்தாயிரம் ஆண்டுப் பெருங் காலம் நடந்து கொண்டிருக்கின்ற இவ் வேளையிலே, எமக்கான புத்துலகிற்கான விடுதலை வரலாற்றினை, எமது தேசிய விடுதலை அணி எழுதும் காலையிலே தொன்மை மிக்க வரலாற்றுக்கு உரித்தானவர்களாகவும், நவீன வரலாறொன்றிற்கு சொந்தக்காரர்களாகவும் திகழப்போகின்ற உங்களோடு உறவாடுவதில் பெரு மகிழ்வு அடைகின்றோம். வரும் நாள் எல்லாம் உங்களுக்கு இதமான வளமான நாட்களா கட்டும் என இக்கனிவான வேனிற்கால வேளையில் வாழ்த்திப், பாராட்டி நிற்கின்றோம். ஓட்டுக்குள் சுருங்கும் நத்தை போல உங்களைச் சுருங்கவைத்த ஒடுக்குமுறைகள் அற்ற ஒரு பகுத்தறிவான, அமைதியான, முழுமையான வாழ்வு உங்களுக்கு வாய்க்க வேண்டும் என்பதற்காக உயிரிழந்தும், உறுப்பிழந்தும், உயிர்வாழ்ந்தும் வருகின்ற தலைவர் அணியைச் சேர்ந்தவர்கள் என்கின்ற வகையில் உங்கள் நல்வாழ்வை இனிவருங்காலங்களில் விரைந்து எதிர் பார்த்து நிற்கின்றோம்.

இனிவரும் உலகில் எண்ணங்களே, கருத்துக்களே மூலதனம் என்கிறார்கள். இப்புத்துலகில் இயந்திரங்கள், மூலப் பொருட்கள், உருப்பொருட்கள், உருக் காட்சிகள், எண்ணங்கள், தகவல்களே முதன்மை பெறப்போகின்றதாம். தகவல் தொடர்பு தொழில்நுட்பமும் உயிர் தொழில் நுட்பமும் என்கிற இரு பாரிய தூண்கள் தாங்கும் ஒரு புதிய பொருண்மிய உலகில் மனித சமூகம் பிரவேசிக்கின்றதாம். இதனை அவர்கள் என்ன பெயரிட்டு அழைக்கிறார்கள், பாருங்கள். தகவல் பொருண்மியம், புலனாகாப் பொருண்மியம், பாரம் அற்ற நிறையற்ற அருவப் பொருண்மியம் என அதிசயப் பெயரிட்டு அழைக்கின்றார்கள். இதற்குள் என்ன என்ன அடங்கும் என பட்டியல் வேறு இப்போது வெளியிட்டு விட்டார்கள் பாருங்கள் பட்டியலை. தகவல் செய்தி தொடர்பு தொழில் நுட்பம்/ இன்ரநெற் எனப்படும் இணையம், கல்வி, மருத்துவம், விளம்பரம், நிதி, புனைவுரிமை, பதிப்புரிமை, வாணிபக்குறிகள் இவை தொடர்பான ஆலோசனைப் பணிகள், ஒளிப்பேழை ஒளிபரப்புக்கள் மின்னணுவியல் நூலகங்கள் ஏனைய நவீன செய்தித் தொடர்பு சாதனங்கள் / உயிர்த்தொழில் நுட்பம், மரபியல் ஆதாரங்கள், மருந் தாக்கம் என நீண்ட பட்டியல் உள்ளது. இதனைத் தொகுத்தே கட்புலனாகாப் பொருண்மியம் என்றார்கள்.

இப்பொருண்மிய உலகிற்குள்ளே ஒரு அற்புதம் இப்போது நிகழ்கின்றது. இப்புவியிலே உயிர்ச்சங்கிலியின் கடைசி இழையாக நாம் இருப்பது நீங்கள் அறிந்ததே. இம்மனித இனத்தின் அடுத்த பரிணாம மாற்றம் என்ன? மனித குலத்தை ஆட்டிப் படைக்கும் பெரும் கேள்வி இது. இதற்கான விடையை ஏறத்தாழ உலகம் இப்போது அறியத்தொடங்கிவிட்டது. எமது உடலிலுள்ள கலங்களுள் உறையும் ஜீன் எனப்படும் மரபலகுத் தொடர்பில் மேற்கொள்ளப்படும் ஆய்வுகள் மனிதகுலத்தின் எதிர்காலத்தையே தீர்மானிக்கப் போகின்றன. புதிய பிறப்புக்கள் புதிய கடவுளர்களை உருவாக்கப் போகின்றன. உணவுப் பற்றாக்குறையைத் தீர்க்க, முதன்மையைத் தள்ளிப்போட, எயிட்ஸ் புற்றுநோய், போன்ற உயிர்கொல்லிகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க, பிறவிக் குறைகளுக்கு பரம்பரை வியாதிகளுக்கு முடிவுகட்ட, புதுப் புதுத்தாவர விலங்கினங்கள் படைக்க, உங்களுக்கு விரும்பியவாறு உங்கள் வாரிசுகளை உருவாக்க இன்னும் என்னென்னவோ அதிசயங்கள் நிகழ்த்த மரபியலில் உயிர் தொழில்நுட்பம் உதவத் தொடங்கி விட்டது. இது ஒரு அரிய மேன்மையான தரமாற்றம் இவை எமக்கு முன்னே விரியும் உலகின் விசித்திரங்கள், அதிசயங்கள், வாழ்வின் புதிய சிரமங்கள். இப்போது எண்ணிப் பாருங்கள் எம்உடன்பிறப்புக் களே! அப்படிப்பட்டதொரு உலகு எமக்காக காத்துள்ளது. சரி இப்போது திரும்பிப் பாருங்கள். நாம் இவ்வளவு தூரம் பின்தங்கி இருப்பதற்கு என்ன காரணம்? நாம் ஏன் இவ்வாறானோம்? ஒவ்வொரு காலகட்டத்திலும் நாம் ஏன் தோற்றுப் போனோம்? போரியல் அறிவின் நுட்பத்தில் பின் தங்கி நின்றமையாலேயே நாம் பின்தள்ளப்பட்டோம். இதுவே பிரதான காரணம். முன்னொரு காலத்திலே குதிரை ஏறிவந்த ஆரியனோடு மோத முடியாது தோற்றுப்போய் அவனது வேத விண்ணாணத்திற்குள் ஆழ்ந்து நால்வகை சாதியாகிப் பின்னர் நாற்பது சாதியானோம். துப்பாக்கிகள், பீரங்கிகள் சகிதம் பின்நாளில் வந்த ஐரோப்பியனோடு மோத முடியாது அவனது கோர்ணமேந்தில் கோழி மேய்க்கும் கூட்டம் ஆனோம். தனது நன்மைக்காக அவன் சட்டமாக்கிய தேசவழமையை எமது தேசியப்பண்பாக்கி பாழ்பட்டோம். இந்நாட்களில் நவீன இராணுவத்தோற்றம் காட்டியசிங்களப்படை கண்டு வெருண்டோடிச் சிதறினோம். இடம்பெயர்ந்து ஏதிலிகளானோம். எனவே தேசவழமை என்னும் இருட்சிறைக்குள் எம்மை நாமே தாழ்போட்டுக் கொண்டோம். வரலாறு என்பது உக்கிப்போன எலும்புகளையும் மக்கிப்போன கோட்டை கொத்தளங்களையும் கணக்கிடும் வேலை என்றும் போர் என்பது இறப்பதற்கும் இழப்பதற்கும் ஆனது எனவும் முடிவு கட்டினோம். இதனால் பலவற்றை நாங்கள் மறக்கப் பழகிக் கொண்டோம். இறுதியில் எல்லாவற்றையும் மறந்தே போனோம்.

கி.மு. 2250-1500ற்கு இடைப்பட்ட காலத்தில், இந்து நதியின் கரையிலே எமது தொன்மைக் குடிகள் சீரும் சிறப்புமாக வாழ்ந்ததை மறந்தோம். கி.மு முதலாம் நூற்றாண்டில் இருந்து, கி.பி 10 நூற்றாண்டுக்கு இடையில் பூநகரியிலே கந்தரோடையிலே இருபெரும் தமிழ் இராச்சியங்கள் சர்வதேச வணிகத் தொடர்போடு கொடி கட்டிப் பறந்த காலத்தை மறந்தோம். அண்மையில் 1215-1621 வரை அதாவது 13ஆம் நூற்றாண்டிலிருந்து 17ஆம் நூற்றாண்டு வரை யாழ்ப்பாண இராச்சியம் என சுதந்திர நாடு ஒன்று மிளிர்ந்ததை மறந்தோம். கி.மு 205ஆம் ஆண்டு அநுராதபுரம் உட்பட்ட பெரும் தமிழ் இராச்சியத்திற்கு மன்னனாக இருந்த எம் தமிழ் மன்னன் எல்லாளன் கி.மு 161இல் துட்டகாமினியால் தோற்கடிக்கப்பட்டபோது, அநுராதபுரத்தை இழந்ததை மறந்தோம், 1621இல் யாழ்ப் பாணத்தை இழந்ததை மறந்தோம். 1807 அளவில் வன்னியை இழந்ததை மறந்தோம். 1833இல் தமிழ்த்தேசமே சிங்கள தேசத்தோடு பலவந்தமாக இணைக்கப் பட்டதை மறந்தோம். இவ்வாறாக பல நூற்றாண்டு வரலாற்றை முற்றாக மறந்தோம். ■



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# யார் அழகு



காரிருளில்
நீலவான் கடலினிலே
கண் சிமிட்டும் விண்மீனே
நீ எமக்கு அழகென்று தெரியவில்லை
நெடி துயர்ந்த
மலைகளுக்கு மத்தியில்
பால் முகம் காட்டும் வெண்மதியே
நீயும் எமக்கு அழகென்று தெரியவில்லை
புள்ளி மயிலும் அழகில்லை
கூவிடும் குயிலும் அழகில்லை
அப்போ,
யார்தான் அழகென்பீரா?
செப்புகிறேன் கேளும்.
எமதன்பு ஊர் பிடித்து சுடுகாடாக்கி
அகதி என்ற முத்திரையை எமக்களித்த பாதகர்
கதை முடிக்க உடலிடை வெடிசுமந்து
வரலாறாகிப் போன அடலேறுகளே
எமக்கழகாய் தெரிகிறார்கள்
அடுப்படி தஞ்சமென்றிருந்தவர்
சுடுகுழல் கையேந்தி வெஞ்சமராடி
வெற்றிக்கு வித்தாகிப் போன
உன்னதங்களே
எமக்கழகாய் தெரிகின்றார்கள்

**-அ.அன்ரனி-**



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஆண்டான் அடிமை மனோபாவத்தில் சந்திரிகா

இலங்கை இனப்பிரச்சனைச் சிக்கல் நிறைந்தது. எடுத்த எடுப்பிலேயே சமரசம் காண்பதும் தீர்வைக் கண்டுபிடிப்பதும் இயலாத காரியம். இதற்கு வாரங்கள் மாதங்கள் அல்ல ஆண்டுகள்கூடச் செல்லலாம் என்பது, வெளிநாட்டு சமரச முயற்சியாளர்களின் கணிப்பு.

ஆனால், ஐந்தாண்டு ஆட்சியை முடித்துக் கொண்டு, அடுத்த தேர்தலுக்கு தயாராகிக் கொண்டிருக்கும் சந்திரிகா அரசோ, இனப்பிரச்சனையைத் தீர்க்கும் விடயத்தில் அதிதீவிர ஆர்வம் காட்டுவதுபோல் கடந்த சில மாதங்களாகக் காண்பித்து, இறுதியாக ஐக்கிய தேசியக் கட்சியுடன் சேர்ந்து, சமாதானத் தீர்வுக்கு முன்னோடியாக, இடைக்கால நிர்வாக சபை ஒன்றை அமைப்பதில் வெற்றி பெற்றிருப்பதாக அறிவித்துள்ளது.

இலங்கைத்தீவில் சமாதானத்தை வலியுறுத்துகின்ற உலக நாடுகளின் காதில் பூச்சுற்றும் வேலையன்றி இது வேறெதுவாகவும் இருப்பதற்குச் சாத்தியமில்லை. கடந்த ஐந்தாண்டுகளாக இனப்பிரச்சனைத் தீர்வுத் திட்டங்கள் வரைவதாகவும், பொதி தயாரிக்கப்பட்டிருப்பதாகவும் அறிவித்த சந்திரிகா, இந்தமாத இறுதியில் தீர்வுத் திட்டத்தை பாராளுமன்றில் சமர்பிக்க உள்ளதாகவும் தெரிவிக்கின்றது.

அத்தீர்வுத்திட்டத்தை நடைமுறைச் சாத்தியமாக்கும் வரை, வடக்கு கிழக்கில் இடைக்கால நிர்வாக சபை ஒன்றை ஏற்படுத்தி, அதனைத் தமிழர்களிடம் ஒப்படைக்கப் போவதாகவும் சந்திரிகா அறிவித்திருக்கின்றார். அதாவது அவர் குறிப்பிடும் தமிழர்கள் ஈ.பி.டி.பி டக்ளஸ் தேவானந்தா, மற்றும் புளட் சித்தார்த்தன் போன்றவர்களைத்தான். இந்த இடைக்கால நிர்வாக சபையில் விடுதலைப் புலிகளுக்கு இடமேயில்லை என, அவர் உறுதியாக அறிவித்திருக்கின்றார். இதனை விட வேறு தமாசான விடயம் ஏதேனும் இருக்க முடியுமா..? சந்திரிகாவின் இந்தப் பிதற்றலை என்ன வென்பது..?

ஏதோ விடுதலைப் புலிகள், இவர்கள் வழங்கும் இடைக்கால நிர்வாக சபைக்காகவே போராட்டம் நடத்துபவர்கள் போலவும், அதற்காக அவர்கள் சந்திரிகாவிடம் கை ஏந்திக் காத்து நிற்கின்றவர்கள் போலவும்... சிறுபிள்ளைத்தனமாக சிறீலங்கா ஜனாதிபதி பிதற்றுவது அரசியல் ஆர்வலர்களை ஆச்சரியப்பட வைத்திருக்கின்றது. விடுதலைப் புலிகளின், தமிழ் மக்களின் தாயகமண்ணை மீட்டு தமிழ் மக்களின் சுதந்திரமான நல்வாழ்வுக்காக, ஆனைப்பசியுடன் இலட்சியப் பாதையில் எத்தனையோ இடர்களுக்கு மத்தியில் மனந்தளராமல் போராடி, அளப்பரிய களச் சாதனைகளைப் பதித்து முன்னேறி வருகையில், சந்திரிகா அரசோ சோளப் பொரி தூவுகின்றது. இடைக்கால நிர்வாக சபையாம், அதில் புலிகளுக்கு இடமில்லையாம் என்ற பிதற்றல் வேறு.

விடுதலைப் புலிகள் பங்கேற்காத எந்தச் சமாதானத் திட்டமும் வெற்றி பெறாது என்பது அழுத்தம் திருத்தமான உண்மை. தமிழ் மக்களின் ஒரே பிரதிநிதிகளான விடுதலைப் புலிகளுடன்தான் தமிழ்மக்கள் சார்ந்த அனைத்துப் பிரச்சனைகளும் ஆராயப்படவேண்டும், அவர்களுடனேயே தீர்வைக் காணவேண்டும் என்பதே இன்று, தமிழீழப் பிரச்சனையில் அந்நியப்பட்டு நின்ற உலக நாடுகள்கூட ஒத்துக்கொள்ள ஆரம்பித்திருக்கின்றன என்பதுடன், அதனையே சிறீலங்கா அரசிற்கு வலியுறுத்தவும் செய்கின்றன.

உண்மையில், விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுவார்த்தையை பின் தள்ளும் அல்லது முற்றாகக் கைவிடும் போக்கிலேயே சந்திரிகாவின் தற்போதைய நகர்வுகள் இருக்கின்றன. இனப்பிரச்சனைக்கு சமாதானத் தீர்வு என்பது வெறும் வாயளவில் வைத்துக் கொண்டு, இராணுவ ரீதியில் தமிழ் மக்களை அடக்கி ஒடுக்க அவர் தீர்மானித்திருக்கின்றார். இதற்கேற்ப அவர் எதிர்க் கட்சியின் உதவியையும், சில பிறநாடுகளின் உதவியையும் நம்பியிருக்கின்றார். நாட்டை போர்ப்பாதையில் இட்டு, போருக்கு முன்னுரிமை கொடுத்து, அரசாங்க உத்தியோகத்தர்களின் இரண்டு நாட் சம்பளத்தைக் கோரி, பாதுகாப்பு வரிகளை அதிகரித்து, பெரும் யுத்த முன்னெடுப்புக்கு அவர் ஆயத்தமாகிவருகையில் சமாதானத்திற்காக அவர் முயற்சிக்கின்றார் என்று கூறுவது முட்டாள்த்தனமானது.

ஒகஸ்ட் மாதம் தற்போதைய பாராளுமன்றத்திற்கான ஆயுட்காலம் முடிவடைகின்றது. அடுத்த பாராளுமன்றத்திற்கான தேர்தல் அடுத்த இரண்டு மூன்று மாதங்களில் நடத்தப்பட்டாக வேண்டும், தனக்கிருக்கக் கூடிய அதிகாரங்களைப் பாவித்து தேர்தலைப் பிற்போடும் உத்தேசம் தனக்கில்லை எனவும் தேர்தல் குறிப்பிட்ட காலத்தில் நடத்தப்படும் எனவும் சந்திரிகா அறிவித்திருக்கின்றார்.

வடக்கில் முன்பு தான் பெற்ற இராணுவ வெற்றிகள், இதுநாள் சிங்களத்தின் கதாநாயக பாத்திரம் வகித்த, தற்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போதைய அரசு, தற்போது விடுதலைப் புலிகளின் ஓயாத அலைகளால் அசிங்கப் படுத்தப்பட்டு அவலமாக நிற்கும் நிலையில், தேர்தல் வருகின்றது. அப்பட்டமான வரலாற்றுத் தோல்விக்கு மத்தியில், தேர்தலைச் சந்திக்கும் சந்திரிகா அரசு, விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சு வார்த்தைகளை மேற்கொண்டு, சிங்களப் பேரினவாதிகளின் கடும் எதிர்ப்பை சந்திக்கத் தயாராக இல்லை. தோல்விக்குப் பழிவாங்கும் கடும் போக்காளர்களின் மனோநிலையை சரியாகப் பிரதிபலித்தால் மாத்திரமே, சிங்களத்தின் வாக்குகளைக் கவரமுடியும் என சந்திரிகா நினைப்பதாகவே கொள்ள வேண்டியுள்ளது.

விடுதலைப் புலிகளுக்கும் தமிழ் மக்களுக்கும் எதிரான பெரும் போர்ப் பிரகடனம் ஒன்றைச் செய்வதன் மூலம், தான் பெற்ற வரலாற்றுத் தோல்விகளை சற்றேனும் மறைத்து, சிங்களத்து பேரினவாத வீரமதர்ப்புடன் தேர்தலைச் சந்திக்கலாம் என்பதே சந்திரிகாவின் நினைப்பாக இருக்கலாம்.

அத்துடன், தமிழ் மக்களின் வாக்குகளைக் கவருவதென்பது சந்திரிகாவிற்கு இனி இயலாத காரியமென்றாகி விட்டது. இத்தனை அழிவுகளை மேற்கொண்டு, தமிழ் மக்களிடம் வாக்குக் கேட்கப் போவது காரிய சாத்தியமற்றது என்பதைப் புரிந்து கொண்டு, அடுத்த தேர்தலுக்கு முழுக்க முழுக்க சிங்கள மக்களின் வாக்குகளை மாத்திரமே சந்திரிகா நம்பியிருந்தார். அதற்கேற்ப விடுதலைப் புலிகளுக்கெதிரான கருத்துக்களையும் தமிழ் மக்களுக்கெதிரான போரையும் அவர் முடுக்கிவிடுவார் போல் தெரிகின்றது. அதேவேளை, உலக நாடுகள் மேற்கொண்ட சமாதான முயற்சிகளையும் அவர் மெல்லப் பின் தள்ளுவார் என்றே கொள்ளலாம்.

தமிழ் மக்களின் உரிமைப்போர் தன் இறுதிக் கட்டத்தில் நிற்கின்றது. உலக நாடுகளைத் தன்பக்கம் ஈர்த்து, அது குறித்து, உலக நாடுகளிடையே பேசவைக்கின்றது. இலங்கைப்பிரச்சனைக்கு தீர்வு காண்பது குறித்து, உலக நாடுகளை அக்கறை கொள்ள வைத்திருக்கின்றது. அதன் பாதையில் அவற்றை செயற்பட வைத்திருக்கின்றது.

என்றாலும். சூழ்நிலைக் கைதியாக உள்ள சந்திரிகா நேற்றொன்று இன்றொன்று பேசும் சந்திரிகா நாளை என்ன சொல்வார் என்று சொல்வதற்கில்லை. கையேந்தி நிற்கும் நாடுகளின் அழுத்தம், சிங்களப் பேரினவாதிகளின் அழுத்தங்களையும் மீறி விடுதலைப் புலிகளுடன் பேசுமாறு அவரை நிர்ப்பந்திக்கலாம்.

நிலைமை இவ்விதம் சென்று கொண்டிருக்க, ஆண்டான் அடிமை மனோபாவத்தில், சிங்கள அரசுகள் போடும் பிச்சையை தமிழர்கள் தமது உரிமைகளாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற மனோபாவத்துடன் சந்திரிகா இருப்பது வரலாற்றுக் குருடியாகவே அவர் இன்னமும் இருக்கின்றார் என்றே கொள்ளத் தூண்டுகின்றது.

தமிழர்களின் உரிமையை, சிங்கள அரசு பிச்சையாகப் போடுவது சாத்தியமில்லை. அது தமிழீழ மக்களின் தேசியத் தலைவரால், தமிழீழ தேசமீட்புப் படையால் தீர்மானிக்கப்படுவது. மாகாணசபைகள், மாவட்டசபைகள், இடைக்கால நிர்வாகசபைகள் இவைகள் சிங்களத்தின் கால்களில் தஞ்சமடைந்திருக்கும் ஜீவராசிகளுக்கு, தீர்வாக அமையலாம். அவை தமிழ் மக்களுக்கான தீர்வல்ல. தமிழ் மக்களின் எதிர்கால நலனுக்கும் கௌரவமான வாழ்விற்கும் எது தீர்வு என்பதைத் தீர்மானிப்பவர் தமிழீழத் தேசியத் தலைவர் மாத்திரமே. சிங்களத் தலைவர்களுக்கு அந்த அதிகாரம் கிடையவே கிடையாது.

**-சுப்பு-**

## தமிழர் விடுதலை வரலாற்றில்

**தனிச்சிங்களச் சட்டம்**

05.06.1956ஆம் திகதி தனிச் சிங்களச்சட்டம் இலங்கைப் பாராளுமன்றில் நிறைவேற்றப்பட்டது. அன்றைய பிரதமரான பண்டாரநாயக்காவினால் 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க சிங்களம் மட்டும் சட்டம் நிறைவேற்றப்பட்டது. ஒட்டுமொத்த சிங்களத் தரப்பும் இச்சட்டத்திற்கு ஆதரவளித்தனர். எல்லாமாக இச் சட்டத்திற்கு ஆதரவாக 66 சிங்களவர்களும், எதிராக கம்யூனிஸ்ட் உறுப்பினர்கள் உட்பட 24 தமிழ் உறுப்பினர்கள் வாக்களித்தனர்.

**ஆயுதப் போராட்டத்தில் வித்தான முதல் விழுது.**

சிங்களப் பேரினவாதத்தினால் தமிழர்கள் அடக்கப்பட்டு ஒடுக்கப்பட்டு, உரிமைகள் மறுக்கப்பட்ட நிலையில் உரிமைகளை ஆயுதப் போராட்டத்தின் மூலமே வென்றெடுக்கப்பட முடியும் எனத் தீர்மானித்த மாணவனாகிய சிவகுமாரனால் அடக்குமுறையாளர்களுக்கு எதிராக சில தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. இறுதியாக 05.06.1974 அன்று துரோகி ஒருவனால் சிங்களப் பொலிசாருக்கு காட்டிக்கொடுக்கப்பட்ட நிலையில், பொலிசாரிடம் உயிருடன் பிடிபடக்கூடாது என்பதற்காக சயனைட் அருந்தி வீரச்சாவடைந்தான். இவ்வீரனது நினைவு தினம் தமிழீழ மாணவர் தினமாக தமிழீழத் தேசியத் தலைவரவர்களால் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது.

**10.06.1990 இரண்டாம் கட்ட ஈழப்போரின் ஆரம்பம்**

சமாதானப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டவேளையில் யுத்த முனைப்பில் ஈடுபட்டிருந்த பிரேமதாசா அரசாங்கத்தின் முயற்சியை முறியடிக்கும் விதத்தில்1990 யூன் 10ஆம் திகதி மட்டக்களப்பு பொலிஸ் நிலையத் தாக்குதலோடு இரண்டாம் கட்ட ஈழப்போர் ஆரம்பமானது. இக்காலத்தில் தமிழீழத்தின் பெரும் பகுதிகள் மீட்கப்பட்டு தமிழீழ நிர்வாகக் கட்டமைப்புக்கள் நிறுவப்பட்டன.



## ஆழப்பதிந்த ஆனி

**தேசப்பற்றாளர் பேராசிரியர் துரைராசாவின் மறைவு**

உலக அளவில் மண் பொறியியலில் "துரையின் தேற்றம் "என்ற தேற்றத்தை நிறுவி புகழ் பெற்றவரும் தமிழீழ மண்ணிற்கு அளப்பரிய அளவில் பணியாற்றியவருமான யாழ் பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் துரைராசா 11.06.1994இல் சுகயீனம் காரணமாக மறைந்தார். இவரின் சேவைக்காக தமிழீழத் தேசியத் தலைவரவர்களால் தேசப்பற்றாளர் விருது கொடுத்து கௌரவிக்கப்பட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

**மண்டைதீவுப் படைத்தளம்மீதான தாக்குதல்**

28.06.1995 அன்று தமிழீழ விடுதலைப் புலிகளின் தாக்குதல் அணிகளினால் மண்டைதீவுப் படைத்தளம் கைப்பற்றி அழிக்கப்பட்டது. கடலால் நாற்புறமும் சூழப்பட்ட இப்படைத்தளத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் விடுதலைப் புலிகளால் ஒரு லெப்.கேணல் தர சிங்கள அதிகாரியுட்பட 110 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர், 200 சுடுகலங்கள் உட்பட பல கோடிப்பெறுமதியான யுத்த தளபாடங்கள் கைப்பற்றப் பட்டனர்.

**தமிழகம் நோக்கிய பயணத்தில் பாக்கு நீரிணையில் மூழ்கிய தமிழர்**

1998 யூன் 26ஆம் திகதி சிறீலங்கா அரசின் அடக்கு முறைகளிலிருந்து தப்புவதற்காக மன்னாரிலிருந்து தமிழகம் நோக்கிச் சென்ற ஈழத் தமிழர்களின் படகு பாக்கு நீரிணையில் கவிழ்ந்து 45 பேர் பலியாகினர்.





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# முரண்பட்டு நிற்கும் அரசியல் இராணுவத் தலைமைகள்.

வேலவன்





சிறீலங்காவின் அரசியல் தரப்பிற்கும் இராணுவத்தரப்பிற்கும் இடையேயான முரண்பாடுகளும் மனக்கசப்புக்களும் மிக அண்மைக் காலத்தில் அம்பலமாகி வருகின்றன. இந்த முரண்பாடுகள் இந்த ஆட்சியின் ஆரம்ப காலத்திலிருந்து வருகின்ற போதிலும்கூட இப்போது அவை செய்தியாளர் மாநாடுகள், பேட்டிகளில் ஒருவரை ஒருவர் மறைமுகமாகச்சாடும் அளவிற்குச் சென்றுள்ளமையைக் காணலாம்.

ஆனையிறவுத்தள வீழ்ச்சியின் பின் சிறீலங்காவின் படைத்தலைமையைச் சந்தித்த முப்படைகளின் தளபதியும் சிறீலங்காவின் தலைவியுமான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க "நடந்துமுடிந்த சம்பவங்கள் குறித்து விளக்கம் தேவையில்லை. இந்த நிலை தொடராமல் இருக்க உங்கள் ஆலோசனைகளைக் கூறுங்கள்" என முப்படைத் தளபதிகளையும் பார்த்துக் கூறியதாக தகவல்கள் வெளிவந்தன. இவ்வேளையில் சிறீலங்காவின் இராணுவத் தளபதி நவீனரக ஆயுதங்கள் பற்றிக் கோரிக்கை விடுத்ததுடன் ஆளணிப் பற்றாக்குறை குறித்தும் பிரஸ்தாபித்ததாகவும் கூறப்படுகிறது.

சிறீலங்காவின் இராணுவத்தரப்பைப் பொறுத்தவரை வடக்கு-கிழக்கு மாகாணங்கள் முழுவதையும் தமது பூரணகட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்கு அதன் ஒரு இலட்சத்துப் பத்தாயிரம் பேரைக்கொண்ட படையணி போதாது என்பதே அதனது வாதமாகும். இந்தப் படையணியானது வடக்கின் சில இராணுவ முகாம்களைப் பாதுகாக்கவும், கிழக்கில் பெரும்பாலான பிரதேசங்களை கட்டுப்பாட்டில் வைத்திருக்கவுமே போதுமானது என்பது அதனது கருத்தாகும்.

இதனை 1991இல் இராணுவத் தலைமை அதிகாரியாக இருந்த சிசில் வைத்தியரட்ண பிரேமதாச அரசாங்கத்திற்கு வலியுறுத்தினார். இதற்கமையவே அன்றைய யுத்த மூலோபாயம் வகுக்கப்பட்டு செயற்படுத்தப் பட்டது. ஆனால் இந்த மூலோபாயம் தோல்வியைத் தழுவியதுடன் ஐ. தே. கட்சி அரசாங்கத்தினால் தமிழர் விடுதலைப் போராட்டத்தை தோற்கடிக்க முடியாது என்பதும் நிரூபணமாகியது. ஜனாதிபதி சந்திரிகா யுத்தம் மூலம் தீர்வு என்ற முடிவுக்கு வந்த வேளையில் முதலில் வடக்கைக் கைப்பற்றுவது என தீர்மானித்தபோது அதற்கு இராணுவத் தலைமையிடமிருந்து வந்த கோரிக்கையும் ஆளணிப் பற்றாக்குறை பற்றியதே.

இதுகுறித்து அதிகாரிகள் மத்தியில் உரையாற்றிய சிறீலங்காவின் அப்போதைய இராணுவத் தளபதி லெப் ஜெனரல் ஜெரி டி சில்வா "இராணுவத்தின் ஆளணிப் பெருக்கம் அரசியல்வாதிகள் மத்தியில் சந்தே



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கத்தை ஏற்படுத்தக்கூடியது. எனினும் கள அதிகாரிகள் ஆளணி போதாதென்றே எம்மிடம் எப்போதும் முறையிட்டு வருகின்றனர்" என்றார். ஆனால் ஆளணி அதிகரிப்பிற்கு சந்திரிகா குமாரதுங்கா அரசு இணங்கி நடவடிக்கை எடுத்தபோதிலும்கூட அதில் வெற்றிகிட்டவில்லை. ஆனால் அதற்காக அது தனது திட்டத்தைக் கைவிடவில்லை.

அதேவேளை வடக்கைக் கைப்பற்றுவது என்ற தீர்மானத்தைச் செயற்படுத்துவதற்கு யாழ் குடாநாட்டை தரைமூலமாக ஏனைய பகுதிகளுடன் இணைத்த பின்னரே யாழ் குடாநாட்டை கைப்பற்றுதல் என்பதே இந்த நடவடிக்கைக்கு பொறுப்பதிகாரியாக அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட மேஜர் ஜெனரல் ஏ.எம்.யு. செனவிரட்ணவின் கருத்தாகும். ஆனால் இராணுவத்துக்கு அரசியல் தலைமை வழங்கிய அனுருத்த ரத்வத்தவின் திட்டம் முதலில் யாழ் குடாநாடு பின்னரே தரைப்பாதை என்பதாகும். இந்த முரண்பாட்டால் இராணுவ அதிகாரியே இறுதியில் 25நாட்களில் தனது பதவியைத் துறக்கவேண்டி ஏற்பட்டது. ஆக முதலிலேயே இராணுவத் தலைமைக்கும் அரசியல் தலைமைக்கும் இடையே முரண்பாடுகள் ஆரம்பித்துவிட்டன. ஆனால் அன்று அரசியல் தலைமை மிகவும் பலமான நிலையில் இருந்தமையால் அதுவே வெற்றிபெற்றது.

யாழ் குடாநாட்டில் முதலில் மேற்கொள்ளப்பட்ட "முன்னேறிப் பாய்தல்" இராணுவ நடவடிக்கையை முறியடிக்க விடுதலைப் புலிகள் நடத்திய புலிப்பாய்ச்சல் நடவடிக்கையால் சிறீலங்கா இராணுவம் முன்னேறி வந்த இடங்களை கைவிட்டு ஓடியது. அப்போது இராணுவத் தலைமை தம்மைக் கேட்காமல் பின்வாங்கிவிட்டதாக பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த குற்றம்சாட்டினார்.

பின்னர் முல்லைத்தீவுத் தளத்தை சிறீலங்கா இராணுவம் புலிகளிடம் இழந்த போது அந்த முகாம் தாக்கப்படக்கூடிய அபாயம் இருப்பதாக தான் முன்னரே எச்சரிக்கை செய்ததாகவும் அதனை மூடிவிடவே தான் விரும்பியதாகவும், ஆனால் அரசியல்வாதிகள் சிலரின் பிடிவாதப் போக்கினால் இராணுவம் அங்கு பேரிழப்பைச் சந்திக்க நேர்ந்ததாகவும் அப்போதைய இராணுவத் தளபதி லெப் ஜெனரல் றொகான் தலுவத்த குற்றம்சாட்டியிருந்தார்.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக ஜயசிக்குறு இராணுவ நடவடிக்கையின்போது சிறீலங்காவின் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுரத்த ரத்வத்த தொடர்ச்சியாக அறிவித்த காலக்கெடுக்கள் இராணுவத்தினர் மத்தியில் பெரும் அழுத்தத்தையும் எரிச்சலையும் ஏற்படுத்தியதுடன் இதுகுறித்து இராணுவ அதிகாரிகள் பலர் செய்தியாளரிடம் தமது அதிருப்தியையும் தெரிவித்துக்கொண்டனர். அதாவது பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த அறிவித்த அரசியல் காலக்கெடுக்கள் தம்மை அவசர இராணுவ நடவடிக்கைகளுக்குள் தள்ளுவதாகவும் அதனால் நாம் பெரும் இழப்புக்களைச் சந்திக்கவேண்டி ஏற்பட்டதாகவும் இராணுவம் குறைப்பட்டுக்கொண்டது.

இவ்வாறான நிலையில் கிளிநொச்சி இராணுவ முகாம் புலிகளிடம் முற்றாக வீழ்ச்சியடைந்ததும் யுத்தகள நிலவரம் குறித்து இராணுவத்தரப்பு கொடுத்த விளக்கமே அமைச்சர் ரத்வத்தைக்கும் தெரியாமல் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவே ஜயசிக்குறுவை இடைநிறுத்த வேண்டிய நிலையை ஏற்படுத்தியது.

பின்னர் மன்னார் மாவட்டத்தில் ரணகோஷ இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட முன்னர் அனுராதபுரத்தில் அது குறித்து ஆராய கூட்டப்பட்ட ஆலோசனைக் கூட்டத்தில் அமைச்சர் அனுருத்த ரத்வத்தவுக்கும் இராணுவத் தரப்புக்குமிடையே வார்த்தைப் பிரயோகங்கள் ஏற்பட்டபோது இயலாதவர்கள் விலகி நிற்கலாம். யுத்தத்தை தான் நடத்திக் காட்டுவதாக பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த கூறியதாக தகவல்கள் வெளிவந்திருந்தன.

இதன் பின்னர் ஆனையிறவில் இராணுவம் தோற்றோடியபோது அதற்கு விளக்கமளிக்கும் வகையில் சிறீலங்கா இராணுவத் தளபதி ஆளணிப் பற்றாக்குறை பற்றியும் நவீன ஆயுதங்கள் இன்மை குறித்தும் பேசியபோது, அதற்குப் பதிலளிக்கும் வகையில் "இராணுவம் இலக்கின்றி எறிகணைகளைப் பாவிப்பதால் புலிகளுக்கு இழப்பை எற்படுத்த முடியவில்லை" எனப் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் கூறியிருந்தார். இப்போது அதற்கும் ஒருபடி மேலேபோய் இராணுவத்தினருக்கு உற்சாகம் ஊட்டி யுத்தத்தில் ஈடுபடச் செய்யும் திறமை இராணுவத் தலைமைக்கு இல்லை என்பது போன்ற குற்றச்சாட்டை வெளியிட்டிருக்கிறார்.

அதாவது கடந்த மாதம் தான் யாழ் சென்றபோது தென்மராட்சியிலுள்ள மேலும் பல படைநிலைகளிலிருந்து இராணுவத்தை வெளியேற்ற இராணுவ அதிகாரிகள் தயார் நிலையில் இருந்ததாகவும், ஆனால் தான் எடுத்த ஓர் அரசியல் முடிவு மூலமே அது தவிர்க்கப்பட்டதாகவும் கூறியிருக்கிறார். மேலும் தனது சந்திப்பின் மூலம் படையினர் ஊக்கமடைந்திருப்பதாகவும் கூறியிருக்கிறார். இதனை அவர் வெளிபடையாக வெகுசனத் தொடர்பு சாதனங்களுக்குத் தெரிவித்திருப்பதானது இராணுவத் தலைமையின் திறமையின்மை குறித்து அவர் வெளிப்படையாகவே விமர்சிப்பது போன்றதாகும்.

ஆனால் இங்கு முக்கியமாகக் கவனிக்கப்படவேண்டிய விடயம் என்னவெனில் இராணுவத் தலைமை விரும்பாத யுத்த மூலோபாயத்தை வகுத்தது சிறீலங்காவின் அரசியல் தலைமையே. அத்துடன் ஆயுத தளபாடங்கள் என்ற ரீதியில் இராணுவம் கேட்டுக்கொண்ட பலவற்றைப் பூர்த்திசெய்த போதும் ஆளணி விடயத்தில் அவ்வாறு பூர்த்திசெய்ய அதனால் முடியவில்லை என்பதும் வெளிப்படையே. மேலும் பல முறை இராணுவத் தலைமை எச்சரிக்கை செய்தும்கூட அவற்றையெல்லாம் கவனத்திற் கொள்ளாது அரசியல் இலாபம் கருதி இராணுவ நடவடிக்கைகளுக்கு தூண்டியதும் அரசியல் தலைமையே.

இவ்வாறான நிலையில் பழியை தனியே இராணுவத் தலைமையில் மட்டும் போட்டுவிடுவதற்கு அரசியல் தலைமை முயல்வது எதிர்காலத்தில் பல விளைவுகளை ஏற்படுத்தக் கூடியதாகும்.

■





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆனையிறவுத் தளத்தொகுதிகளை அழித்து நிலம்மீட்ட புலிகள்சேனை வலிகாமம் மற்றும் தென்மராட்சியில் புதிய போர்முனைகளைத் திறந்து வீரசாதனை புரிந்து வருகின்றது.

குடாநாட்டை மீட்டெடுக்கும் இராணுவ இலக்குடன் ஓயாத அலைகள் என்ற பெயரிலான ஒரு தொடர் சமரை தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்கள் திட்டமிட்டு நேரடியாக நெறிப் படுத்தி வருகின்றார். ஆக்கிரமிக்கப்பட்டிருந்த வன்னிநிலத்தின் பெரும் பகுதியையும் குடாநாட்டின் கணிசமான நிலத்தையும் விடுவித்தவாறு புலிகள்சேனை பெருவெற்றிபெற்று முன்னேறி வருகின்றது.

இந்த இராணுவ பிரளயத்திற்குள் சிக்கி சிங்களப்படைகள் நிலைகுலைந்து நிர்க்கதிக்குள்ளாகி பேரழிவையும் பெருத்த அவமானத்தையும் அனுபவித்தபடி உள்ளது.

குடாநாட்டு ஆக்கிரமிப்பென்பது சந்திரிகா அரசாங்கம் செய்த மாபெரும் வரலாற்றுத்தவறு என்ற தலைவர் பிரபாகரனின் கூற்று தீர்க்கதரிசனமான உண்மையாக நடத்தேறிவருகின்றது. தமிழரின் விடுதலைப் போராட்டம் சர்வதேசத்தின் கவனத்தை முழுமை யாக ஈர்த்துவிட்டது. சக்தி வாய்ந்த உலகத் தொடர்பூடகங்களின் தலைப்புச் செய்திகளாக குடாநாட்டுப் போர்க்கள நிலவரம் உள்ளது. 21ஆம் நூற்றாண்டின் முதற் தேச அரசாக (NATION STATE) தமிழீழம் மலர்ந்துவரும் வரலாற்று நிகழ்ச்சியைக் கண்டு ஈழத் தமிழினம் குதூகலம் அடைந்து வருகின்றது.

அழிவுகரமான படையெடுப்புக்கள் சூழ்ச்சிகரமான சமா தானப்பொதிகள் என்ற இருமுனைத் தாக்குதல் திட்டங்களுடன் தமிழரின் விடுதலைப் போராட்டத்தை இராணுவரீதியாகவும் அரசியல்ரீதியாகவும் முறியடிக்க சந்திரிகா அரசாங்கம் வரைந்த ஏழுவருட வரலாற்றைக்கொண்ட நாசகாரத்திட்டத்தை புலிகள் இயக்கம் முறியடித்துவிட்டது.

வடபுலப் போர்முனையில் சுழன்றடித்துவரும் ஓயாத அலை கள் படைநடவடிக்கை சிங்களப்பேரினவாதத்தின் மூலோபாய அரசியலையும் தந்திரோபாயத் திட்டங்களையும் செயலிழக்கச் செய்துவிட்டது.

ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட ஆளணியையும் அதிநவீன இராணுவத் தளபாடங்களையும் கொண்ட முப்படையாலும், கவசமூட்டப்பட்ட சிங்கள இராணுவ இயந்திரம் இன்று தமிழர் சேனையின் போர்வலுவிற்கு ஈடுகொடுக்க முடியாது புறமுதுகிட் டோடிக் கொண்டிருக்கின்றது.

"சாத்தியமில்லை என்று ஒன்றுமில்லை" (Nothing imposible) என்ற தாரகமந்திரத்தை செயற்படும் சித்தாந்தமாக வரித்து புலிகளின் இராணுவபலத்தை ஒடுக்க உருவாக்கப்பட்ட சிங்களவீரத்தின் சின்னங்களான கொமாண்டோ அணிகள், குடாநாட்டுப் போர்முனையில் திண்டாடியபடி உள்ளன. இத்தகைய



வீழாது என ஆழ வேரோடிநின்ற படைவிடு கூர்மிளிரும் தலைவன் போர்வாளில் வீழ்ந்ததுகாண்!

பாழ
புலி

உறுதிப்பிரமாணங்கள் ஒரு ஆக்கிரமிப்புப்படைக்கு உகந் ததாக ஒருபோதும் விளங்கமாட்டாது என்ற வரலாற்று உண்மை குடாநாட்டுப் போர்முனையில் நிதர்சனமாகி வருவதை உலகம்அவதானித்தபடி உள்ளது.

மீளமுடியாத ஒரு இராணுவத்தோல்விக்குள் சிங்களப் படைகள் சிக்குண்டிருக்கும் இந்த வேளையிலும் தமிழரின் இனப்பிரச்சனையை இராணுவ வழிமுறை மூலமே தீர்ப்பது என்ற பேரினவாத நிலைப்பாட்டை சந்திரிகா அரசாங்கம்

# குடாநாட்டைமீட்கும் வரலா

# சிங்களஇராணுவம் திணறு

# புலிப்படை சரித்திரம் படைக்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





கி பகைவாழும் யாழ்மண்ணின் துயர்போக்க
னிகள் பாய்ந்தனகாண், தலைவன் படைநடத்த!

மாற்றியமைக்க முயலவில்லை.

அரச பொருளாதாரத்தின் கணிசமான பகுதியை போருக்குச் செலவிட்டு இப்போது அதுவும் போதாதென்று போர்க்கால நிலையைப் பிரகடனப்படுத்தி மேலும் பண ஒதுக்கீட்டைச்செய்து தனியாரின் சொத்துக் களையும் உள்வாங்கி சிங்களத்தின் போர் இயந்திரத்திற்காக செலவிட அரசாங்கம் முடிவெடுத்துள்ளது.

ஒரு தேசிய நெருக்கடிக்குள் ஒரு அரசு சிக்குண்டிருக்கும்போது நெருக்கடியின் பரிமாணங்களை இடித்துரைத்து கொள்கை மாற்றங்களில் ஈடுபடும்படி அரசாங் கத்தை வற்புறுத்தவேண்டிய ஜனநாயக கடமையைக் கொண்டுள்ள சிங்களத் தொடர்பூடகத்துறை அவ்விதம் செய்யாமல் நெருக்டியை மேலும் சிக்கலாக்கும் வகையில் போர்வெறியைக்கக்கி குடாநாட்டில் சிக்குண்டுள்ள சிங்களப் படையினரை ஒரு மரணப் பொறிக்குள் தள்ள அரசாங்கத்துடன் கைகோர்த்து நிற்கின்றது. அழிவுகரமான விளைவுகளை ஏற்படுத்தவல்ல இந்தப் பொறுப்புணர்ச்சியற்ற வெறிச் செயலைக் கண்டு உலகசமுதாயம் அதிர்ச்சியடைந்துள்ளது.

இது ஒருபுறமிருக்க, வெற்றிலைக்கேணி - கட்டைக்காட்டுப் பகுதிகளை மீட்டெடுத்த ஓயாத அலைகள் - 3 கட்டம் மூன்றின்போது வலிகாமத்தில் ஒரு முனையையும் (கிழக்கு அரியாலை) தென்மராட்சியில் ஒரு முனையையும் (தனங்கிளப்பு) முன்னேற்பாடாகத் திறந்துவைக்கத் திட்டம்வகுத்த தலைவர் அவர்கள் இப்போது, திறக்கப்பட்ட அந்த முனைகளூடாக தமிழர் சேனையை நகர்த்தி குறைந்த இழப்புக்களுடன் குடாநாட்டுச் சமரில் புலிப்படை மேலாதிக்கம்பெற வழிசமைத் துள்ளார்.


இந்தச் சண்டைகளில் சிறப்பு எல்லைப்படை மற்றும் எல்லைப்படை வீரர்களின் திறமையான செயற்பாடுகள் வெற்றிக்கு உறுதுணையாக இருந்துவருவதுடன் தமிழர் சேனையின் பலத்தையும் அதிகரிக்கச் செய்து இறுதி வெற்றிபற்றிய நம்பிக்கை யையும் உறுதியாக்கியுள்ளனர்.

சிங்களப் படைக்கு எதிராக ஆயுதம் தூக்கிப்போராட எமது மக்கள் எடுத்த தீர்மானமும் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் வழங்கிவரும் பொருளாதாரப் பங்களிப்பும் வெற்றிகரமாக நடந்துவரும் நிலமீட்புச்சமரில் மிகமுக்கிய இடத்தை வகிக்கின்றன.

சிங்களப் படையுடன் ஒப்பிடும்போது குறைந்த எண்ணிக்கையான போராளி களுடன், மட்டுப்படுத்தப்பட்ட ஆயுதவளத்தையும் வைத்துக்கொண்டு சமரில் வெற்றி நடைபோடும் தலைவர் பிரபாகரனின் தலைமைத்துவத்தை உலக இராணுவ ஆய்வாளர்கள் வியப்புடன் உற்றுநோக்குகின்றனர். 21ஆம் நூற்றாண்டின் புகழ்பூத்த இராணுவ மேதையாக, தலைவர் பிரபாகரனை உலகம் வியந்துரைக்கத் தொடங்கியுள்ளது.

ஆனையிறவு வீழ்ச்சியுடன் குடாநாட்டுச் சமர்க்களத்தின் இராணுவச் சமநிலை புலிகள் இயக்கத்திற்குச் சார்பாகத் திரும்பியுள்ளது. குடாநாட்டிலிருந்தும் ஒட்டுமொத்தமான சிங்களப் படைகளைத் துடைத்தெறிந்து தமிழீழப் போர்க்களத்தின் இராணுவ சமநிலையையும் புலிகள் பக்கம் மீட்டெடுக்கும் எமது அரசியல் இலட்சியத்தை அடையும் உறுதியுடன் தமிழீழமக்கள் செயற்படவேண்டிய தருணம் இதுவாகும். இது அற்புதமான ஒரு வரலாற்றுக் கட்டம். இந்த வரலாற்றுச் சந்தர்ப்பத்தை ஈழத்தமிழர்களாகிய நாங்கள் தக்கவாறு பயன்படுத்துவோம் என்று உறுதிமொழி எடுத்துக்கொண்டு புதியவரலாற்றைப் படைப்போம். ■

றுச்சமர்
கின்றது
கின்றது




தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net









உலகப்பரப்பில் தமிழர் வாழும் நாடுகளில் ஓயாத அலைகள் மூன்று எழுச்சி வி







27-05-2000 சனிக்கிழமை சுவிற்சர்லாந்து பேர்ண் மாநகரில் பேயா எக்ஸ்போ மண்டபத்தில் ஓயாத அலைகள் எழுச்சி விழா சிறப்புற நடந்தேறியது. இதன்போது 5000றக்கு அதிகமான மக்கள் எழுச்சியுடன் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் தமிழகத்தில் இருந்த வருகை தந்திருந்த இன்தாம் இணைவலய முக்கியஸ்தர் சௌரிராசன் சிறப்புரை ஆற்றினார். மற்றும் தமிழகத்தைச் சேர்ந்த புஸ்பவனம் குப்புசாமி குழுவினரின் இசைநிகழ்ச்சியும் இடம்பெற்றது. பங்களிப்புக்களை அள்ளிவழங்கினர்.










14-05-00 அன்று தமிழீழ விடுதலைப் புலிகள் இத்தாலிப் பணியகத்தினால் ஆனையிறவுப் படைத்தளம் தமிழர் சேனையிடம் வீழ்ந்ததன் வெற்றிவிழா எழுச்சியுடன் கொண்டாடப்பட்டது. பலர்மோ கப்பல் கோயில் மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வில் பலநூற்றுக் கணக்கான மண்டபம் நிறைந்த மக்கள் கலந்து கொண்டனர். இதன்போது இத்தாலிப் பணியகக் கலைபண்பாட்டுக் கழகத்தினரின் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net









வும் ஆனையிறவு வெற்றிவிழாவும் உணர்வுடன் கொண்டாடப்பட்டு வருகின்றன.









18-05-00, 19-05-00 ஆகிய இரு தினங்களில் ஜேர்மனியில் ஓயாத அலைகள் எழுச்சி விழா சுக்காட் நகரிலும்,கேர்ண் நகரிலும் வெகு விமரிசையாக நடந்தேறியது. இவ்விரு நிகழ்வுகளிலும் 3500ற்கும் மேற்பட்ட ஜேர்மன் வாழ் தமிழீழ மக்கள் கலந்து கோண்டனர். இந்நிகழ்வில் "தமிழர்தாகம்" என்ற இசைதட்டு வெளியிட்டு வைக்கப்பட்டதோடு, தமிழின உணர்வாளரும் தமிழகத்திலிருந்து வருகைதந்திருந்த தமிழ் தேச பொதுவுடமைக் கட்சியின் பொதுச் செயலாளர் பெ.மணியரசனின் சிறப்புரையும் இடம்பெற்றது. இந்நிகழ்வுகள் இரண்டிலும் எழுச்சிப்பாடகர் புஸ்பவனம் குப்புசாமியின் எழிச்சி இசையும் இடம்பெற்றது.



14-05-00 அன்று பிரான்ஸ் நாட்டில் ஆனையிறவு வெற்றி விழா பாரிஸ் புறநகர் பகுதியில் அமைந்திருந்த லாப் பிளான சென்டெனிஸ் மண்டபத்தில் மாலை ஐந்துமணி யளவில் சிறப்புற நடந்தேறியது. இந்நிகழ்வில் 2000ற்கும் அதிகமான மக்கள் கலந்து கொண்டு தமது எழுச்சியை வெளிப்படுத்தினர். இவ்வெற்றி விழாவில் பேராசியர் செவாலியே சுகிர்தராஜ் அவர்களும் கலந்து கொண்டு உரையாற்றினார்.





18-06-00 அன்று கனடா ஒன்ராறியோ பாராளுமன்ற முன்றலில் உலகத் தமிழர் இயக்கத்தினால் நடாத்தப்பட்ட வெற்றி விழாவில் இருபதினாயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் உணர்வு பூர்வமாகத் திரண்டு தமது பேரெழுச்சியை வெளிப்படுத்தியுள்ளனர். ஓயாத அலைகள் மூன்றின் மூலம் தமிழ் மக்களின் தாயகமண் மீட்கப்பட்டமையும், சிங்களத்தின் பலம் பொருந்திய ஆனையிறவுப் பெருந்தளம், விடுதலைப் புலிகளால் வெற்றிகொள்ளப் பட்டமையையும் கொண்டாடும் முகமாக நடந்த நிகழ்வில் தமிழகத்தில் இருந்து தமிழர் தேசிய இயக்க தலைவர் பழ. நெடுமாறன் மற்றும் ஒன்ராறியோ பாராளுமன்ற உறுப்பினர் திரு.ஜிம் கரியாணி ஆகியோர் உரையாற்றினர். இந்நிகழ்வில் தமிழீழ மருத்துவ நிதியத்திற்காக கனடா வாழ் தமிழ் மக்கள் பணமாகவும் நகைகளாகவும் அள்ளி வழங்கினர்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தொன்மைத் தமிழே! உ
# ஈழம் வெல்லும்! தமி

“தொன்று நிகழ்ந்தது அனைத்தும் அறிந்துள தொல்புவிவாணர் களும் - என்றறியாத இயல்பினள் எந் தமிழ்த் தாய்”

என்று தமிழ்த்தாயின் சிறப் புப் பற்றி பாரதி இப்படிக் கூறு கின்றான். வரலாற்றுப் புகழ் மணங்கமழும் தமிழின் தொன்மை பற்றி, சிறப்புப் பற்றி, இனிமை பற்றி, அதன் எளிமை பற்றி எழுத்தில் அடக் கிவிட முடியாது. தமிழ் மொழி யின் காலத்தை எவரும் கணித் துக் கூறுவதற்கில்லை. ஏனெ னில் அது ஒரு காலங்கடந்த மொழி. புதைபொருட்களும், கல்வெட்டுக்களும், காவியமும், ஓவியமும், காவிரியும், வைகை யும், கட்டிடமும், சிற்பமும் தமிழின் தொன்மையை சுட்டிக் காட்டிக் கொண்டிருக்கின்றன.

உலகமொழி ஆராய்ச்சி யாளரில் சிலர் “தமிழ்மொழியே உலகின் முதல் மொழி” எனக் கூறுவர். இற்றைக்கு 300 ஆண்டு களுக்கு முன்னே இத்தாலி நாட்டிலிருந்து தமிழகத்திற்கு வந்த பெஸ்கி பாதிரியார் என்கிற திரு. வீரமாமுனிவர், தமிழின் தொன்மையை அறிந்து வியந்து “தொன் னூல் விளக்கம்” என்னும் நூலை எழுதி னார். இப்படியான சிறப்புக்களைக் கொண்ட மொழியினை “தமிழுக்கும் அமு தென்று பேர்! அந்தத் தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்!”என்று பாரதி தாசனும் பாடினான். இனிமையான தொன்மையறியாத மொழி என உலக ஆராச்சியாளர்களால் போற்றப்பட்ட மொழி, அறிஞர்களாலும், புலவர்களாலும் உயிரிலும் மேலாக ஆராதிக்கப்பட்ட எங்கள் தமிழ்மொழியின், தமிழ்த் தாயின் இன்றைய நிலை என்ன?

காலத்திற்குக் காலம் அந்நியரின் படையெடுப்புக்களினால் கட்டுண்டு, சிறைப்பட்ட தமிழ்த் தாய், அவ்வப்போது தமிழ்ப் பேரரசுகளின் எழுச்சியினால், வீரத்தினால் செழிப்புற்று தலைநிமிர்ந்து நின்றவள், இன்று மொழி வாழத் தனக் கோர் தனிநாடு இன்றித் தவிக்கின்றாள்.


தாய்த் தமிழகத்திலேயே தமிழ்மொழி ஊசலாடுகின்றது. சொந்த நாட்டில், சொந்த மொழியில் கல்வி கற்பதற்கே எதிர்ப்புக்கள். தமிழ்மொழிக் கல்வித் திட்டத்தை அமுலாக்குவதற்காக, தமிழ் ஆர்வலர்கள், புலவர்கள் ஆர்ப்பாட்டம் செய்கின்ற அளவிற்கு, உரிமைச் செம் பயிருக்கு வேராக தமிழ்மொழி தள்ளாடு கின்றது. வந்த மொழியே சொந்த மொழி யென சொந்தம் கொண்டாடுகின்றனர். வாயாரப் போற்றுகின்றனர். நாகரிகத்தி லும் மேம்பட்ட மொழியான தமிழ்மொழி யைவிட அந்நிய மொழியான ஆங்கில மொழியே நாகரிக மொழியென்கின்றனர்.

பிறமொழிகளுக்கு இல்லாத தனிச் சிறப்பு இந்த தமிழ்மொழி ஒன்றுக்கு மட்டுமே இருக்கிறது என்பதை ஏனோ மறந்திட்டனர். உலக அறிஞர்களிற் பலர் தமிழைக்கற்று மிக மிகப் பாராட்டியிருக் கின்றனர். தமிழ் நன்கறிந்த ஆங்கிலேயப் பேரறிஞர் போப்பையர், தான் சாகும் போது தன்னுடைய கல்லறைக் கல்லில் “தமிழ் மாணவன்” என்று எழுதும்படி வேண்டி உயிர் துறந்திருக்கின்றார். இற்றைக்கு 2000 ஆண்டுகளுக்கு முன் தோன்றிய தமிழின் செல்வமாகிய “திருக் குறள்” உலகப்பொது மறையாகப் போற்றப் படுகின்றது. இத்தகைய சிறப்பைப் பெற்ற தமிழ்மொழி பிறந்த தாய்த் தமிழகத்திலே தமிழ் மாணவன் தமிழ் படிக்க வெட்கப் படுகின்றான் என்று அறியும்போது நெஞ் சம் வேதனையில் கனக்கின்றது.

மெல்லத் தமிழினிச் சாகும் - அந்த மேற்கு மொழிகள் புவிமிசை ஓங்கும் என பேதையொருவன் உரைத்ததைக் கேட்டு, அன்றே வெகுண்டெழுந்தான் பாரதி. இன்று அந்தப் பாரதி இருந்திருந்தால் தமிழகத்தின் நிலை கண்டு வெட்கித் தலை குனிந்திருப்பான்.

ஆயினும் பாரதி கண்ட கனவை, பாரதிதாசன் கொண்ட வேட்கையை, ஈழத் தமிழ் மறவர்கள் இன்று நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றார்கள். இன்று இப் பாவலர் வாழ்ந்திருந்தால் அன்னைத் தமிழுக்காக தலைகொடுக்கும் கரிகாலன் படையையே கவிதைக் கருப்பொருளாக் கியிருப்பார். பாடப்புத்தகத்தில் ஈழத்தமிழ் வரலாற்றையே மாற்றியமைத்த சிங்களப் பேரினவாத அரசிற்கு, தமிழன் வரலாற்றை, நெஞ்சுரத்தை அடிக்கு அடி மூலம் கற்பிக் கின்ற எங்கள் பாட்டுடைத் தலைவனைப் பாடியிருப்பார். தரணியாண்ட தமிழ்த் தாய்க்கு ஓர் தனிநாடு வேண்டி, எந்த வொரு நாட்டு உதவியுமின்றித் தனித்து நின்று போராடும் எங்கள் தன்னிகரில் லாத் தலைவனை உளமார வாயார வாழ்த்திப்போற்றி நிற்பார்.

“ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு” புலம் பெயர் ஈழத்தமிழர்களும், தாய்மொழியின் தனிச்சிறப்பை, அதன் தொன்மையை உணர்ந்து எதிர்காலச் சந்ததிகள் ஏற்ற முடனும், சுபீட்சத்துடனும் வாழ, தமிழ் மொழியினைச் சிறந்த முறையில் கற் றுக்கொடுக்க வேண்டும். அதற்காக வேற்று மொழிகளைக் கற்றுக்கொள்ளல்






தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# யிரே ! வாழும் !





**"தமிழ் ஈழம் தவிர வேறு தீர்வுக்கு வழியில்லை"**
**புதுவையில் நூல் வெளியீட்டு விழா**

புதுவை நா. நந்திவர்மன் அவர்களால் ஆக்கப்பட்ட "தமிழ் ஈழம் தவிர வேறு தீர்வுக்கு வழியில்லை" என்ற சிறு கைநூல் வெளியீட்டு விழா கடந்த 04-06-00 அன்று புதுவையில் இடம் பெற்றது. இந்நிகழ்வில் தமிழீழ ஆதரவாளர் ஒருங்கிணைப்புக் குழுவின் அமைப்பாளர் திரு. பழ. நெடுமாறன் அவர்கள் கலந்து கொண்டு நூலினை வெளியிட்டு வைத்தார்.

தவறு என்று அர்த்தம் கொள்ளக்கூடாது. ஒரு குழந்தைக்கு ஒன்பது வயதுக்குள் ஏழு மொழிகளைக் கற்கக்கூடிய ஆற்றல் இருக்கின்றது. பெற்றோர்தான் அதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என ஒரு அறிவியல் ஆராய்ச்சியாளர் கூறுகின்றார். ஆகவே தாய் மொழியுடன் மற்றைய மொழிகளைக் கற்றுக் கொடுங்கள். பிள்ளைகளின் எதிர்காலம் சிறப்புடன் அமைந்து நாட்டுக்கும் வீட்டுக்கும் நற்செல்வங்களாக மிளிர்வார்கள்.

தமிழை ஊன்றிப் படித்தால் பண்பு வளரும், ஒழுக்கம் உயரும், அடக்கம் ஏற்படும், அன்பு மலரும். புலம்பெயர் நாடுகளில் காலத்திற்கு ஏற்றவாறு உடைகளை மாற்றிக்கொள்ளலாம், உணவு வகைகளை மாற்றிக்கொள்ளலாம் தவறில்லை. ஆனால் தாய்மொழியை மறந்து அந்நியமொழிக்கு அடிமைப்பட்டுவிடாதீர்கள். "தாய்மொழி மறந்தார் பெற்ற தாயினை மறந்தார்" என்ற பழிச் சொல்லுக்கு ஆளாகிவிடுவீர்கள். இத்தனைக்கும் மேலாக தமிழ் மானம் காக்கப்போராடும் வீர மறவர்களுக்கு துரோகம் இழைத்தவர்களாகி விடுவோம்.

"இன்பத் தமிழ்க் கல்வி யாவரும் கற்றவர்
என்றுரைக்கும் நிலை எய்திவிட்டால்
துன்பங்கள் நீங்கும், சுகம் வரும், நெஞ்சினில்
தூய்மையுண்டாகிடும், வீரம் வரும்"

என்ற பாவேந்தர் பாட்டுக்கமைய வாழ்வோம். "வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாகட்டும்" என்ற வரலாறே ஈழத் தமிழனுக்கு இருக்க வேண்டும். தொன்மைத் தமிழ் உயிரே...! ஈழம் வெல்லும். தமிழ் வாழும். தமிழ் உயர்ச்சி பெற உதிரம் சிந்தி உயிர் கொடுக்கும் மறவர்க்கு உதவிடுவோம்.

**-ஈழவள்-**



வளம் கொண்ட மண்ணில்,
மணம் கொண்டு நாங்கள்
மலர் போல் விரிந்தோமே,
விலங்கோடு பூட்டி எம்மை
விளையாடும் கூட்டம்
வதை ஊட்டி மகிழ,
மறத்தமிழன் எங்கள்
பலங்கொண்ட கால்கள்
மடங்குண்டு கிடக்குமா......

-பாலன். பாரிஸ்-



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வெற்றிகள் தொடர வெற்றிகள் காப்போம்

சூரியக்கதிர்கள் நிலத்தைத் தீண்ட முன்னரே அப்பு ஆல மரத்தடிக்கு வந்து விட்டாரென்பதை அவருக்குப் பக்கத்தில் இருந்த குறைச் சுருட்டுகள் நவத்திற்கு உணர்த்தின. அப்புவின் செல்லப் பிராணியான செவி வளைந்தானும் அப்புவுடன் சேர்ந்து விடியற்காலையிலேயே எழுந்துவிட்டி ருக்கவேண்டும் என்பதை அது முன்னங் காலில் தலைவைத்து உறங்கிக் கொண்டி ருந்த காட்சி சொல்லாமற் சொல்லியது.

"என்னப்பு ரெண்டு கிழமையா உங் களைக் காணேல்லை" என்று நவம் குசலம் விசாரித்தான்.

"இந்தச் சனமெல்லாம் ஆனையிறவு அடியோடை, மருத்துவ நிதியத்துக்காக முண்டியடிச்சுக் கொண்டு காசு குடுத் ததுகளெல்லே... பின்ன நானும் பொது சனத்திட்டைக் காசு சேத்துக் குடுப்ப மெண்டு இந்த ஊரெல்லாம் அலைஞ்சு சேத்துக் குடுத்தனான்."

"ஒரு புதினம் கேள்விப்பட்டியளே அப்பு..."

"என்னடாம்பி?"

"இந்த ஆனையிறவு அடியிலை பூரிச் சுப்போன சனம்... அதாவது வெளிநாட் டிலை இருக்கிற எங்கடை சனம், நான் முந்தி... நீ முந்தி எண்டு போட்டி போட் டுக்கொண்டு மருத்துவ நிதியத்துக்குக் காசு குடுத்தவையாம்"

"உந்தப் புதினம் எனக்குத் தெரியா தடாம்பி... அது சரி எங்கை இருந்தாலும் எங்கடை சனம் தமிழீழத்து மண்ணை மறக்காம இருக்குதுகள் அது ஒண்டு போதும். அதுகள் புலம்பெயர்ந்தாலும் உளம்பெயராத சனங்கள் கண்டியோ... உடல்தான் கடல்கடந்து போச்சேயல்லா மல் உணர்வுகள் இங்கைதானடாப்பா..." அப்பு உணர்ச்சிவசப்பட்டுப்போனதை நடுங்கும் குரல் உணர்த்திற்று.

"அதை விளங்காம உலகநாடெல்லாம் பொய்ப்பிரச்சாரம் செய்யிறா அம்மை யார்... உவவின்ரை அரசியல் வித்தை யளுக்கு எங்கடை சனம் இப்ப நல்லாப் பழக்கப்பட்டுப் போச்சுதுகளப்பு" நவத் தின் நண்பர்களில் ஒருவன் சிரித்தபடி கூறினான்.

"எண்டாலும் பொடியள் உவள் சந் திரிகா இப்பவும் அரசியல் நல்லாத்தான் செய்யிறாள்" அப்பு ஒரு நமுட்டுச் சிரிப் போடு சொன்னார்.

"ஏன்னப்பு... அரசாங்கம் தலையிலை 'பொட்'டெண்டு அடி வாங்கி நிக்கேக் குள்ளை போய் இப்பிடிச் சொல்லுறீங் கள்" நவம் வியப்போடு கேட்டான்.

"இந்த சிறீலங்கா அரசாங்கம் சூரி யக்கதிர் இராணுவ நடவடிக்கை எண்டு எங்கடை சனத்தையெல்லாம் படாதபாடு படுத்தினது. அப்ப எங்கடை சனம் சாரி சாரியா இடம்பெயர்ந்து போன பரிதா பத்தைப் பாத்து ஐக்கிய நாடுகள் சபையின்ரை பொதுச்செயலாளர் கண்ட னம் தெரிவிச்சவர். அதுக்கு சந்திரிகா வின்ரை பிரதான ஊதுகுழலான லக்ஸ் மன் கதிர்காமர் "இது பயங்கரவாதப் பிரச்சனை, உள்நாட்டுப் பிரச்சனை... இதிலை தலையிடாதையுங்கோ" எண்டு சொன்னவர். அது மட்டுமே நோர்வே அரசாங்கம் மூண்டாம் தரப்பு மத்தியத்து வத்துக்கு எண்டு முன்வர இது உள் நாட்டுப் பிரச்சனை... இதிலை நீங்கள் ஏன்மூக்கை நுழைக்கிறியள் எண்டு இந் தப் பிக்குமார் நோர்வே நாட்டுத் தேசி யக்கொடியைக்கூட எரிச்சவை. அதைக் கண்டிச்சிருக்க வேண்டிய அரசாங்கமே தட்டிக்குடுத்ததுதானே"

"ஏனப்பு இப்ப நாலைஞ்சு மாசத் துக்கு முதல் ஐ. நாடுகள் உயரதிகாரி ஒருத்தர் சிறீலங்காப் பிரச்சனையைப் பேசித்தான் தீர்க்கவேணும் எண்டு சொல்ல, கதிர்காமருக்கு ரோசம் பொத் துக்கொண்டு வந்து என்ன சொன் னவர்எண்டது மறந்துபோச்சே... ஐ. நாடு கள் சபையின்ர வேலை நுளம்புக்கு மருந்தடிக்கிறதுதான் எண்டு கிண்டலடிக் கேல்லையே..."

"இப்பிடியான அமைப்புகளும் நாடு களும் கைகொடுக்கவர வேண்டா மெண்டுபோட்டு இப்ப 'சூரியக்கதிர்' அஸ்தமிக்கப்போகுது எண்டவுடனை உதவிக்கு ஓடியாங்கோ எண்டு எல் லாரையும் கூப்பிடுகினம்.. சிறீலங் கான்ரை நியாயங்கள் நேரத்துக்கு நேரம் நிறம்மாறுது" அப்பு சுருட்டை ஆழமாக உள்ளிழுத்தபடி கூறினார்.

"ஆபத்து! ஆபத்து! எண்டு சந்தி ரிகாபோட்ட சத்தத்துக்கு எந்த நாடு செவிசாய்க்கப் போகுது எண்டதுதான் விளங்கேல்லையப்பு. இஸ்ரேல் வரப் போகுதெண்டு சில செய்திகள் செல்லு குது. இந்தியா வரப்போகுதெண்டு சில செய்திகள் சொல்லுகுது... எல்லாம் ஒரே குழப்பமாக் கிடக்கப்பு" நவம் சலித் துக்கொண்டான்.

"ஓயாத அலை அடிச்ச அடியிலை மாமனுக்கும் மருமோளுக்கும் பேய் முளுசாட்டமாப் போச்சுது. தாங்கள் குழம்பினது பத்தாதெண்டு நாலைஞ்சு நாடுகளையும் குழப்பிப்போட்டினம்... கிட் டத்தட்ட நாப்பதினாயிரம் ஆமிக்காரர் குடாநாட்டு முற்றுகைக்கு நடுவிலை மாட்டிக்கொண்டிருக்கினம். அவையளை மீட்டுக்கொண்டு வாறதுக்கு உதவச் சொல்லி உலக நாடுகளிட்டை மண்டி யிட்டுக் கேட்டவை. ஆனா... அவை யின்ரை உள்நோக்கம் குடாநாட்டிலை இருந்து உடனடியா படைகளை வாபஸ் வாங்கிறது இல்லை... நவீன ஆயுத உதவியளைப்பெற்று எங்கடை பெடிய ளோடை மோதி, எங்கடை போராளியள் மீட்டெடுத்த நிலங்களைத் திரும்பவும் ஆக்கிரமிக்க வேணுமெண்ட பேராசை தான். குடாநாட்டிலை இருக்கிற சனங் களை ஒரு திறந்தவெளிச் சிறைச்சாலைக் குள்ளை வைச்சு ஆட்டிப் படைச்சு உருசி கண்டவையெல்லே" அப்பு ஒரு கோபச் சிரிப்பை உதிர்த்தார்.

"கெடுகுடி சொற்கேளாது எண்ட மாதிரி இவ்வளவு அடி வாங்கின பிறகும் அவைக்கு ஆசை மட்டும் போகேல்லை"



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இளைஞர்களில் ஒருவன் அதை ஆமோதித்தான்.

"ஆக்கிரமிப்பாளரின்ரை நோக்கம் தெரியாத உலகநாடுகள் எப்ப சிறீலங்கா மண்டியிட்டுக் கையேந்தும் எப்ப நாங்கள் ஆயுதங்களை விக்கலாம் எண்டு காத்துக் கொண்டிருந்ததுமாதிரி போட்டி போட்டுக் கொண்டு உதவி செய்ய வெளிக்கிட்டிருக்கினம்."

"ஏனப்பு இந்தியாவும் இலங்கைக்கு ஏதோ உதவி செய்யப் போறதா கதை அடிபடுகுது" நவம் விசனத்தோடு கேட்டான்.

"நவம்! இதிலை கனக்க அரசியல் காய்நகர்த்தல் இருக்குது கண்டியோ... முதலிலை இந்தியா இலங்கைக்கு எந்த விதமான இராணுவ உதவியும்செய்ய மாட்டனெண்டு அறிவிச்சுது"

"பிறகு ஏனப்பு மனம் மாறிப்போய் ஒரே தளம்பலா நிக்கினம்... ஒரு உறுதியான வார்த்தையையும் காணோம்"

"அதெல்லாம் ஒரு வித அரசியல் தந்திரம்தான். இந்தியா உதவி செய்ய மாட்டனெண்டு அறிவிச்ச உடனை இஸ்ரேல் போல நாடுகளிட்டை சிறீலங்கா போய் குய்யோ முறையோ எண்டு கத்தியழ, அவையும் பாத்தினம் தென்கிழக்காசியாவிலை காலூண்ட இதுதான் சரியான சந்தர்ப்பம் எண்டு... அதுதான் ஆயுத உதவி அது இதெண்டு ஆசை காட்டுகினம்... எங்கடை நாட்டை எங்களுக்குப் பிரிச்சுக் குடுக்க மாட்டனெண்டு சொல்லுற சிறீலங்கா முழு இலங்கையையுமே இன்னொருத்தனுக்குத் தாரை வாக்கிற மாதிரியான வேலையளிலை இறங்கி இருக்குது... இதைப் பாத்துக் கொண்டு இந்தியா சும்மா இருக்குமோ... இலங்கை கைமாற அது அனுமதிக்காது எண்டது தெரியுந்தானே... அதுதான் இந்திய மத்திய அரசு தன்ரை பிடியை எப்பவும் வைச்சிருக்கவேணும் எண்டிறதுக்காக 'நாங்கள் ஆயுத உதவி வழங்க மாட்டோம்... ஆனால்... மனிதாபிமான அடிப்படையிலை சிறீலங்காவுக்கு உதவி செய்வோம் எண்டுசொல்லுகுது" பழுத்த அரசியல்வாதியின் அறிவார்ந்த பேச்சாக அப்புவின் பேச்சு வெளிப்பட்டது.

"அதென்னப்பு மனிதாபிமான உதவி?"

"மனிதாபிமான உதவி எண்டது அந்தந்த நாட்டினரை அரசியல் நிலைப்பாட்டுக்கு ஏத்த மாதிரி உருவெடுக்கும்... இப்போதைக்கு இலங்கையிலை வேறை ஆரும் கைவைக்கக் கூடாதெண்ட நோக்கத்திலைதான் இந்தியா இப்பிடியொரு அறிக்கையை விட்டிருக்குது"

"அப்பிடியெண்டா அப்பு இந்தியா இராணுவ உதவி செய்யுமா செய்யாதா... திரும்பவும் தன்னுடைய இராணுவத்தை தமிழீழத்துக்கு அனுப்புமா அனுப்பாதா?" நவம் பொறுமையிழந்துபோய்க் கேட்டான்.

"தமிழீழம் கிடைக்குமா கிடைக்காதா எண்டு கேட்டா நிச்சயம் கிடைக்கும் எண்டு பதில் சொல்லலாம். சிங்கள ஆமிக்காரர் ஓட்டமெடுப்பினமா எண்டு கேட்டா ஓடுவினம் எண்டு யோசிக்காமச் சொல்லலாம். ஆனா... நீ கேக்கிற கேள்வி கொஞ்சம் சிக்கலான கேள்வி... அதுக்குக் காலம்தான் பதில் சொல்ல வேணும்"

"இப்ப காலம் சொல்லுற பதிலை எங்கடை போராளியளும் சொல்லக்கூடிய அளவுக்கு அரசியல் சதுரங்கத்திலை கெட்டிக்காரரா வந்திட்டினம்" நவம் பெருமை பொங்கச் சொன்னான்.

"உண்மைதான். ஆனா... இந்தியாவின்ரை நிலைப்பாடு என்ன என்பதை விளங்கிக்கொள்ளுறதுக்கு இந்தக் கிழவனுக்கு அறிவு பத்தாது. ஆனாலும் தமிழீழம் எண்டு ஒரு நாடு உருவாகிறதை இந்திய நலனுக்கு சாதகமில்லை என்று இந்தியா யோசிக்குது போல கிடக்கு. ஏனெண்டால் தமிழீழம் எண்டு ஒண்டை இந்தியா ஆதரிச்சா, இந்தியாவிலையும் தமிழ்நாட்டிலையும் பிரிவினை கோசம் எழும்பலாம் என்று தப்புக் கணக்கு போட்டிருக்கினம்... இதாலை நாடு துண்டாடப்படலாம் எண்டு இந்திய மத்திய அரசு பலமா யோசிக்குது போலை கிடக்கு. அதுதான் பிரச்சனை எண்டு அரசியல் ஆய்வாளர்களும் சொல்லுகினம். இந்தப் பிரிவினைப் பயம் இந்தியாவுக்கு இருக்கும் வரைக்கும் இந்தியாவின்ரை நடவடிக்கையள் குறிப்பிடும்படியா தமிழீழத்துக்குச் சாதகமா இருக்கும் எண்டு சொல்லேலாது"

"அப்பிடியெண்டா... இந்தியாவை எப்பிடி எங்களுக்குச் சாதகமா செயற்படத் தூண்டுறது?"

"இது கேள்வி" கிழவர் குதூகலித்தார்.

"எட பெடியா! உள்நாட்டிலும் சரி, வெளிநாடுகளிலும் சரி தமிழீழ மக்கள் தளராமல் அரசியல் பிரச்சார வேலையளிலை ஈடுபடவேணும். இலங்கை அரசாங்கத்தின் அரசியல், இராணுவ பலத்திலும் பார்க்க எங்கடை போராளியளின்ரை அரசியல், இராணுவ பலம் மேலோங்கி நிக்கவேணும்"

"அதைத்தானே கடந்த மாவீரர் உரையிலை எங்கடை அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் விளக்கமாய்ச் சொல்லியிருந்தார்" ஒரு இளைஞன் குறுக்கிட்டுச் சொன்னான்.

"ஓமோம்... அவர் பேசேக்குள்ளை இந்தியா என்றைக்கும் எமது நேசசக்தி எண்டும் சுதந்திர தமிழீழம் அமையும் பட்சத்தில் அந்த தமிழீழ அரசு இந்திய அரசுக்குப் பக்கபலமா இருக்குமேயல்லாமல் இந்திய உள்விவகாரங்களில் தலையிடாது எண்டும் சொன்னார். அதோடை இந்தியாவின்ரை தேசிய நலனுக்கோ அல்லது அரசியல், புவியியல் நலன்களுக்கோ விரோதமாக விடுதலைப் புலிகள் ஒருபோதும் நடக்கமாட்டார்கள் எண்டும் உத்தரவாதம் அளிச்சார். இப்படி அவர் பேசினது இந்தியா



-ஆலமரத்தடி அப்பு-



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வின்ரை காதுக்கு எட்டாமல் இருந்திருக் குமோ... நிச்சயமா எட்டியிருக்கும். அதோட இப்ப விடுதலைப் புலியளின்ரை கை அரசியல் ரீதியிலையும் சரி, இரா ணுவ ரீதியிலையும் சரி ஓங்கியிருக்கு... அதாலைதான் தமிழ்நாட்டிலையும் சரி வெளிநாட்டிலையும் சரி விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான அலை அடிக் கத் தொடங்கியிருக்கு. குறிப்பா தமிழ் நாட்டிலை எங்கடை போராளியளுக்கு ஆதரவான அலை ஓங்கி அடிக்கத் தொடங்கி இருக்கிறபடியா தமிழீழத்துக் குப் பாதகமான முடிவுகளை இந்திய மத்திய அரசு எடுக்கத் தயங்கும்"

"இந்தியா மட்டுமெண்டில்லை... நோர்வே போன்ற நாடுகளும் விடுத லைப் புலியளின்ரை கை ஓங்கியிருக் கிறபடியாலைதான் பேச்சுவார்த்தை முயற்சியளுக்கு முன்வருகினம். ஒரு சின்னக் குழுவா உலகத்தின்ரை கவ னத்தை ஈர்க்காமல் இருந்திருந்தா இப் பிடியான அடையாளம் கிடைச்சிருக்காது" இளைஞர்களில் ஒருவன் பெருமிதத் தோடு சொன்னான்.

"இப்படியான வரவாற்று முக்கியத்து வம் வாய்ந்த காலகட்டத்திலை வெளி நாட்டிலை வாழுற தமிழ்ச்சனங்கள் என்னவிதமா உதவி செய்யலாமெண்டு நினைக்கிறியள் அப்பு" நவம் ஆவ லோடு கேட்டான்.

"வெளிநாட்டிலை இருக்கிற எங்கடை தமிழர் அமைப்புக்களோடை சேர்ந்து ஒவ்வொரு தமிழ் மகனும் ஒவ்வொரு தமிழ் மகளும் அரசியல், பொருளாதார உதவிகளை மனமுவந்து, ஒற்றுமை யாய் செய்யவேணும் கண்டியோ... இராணுவ பலம் அதிகரிச்சா அரசியல் பலமும் தானா வரும்பாருங்கோ"



"அதுதானேயப்பு தமிழ்நாட்டுத் தலை வர்கள் பலரும் இப்ப விடுதலைப் புலிய ளுக்கு ஆதரவாக் கதைக்கினம்"

"அது மட்டுமே... இப்ப பத்திரிகையள் சஞ்சிகையளிலைகூட ஆதரவாத்தான் கட்டுரையள், செய்தியள் வருகுதாம்... வெளிநாட்டுப் பேப்பருகளிலையும் வானொலியளிலையும் எங்கடை ஊர்ப் பேருகள் அடிபடுகிற அளவுக்கு உலகத் தின்ரை பார்வை எங்களிலை குவிஞ்சு போய் இருக்குது. என்ன... அரியாலையை அரியலை எண்டு காலைப் பிடுங்கி றாங்களே தவிர எங்கடை ஊர்ப்பேரு களை வெள்ளைக்காரன் உச்சரிக்கக் கேக்க கொஞ்சம் சந்தோசமாத்தான் கிடக்கு"

"தமிழீழம் எண்டது விரைவிலை கிடைக்கும் எண்ட நிலைக்கு வந்திட்ட காரணத்தாலை நாங்கள் இனித்தான் வலுகவனமா இருக்கவேணும்" நவத்தின் குரலில் கவலையும் சந்தோசமும் ஒரு சேர ஒலித்தன.

"அரசியல், இராணுவ ரீதியாய் எங் கடை போராளியள் மேலோங்கி இருக் கிற நிலையைத் தொடர்ந்தும் பேண வேணும்... அப்பிடிப் பேணப்பட்டால் தான் இந்தியா உட்பட பல நாடுகள் தமி ழீழத்துக்கு ஆதரவான செயற்பாடுகளிலை இறங்குவினம் கண்டியளே"

"அதெல்லாம் பிரச்சனையில்லை. எங்கடையாக்கள்தான் இப்ப தொடர்ந் தும் வெற்றியளைக் குவிச்சுக் கொண்டு வருகினமே" என்றான் இளைஞர்களில் ஒருவன்.

"தம்பியவை... எங்கடை பிள்ளையள் குவிக்கிற வெற்றியளைக் காப்பாத்த வேண்டிய பெரும் பொறுப்பு எங்களெல் லாரையும் சார்ந்தது. அவங்கள் பாடு பட்டு, உயிர்த்தியாகம் பண்ணி தங்கத் தட்டிலை விடுதலையை எடுத்து நீட்ட அதைக் கையேந்தி வாங்கிற ஆக்களா நாங்கள் இருக்கக்கூடாது. நாங்களும் சேர்ந்து வெற்றிக்காகவும் கிடைச்ச வெற்றி யளைத் தக்கவைச்சுக் கொள்ளவும் பாடுபடவேணும்" கிழவரின் குரல் தழுத முக்கவும் இடைவிட்டுத் தொடர்ந்தார்.

"நான் முதல்லை சொன்னதுபோலை சிறீலங்கா அரசாங்கம் வெளிநாடுகளிட்ட மண்டியிட்டு நவீன இராணுவத் தளபாடங் களைப் பெற்று பாரிய இராணுவ நட வடிக்கைகளிலை ஈடுபட முயற்சிசெய்யும், புதுப் புது யுத்தியளைக் கையாளும். பாரிய இன அழிப்பைச் செய்ய எத் தனிக்கும். வெளிநாடுகளிலை இருந்து ஆயுதங்கள் கொண்டுவந்து இறக்கப் படுவதாயும் கேள்விப்படுறன்... என்ன அழிவு செய்யப்போறாங்களோ?" அப்பு ஆதங்கப்பட்டார்.

"கடைசி ஒரு இராணுவவீரன் இருக் கும்வரை யாழ்ப்பாண நகரத்தைப் புலி கள் கைப்பற்ற விடமாட்டினமாம். எண்டு மாமனும் மருமகளும் சூளுரைச்சிருக்கி னம்... அதோடை இழந்த ஆனையிறவை மீளக் கைப்பற்றிப் போடுவினமாம் எண்டு வேறை பகிடி விட்டிருக்கினம்" நவத்தின் கண்களில் குறும்பு கொப்பளித்தது.

"ஏதோ யாழ்ப்பாணக் காணிஉறுதி யெல்லாம் தங்கடை பேரிலை இருக்கிற மாதிரியெல்லோ நடப்படிச்சிருக்கினம்" அப்பு கேலி செய்தார்.

"அப்பு...! விடுதலைப் புலிகள் அரசி யலிலையும் வல்லவை எண்டு காட்டியி ருக்கினம். சிறீலங்கா அரசாங்கம் வெளி நாடுகளிட்டை ஆமியை மீட்கவேணும் உதவுங்கோ எண்டு ஒப்பாரி வைக்க, சரி சரி பிழைச்சுப் போங்கோ எண்டிறது மாதிரி ஆமியை வாபஸ் பெறுகிறதா இருந்தா தற்காலிக யுத்த நிறுத்தம் செய் யிறம் எண்டு சொன்னதன் மூலம் தாங் கள் ஒரு மனிதாபிமானமுடைய இனம் எண்டதை உலகநாடுகளுக்குக் காட்டியி ருக்கினம். இப்பிடி ஒரு சந்தர்ப்பத்தை சந்திரிகா அரசபடையளுக்குக் குடுக்காத தாலை உலக நாடுகளின்ரை மதிப்பிலை எங்கடை ஆக்கள் உயர்ந்தது மாத்திர மில்லை இன்னொரு நாட்டு இராணு வத்தை எங்கடை பிரச்சனையிலை தலை போட முடியாதபடிக்கு தந்திரமா நடந்தி ருக்கினம். அரசியலிலையும் சரி இராணு வத்திலையும் சரி... எங்கடை தலைவ ருக்குக் கிட்ட ஒருத்தரும் நிக்கேலாது" பெருமிதத்தால் நவத்தின் கண்கள் கலங் கிவிட்டன.

"வேறை எந்த இனத்துக்குமே கிடைக் காத வரம் எங்கடை தலைவர். அவர் ஈட்டித் தந்த வெற்றியளைப் பாராட்டினா மட்டும் போதாது. தொடர்ந்து வெற்றி யளைக் குவிக்கவும் ஈட்டின வெற்றியளைப் பாதுகாக்கவும் நாங்கள் எல்லாரும் உதவ வேணும். இது வெளிநாடுகளிலை வாழுற தமிழ்ச் சனத்தின்ரை தலையாய கடமை. இது காலமிட்ட கட்டளை. வர லாற்றுக் கடமை. எல்லாரும் சேர்ந்து தம் பிக்கு கை கொடுத்தால் வெற்றியள் தொடரும். தமிழீழம் மலரும்" என்று கூறியபடி அப்பு எழுந்தார்.

அதுவரை நல்ல தூக்கத்தில் இருந்த செவிவளைந்தான் சடாரென எழுந்து அப்புவைத் தொடர்ந்தது. ■



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## காவற் தூண்கள்

காலை வேளை
கண் விழித்தால்
கண்ணெதிரினில் --- புலிகள்
நிற்பர்
சந்ததி வாழ தாய்நிலம் விடிய
காவற் தூண்களாய் நிற்கும்
வீர மறவர்களே!
வீரத்தின் புதல்வர்களே,
விடுதலைப் போரினில்
வீரமுடன் நாம் எழுந்துவிட்டோம்
வீரர்களாகி நாம்
காவற் தூண்களாய் மாறுவோம்.

சு.அமரேசன்

## வரவேற்போம்

தமிழீழ வாசலிலே
நிறைகுடம் வைத்து!
வீதியெங்கும் தோரணம் கட்டு
குலை தொங்கும் வாழைகள்
வாசல் எங்கும் நாட்டு
சந்தனக்குழம்பையும்
ஆராத்தித் தட்டையும்
எடுத்து வா தங்கைச்சி!
புலி வீரன் வருகிறான்
அவனை பன்னீர் தெளித்து
வரவேற்போம்- மலர்
மாலை கொண்டு வா தம்பி.

ப.அ.சுதர்சன்

## மாற்றமும் உத்தரவும்

கூவும் சேவலுக்கும்
கரையும் காகத்துக்கும்
உதிக்கும் கதிரவனுக்கும்
நேர மாற்றமாம் ஏனெனில்
இங்கு நடப்பது இராணுவ
ஆட்சி
வீசும் காற்றுக்கும்
பொழியும் மழைக்கும்
எறிக்கும் வெய்யிலுக்கும்
பொங்கி வரும் அலைக்கும்
நீதிமன்ற உத்தரவு
தமிழர் தேசத்தில்
செயற்பாடுகளை நிறுத்த.

பொ.சிவரஞ்சன்.

## நடக்குது ஒரு விழா

இது ஒரு
புதுவித விழா!
உனது குழல்கள் யாவும்
எல்லா மொழிகளையும்
எல்லா நேரமும்
ஊதித்தள்ளிக் கொண்டிருக்க
விழாவிற்கு
ஊன்றுகோல் தாங்கிய உடல்கள்
காணாது போனமை பற்றிய
வற்றிய கண்ணீர் ஜீவன்கள்
கசங்கிய மலர்களையும்
முறிந்து போன தம் ஏணிகளையும்
ஏந்திச் செல்ல .... இது ஒரு
புதுவித விழா
உனது குழல்கள்
ஊதித் தள்ளின
இராகம்- ஜனநாயகம்
தாளம்- தேர்தல்

கை.சரவணன்




## ஆறாத சோகங்கள்

இருப்பை இழந்த பின்
கண்ணீர் ஆற்றில் நனைந்த
காயம்பட்ட உள்ளங்களின்
கால்கள் திசைகள் தெரியா
சாலைகளில் பயணிக்கின்றன
காலைக் கதிரவன் விடியலை
கண்ணீருடன் நோக்கும்
ஆறாத சோகங்கள்
மனித வாழ்வின் மகிழ்ச்சியான
நாட்கள் இறந்து கொண்டு
செயலழிந்து போன வாழ்வில்
நினைவுகளை நினைத்த பின்
உள்ளம் குமுறுகின்றது
இறப்புக்கள் தொடர்கின்றன
அவலங்களும் துயரங்களும்
சூழ்கின்றன எனினும்
இனிய விடியலுக்காக கால்கள்
பயணிக்கின்றன.

-சின்னக்குயில்.

## நிலவு

என்னுடைய
மூத்த பிள்ளையை
என் மடியில் இருத்தி
நிலவு காட்டி
சோறூட்டினேன்
இப்ப! என்ரை
கடைசிப் பிள்ளையும்
நிலவு பார்த்துத்தான்
சோறு தின்கின்றாள்
என் மடியில் இருந்தல்ல!?
வீட்டிற்குள் இருந்தபடி

ஆவரங்கால் சுதன்

## நிறைவிற்காய்

மாவீரர் துயிலும் இல்லத்தில்
தீப்பிளம்பேற்றிய வேளை
என் மகன்
பதிலிறுக்கச் சொன்னான்
நான் செத்தால்
தீப்பிழம்பேற்றுவாயா?
மாவீரனானால்
ஏற்றுவேன் என்றேன்.
இன்று
கருவியை ஏந்திவிட்டான்
நிறைவிற்காய்.

அன்ரூட்

## போராட்டம்

தமிழனுக்கு மானம் வேண்டும்!
மண்ணுக்கு கௌரவம் வேண்டும்!
மனதுக்குள் கபடம் வேண்டாம்!
உதட்டினில் பொய்மை வேண்டாம்!
கரங்களில் விலங்கு வேண்டாம்!
கால்களுக்குத் தடைகள்
வேண்டாம்!
சுவாசிக்கத் சுதந்திரக்காற்று
வேண்டுமென்று
அல்லவா எங்கள் தலைவன்
பலமிக்க போராளிகளை
வழி நடத்தி போராடி எங்கள்
மண்ணை மீட்டெடுக்கின்றனர்

மூ. இரத்தினசிங்கம்.




தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கல்வியில் மாற்றத்தை ஏற்படுத்த இன்றைய கல்விச்சமூகம் முன்வரவேண்டும்


கற்றோருக்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு. கற்றோரை மதித்துப் போற்றுதல் தமிழர் பண்பாட்டின் பெருமை மிக்க குணவியல்பு. இன்றுவரைக்கும் இது பேணப்படுகின்ற போதிலும் இடையிட்டு வந்த அன்னியரின் ஏகாதிபத்திய சுரண்டல் காலனித்துவத்தில் இதன் அர்த்தம் வேறு விதமாக கற்பிக்கப்பட்டுள்ளதுடன், எமது பண்டைய கூட்டுக்குடும்ப வாழ்வில் விரிசல்களை ஏற்படுத்தி எம்மை பிரித்தாள்வதற்கு கல்வி ஓர் ஆயுதமாக வெள்ளையர்களால் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. அதாவது தமது மதத்தைப் பரப்புவதற்காகவும், காலனித்துவ சுரண்டல் முறையை விரிவுபடுத்துவதற்காகவும் கல்வியை ஒரு ஆயுதமாகப் பயன்படுத்தி நாம் எமது வீரர்களை முதன்மைப்படுத்தும் தமிழ் வீரப்பண்பாட்டை மழுங்கடிக்கச் செய்ய, சுயநலமிக்க உயிருக்குப் பயந்து அடிமைச் சேவகம் செய்யக்கூடிய, ஏகாதிபத்திய அடிவருடிகளை உருவாக்கும் ஏகாதிபத்தியக்கல்வி (Imperialistic Education) முறையாகவே அது பரிணமித்துள்ளது.



கல்விகற்றல் என்பது எழுத்தறிவு வீதத்தைக் குறிகாட்டியாகக் கொண்டதாகவே அமைந்துள்ளது. நாம் ஏன் கல்விகற்கவேண்டும் என்று கேட்டால், ஓர் ஆள் தன்னையும் தன்னைச்சூழவுள்ள சமூக அமைப்பையும் அதன் செயற்பாடுகளையும் புரிந்துகொண்டு தொடர்புகள் ஏற்படுத்தல், உரிய முறையில் வாழவேண்டுமானால் கல்வி அவசியம் எனக்கொள்ளப்படுகின்றது. எனவே இதனைப் பெற்றுக்கொள்வதற்கு பால்வேற்றுமையோ வயது வரம்போ தேவைப்படுவதில்லை. ஆகவேதான் மனிதனின் அடைப்படையுரிமைகளில் இது முதன்மையானதாகக் கொள்ளப்படுகின்றது. அதாவது தனது ஆற்றல்களை வளர்த்து தனது ஆளுமையை மேம்படுத்தி சுதந்திரமாகச் சிந்தித்து செயற்படும் உரிமை ஒவ்வொரு தனிமனிதனுக்கும் உரியது.

கி.பி. 16ஆம் நூற்றாண்டிற்கும் முன்பு அதாவது போர்த்துக்கேயரின் வருகைக்கு முன்பு, எமது பண்பாடு வீரப்பண்பாடாக வீரர்களை முதன்மைப்படுத்தும் பண்பாடாகவே மிளிர்ந்து வந்துள்ளது. ஒருவன் நோய்வாய்ப்பட்டு இறந்தால் வாள் கொண்டு அவன் மார்பைக் கிழித்து பின் அக்கினிக்கு ஆகுதியாக்குவதும் மூதின்முல்லை என கூறப்பட்டுள்ளன. தனது ஆண்மகனுக்கு வீரத்தின் சிறப்புப் பண்புகளை ஊட்டுவதுடன் வீரச்சாவடைவது பற்றிக் கற்றுக்கொடுப்பது ஒரு வீரத்தாயின் கடமையாகவும் களத்தில் துணைவன் வீரசுவர்க்கமடைந்துவிட பதினாறும் நிறைவடையாத தனது வீரப்பிள்ளையைக் களத்திற்கு அனுப்பி பின் அவனது சாவுச் செய்தி கேட்டு களத்திற்கு விரையும் தாய், அவன் மார்பிலே விழுப்புண் அடைந்து வீரச்சாவைத் தழுவாவிட்டால் அவனுக்கு பாலூட்டிய எனது மார்பிரண்டையும் அறுத்தெறிவேன் என்று சபதமெடுத்து நிற்பதுவும், அவிப்பலி அல்லது நளாண்டம் எனப்படுகின்ற போரில் தனது தானைத் தலைவன் வெற்றியீட்டவேண்டும் என்று எடுத்த சூளை தனது கழுத்தை வெட்டுவதன் மூலம் தமிழ்ப்போர்த் தெய்வமாகிய கொற்றவை முன் நிறைவேற்றுதலும் பின் அவ்வீரனுக்கு சாவற்கல்லும் எழுப்பி அந்த வீரனையே தெய்வமாக வணங்குவதும், வடக்கிருத்தல் எனப்படுகின்ற பெரும் அழிமானம் ஏற்படுகின்ற வேளைகளில் ஒரு அரசனே நாட்டுமக்களுக்காகவும், நாட்டுக்காகவும் உண்ணாநோன்பிருந்து உயிர்விடுவதும் புறநானூறு உட்பட பல பண்டைத்தமிழ் ஏடுகள் கூறும் வீரப்பண்பாடுகளாகும்.

இந்த வீரப்பண்பாட்டைத் துவம்சம் செய்து எமது வீரர்களை அடிபணியச் செய்து ஆரம்பத்தில் போர்த்துக்கீசரும், தொடர்ந்து ஒல்லாந்தர், ஆங்கிலேயரும் எமது மண்ணை சுரண்டல் நோக்கத்தோடு ஆக்கிரமித்திருக்கின்றார்கள். இவர்கள் தமது சமயத்தைப் பரப்புவதற்காகவும், நிர்வாகத்தை ஒழுங்குபடுத்தி சுரண்டலை இலகுபடுத்துவதற்காகவும், பல சலுகைகளை அறிவித்து உயர்ந்த தரத்தில் இருந்து தமது கல்வியை எமது மக்களுக்குப் புகட்டினார்கள். இதனால் உருவாக்கப்பட்ட - ஏகாதிபதிகளின் அடிவருடிகள் வெள்ளைத் தோலவர்களிற்கு விசுவாசமானவர்களாகவும் மண்பற்றைத் துறந்து காட்டிக் கொடுப்பவர்களாகவும் தாய்த்தேசத்தை கட்டி எழுப்பாது தங்களதும் தங்கள் குடும்பங்களினதும் நலன்கள் பேணுபவர்களாகவும் காணப்பட்டார்கள். இதற்கு சேர். பொன் இராமநாதன் தொடங்கி அமிர்தலிங்கமும் அவர் அடியொற்றிய அடிபாடிகளும் உதாரண புருசர்களாக இருக்கின்றார்கள். இவர்கள் வழி வந்த குடும்பங்கள் ஒக்ஸ்பேட்டிலும் கேம்பிறிட்சிலும் கல்வி கற்று வெள்ளைக்காரர்களுக்கு சேவை செய்பவர்களாகவும்,





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழன் என்ற தனித்துவத்தை இழந்து தாய்த் தமிழ்மொழியையும் மறந்துவிட்டவர்களாகவும் இருக்கின்றார்கள். இவர்களை தொடர்ந்து அடிவருடிகள் பலர் இன்றும் சிங்கள தேசத்தில் அடிபணிந்து அதனையே கட்டியெழுப்ப கங்கணம்கட்டி நிற்கின்றார்கள்.

எமது தேசியத் தலைவர் மேதகு பிரபாகரன் அவர்கள் வித்தியாசமானவர். தமது பதினாறாவது வயதிலேயே இந்த ஏகாதிபத்திய அடிவருடிகளின் கபடத்தனத்தையும் புரிந்தகொண்டார். எனவேதான் கழுத்தில் சயனைட் குப்பியுடன் சமவுடமைத் தன்னாட்சித் தமிழீழத்தைக் கட்டியெழுப்பப் புறப்பட்டுவிட்டார். மீண்டும் வீரப்பண்பாடு புத்துயிர் பெற்றுவிட்டது. வீரப்புலி (படையின்) மனவுறுதியும், கரும்புலிகளின் தியாகமும் தமிழன் வாழும் திசையெங்கும் மாவீரர் துயிலும் இல்லங்களை அமைத்து தமிழ் வீரர்களை போற்றுவதும், தேசமெதிலுமே காணப்படாத உயரிய பண்பாடாக மிளிர்ந்து வருகின்றது. இந்தத் தலைவன் எமது தேசத்தைக் கட்டிஎழுப்ப வேண்டுமானால் பல தடைகளைத் தாண்டவேண்டும் என்பதினை நன்கு அறிந்திருந்தார். இதனால்த்தான் ஒன்பது வருடங்களிற்கு முன்பு படைத்துறைப் பள்ளியின் முதலாவது ஆண்டு நிறைவு நாளையொட்டி பின்வருமாறு கூறியிருந்தார்.

“நான் ஒரு கனவு காண்கிறேன், அந்தக் கனவு நனவாகி நடைமுறை உண்மையாக வேண்டுமென்பது எனது அவா, எனது தேசத்தின் எதிர்காலச் சிற்பிகளாக ஒரு புதிய இளம் பரம்பரை தோற்றங்கொள்ள வேண்டும். ஆற்றல் மிக்கவர்களாக, அறிவு ஜீவிகளாக, நேர்மையும் கண்ணியமும் மிக்கவர்களாக, ஒரு புதிய புரட்சிகரமான பரம்பரை தோன்ற வேண்டும். இந்தப் பரம்பரையே எமது தேசத்தின் நிர்மாணிகளாக நிர்வாகிகளாக ஆட்சியாளர்களாக உருப்பெற வேண்டும். இது ஒரு பெரிய ஆசை, அலாதியான கனவு, எனினும் நான் முயற்சிக்கின்றேன் முயற்சி ஆக்கம் தரும் என்பதில் எனக்கு ஆழமான நம்பிக்கை உண்டு.”

இதற்காகத்தான் தேசியத் தலைவர் எமது கல்வியமைப்பை மாற்றியமைத்து புதிய தேசத்தைக் கட்டியெழுப்ப நினைக்கின்றார். நாம் கல்வியை மிகவும் மதிப்பவர்கள். ஆனால் இந்தக் கல்வி வெள்ளைக்காரன் தந்த கல்வி. எமது மண்ணிற்கு பொருத்தமானமுறையில்

# எம் தேசத்தை மீட்போம்!

தமிழீழ மாணவர் எழுச்சி நாளை முன்னிட்டு தமிழீழ மாணவர்களால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கை கீழ் வருமாறு.

தமிழீழ விடுதலைப் போராட்டம் தோற்றம் பெற்றதற்கான முக்கிய காரணங்களில் ஒன்று சிங்கள அரசாங்கம் தமிழ் மாணவர்களின் கல்வியில் காட்டிய ஓரவஞ்சனையாகும்.

ஈழத்தமிழர்கள் நீண்டகால தனிப்பெரும் கல்வி பாரம்பரியத்தைக் கொண்டு விளங்கியவர்கள். தமிழீழ மாணவர்கள் தமது திறமையினாலும் முயற்சியினாலும் கடும் உழைப்பினாலும் கெட்டிக்காரர்களாகவும் விளங்கியது சிங்கள அரசிற்கு சகிக்கவில்லை.

தமிழ் மாணவர்களது உயர் கல்வியை நசுக்கும் பொருட்டு சிங்கள அரசு தரப்படுத்தலைக் கொண்டு வந்தது. இதுவே தமிழீழப் போராட்டத்தின் மற்றொரு அத்தியாயத்தை விரித்தது.




தமிழ் மாணவர்கள் எழுந்து போராடத் தொடங்கினார்கள். இப்போராட்டத்தின் முதன்மையாளராகவும், முனைப்புச் சக்தியாகவும் பட்டதாரி மாணவன் பொன். சிவகுமாரன் விளங்கினார்.

பொன்.சிவகுமாரன் சிங்களப் பேரினவாத அரசின் படைக்கு எதிரான தீவிரமான செயற்பாட்டில் இறங்கிப் போராடினார். எனினும் சிங்களப்படை சிவகுமாரன் மீது 1974ஆம் ஆண்டு இதே நாள் தாக்குதல் நடாத்தி மாணவர் போராட்டத்திற்கு ஆப்புவைக்க முயன்றது.

இவ்வாறே அவ்வவ்போது ஆட்சிக்கு வந்த சிங்கள அரசுகள் தமிழ் மாணவர்களின் கல்வி மூலதனத்தில் மண்ணைப்போட்டன.

அக்கரைப்பற்றில், யாழ் பல்கலைக்கழக மாணவன் கிருபாகரன் ரயர் போட்டு எரிக்கப்பட்டான். மாணவி கிருசாந்தி பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டாள். நாகர்கோவிலில் 34 மாணவர்கள் விமானக் குண்டு வீச்சு மூலம் அழிக்கப்பட்டனர். மட்டு நகரில் 9 சிறுவயது மாணவர்கள் சுட்டுத்தள்ளப்பட்டனர். கல்முனை வட்டாரத்தில் திட்டமிட்டு கல்வி முதன்மையாளர்கள் அழிக்கப்பட்டனர். பாடசாலைகள் இராணுவ முகாம்கள் ஆக்கப்பட்டும், குண்டுகள் வீசி அழிக்கப்பட்டும் வருவதும் சதாரண நிகழ்வுகளாகின்றன.

இவைகள் அரசின் கல்வி அழிப்புக்குக் கூறப்பட்ட சொற்ப உதாரணங்கள மட்டுமே. இப்படி அரசு தமிழ் மாணவர்களின் கல்வி மீது தொடுத்த யுத்தம் மிகவும் பெரியது, அட்டூழியமானது.

அன்பார்ந்த தமிழீழ மாணவர்களே!

கல்விப் போராட்டத்திற்கு கவசமாகவும் போராட்டம் கல்விக்கு காப்பரணாகவும் இருக்க வேண்டும் என்ற தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களின் சிந்தனைக்கு இணங்க ஒன்று சேருவோம் வாருங்கள்.

சிங்கள அட்டூழியப்படைக்கு எதிராக நமது போராளிகள் இன்று மிகப்பெரிய யுத்தத்தை தொடுத்து முன்னேறியிருக்கின்றார்கள். தமிழீழம் உருவாகும் சூழ்நிலை உருவாகிவிட்டதென்பதை இன்று உலகமே உணர்ந்து கொண்டிருக்கின்றது. எனவே இவ்வேளையில் எமது போராட்டத்திற்குப் பக்கபலமாக இருந்து தோளோடு தோள்நின்று உழைப்பது மாணவர்களது வரலாற்றுக் கடமையாகும்.

எனவே சுதந்திர தமிழீழத்தில் நிலைநாட்டப்படும் தமிழீழக் கல்வியின் பெருமையை உலகறியச் செய்வோம். விழிதெழுங்கள் மாணவரே!

கல்வி ஒடுக்கு முறைக்கு எதிராகப் போராடி மடிந்த மாணவன் பொன்.சிவகுமாரனின் நினைவுநாளாம் இன்று, பொங்கி எழுவோம் புதுமைகள் படைப்போம். புயலென எழுந்து நிற்கும் புலிப்படைக்கு ஒத்துழைப்பு வழங்கி எம்தேசத்தை மீட்போம் வாருங்கள் எம் மாணவரே! ■



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அமையவில்லை என்ற கருத்தையும் கொண்டிருப்பவர்கள்.

எனவேதான் தேசியத் தலைவர் கூறியதுபோல எமது தேசிய வாழ்வையும், வளத்தையும், மேம்படுத்தும் இலக்கில் எமது கல்வித்துறை சீரமைக்கப்பட வேண்டும். காலனித்துவ சுரண்டல்களின் தேவைகளைப் பூர்த்திசெய்யவும், சிங்களப் பேரினவாதத்தின் கருத்தாதிக்கத்தைத் திணிக்கவும், உருவாக்கப்பட்ட கல்வியமைப்பு மாற்றப்படவேண்டும். எமது தேசியப்போராட்டம் எமது பண்பாட்டு வரம்பு, எமது தேசிய பொருண்மிய வளமும், எமது தேசிய இனத்தின் வரலாறு ஆகியவற்றின் உண்மை நிலையும் அதன் பெறுமானமும் உணரப்படும் வகையில் பாடத் திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும். இன்றைய அறிவியல் தொழில்நுட்பத்துறை வளர்ச்சியையும், அதன் ஆக்கப் பிரயோகங்களையும் கற்றறியும் வாய்ப்பு எமது இளம் பரம்பரைக்கு கிட்டுவதற்கு வழி செய்யப்பட வேண்டும். ஒட்டுமொத்தத்தில் எமது தேசிய நலன் பேணப்படும் வகையில் கல்விச் சீர்திருத்தம் இடம் பெற வேண்டும்.

இந்தச் சீர்திருத்தம் ஏற்படுத்தும் வகையிலேயே தேசியத் தலைவர் பல்துறை சார்ந்த கல்லூரிகளை ஆரம்பித்து வைத்தார். நாடளாவியரீதியில் தமிழீழப் பொதுக்கல்வித் தேர்வுகளை நடாத்த வேண்டும் என்ற கருத்தினை முன்வைத்தார். தமிழீழ மருத்துவக் கல்லூரியின் முதலாம் ஆண்டு மலரிற்கு வழங்கிய செய்தியில்.

"தேசவிடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லும் அதேவேளை தேசநிர்மாணத்திற்கான படிக்கட்டுக்களையும் நாம் இட்டுச்செல்ல வேண்டும். சமூகத்தின் வளர்ச்சிக்கும், உயர்ச்சிக்குமான புறநிலைகள் உருவாக்கப்பட வேண்டும் இந்த நோக்குடனேயே எமது இயக்கம் பல்வேறு துறைகளில் பயிற்சிக் கல்லூரிகளை அமைத்துள்ளது. எமது நாடு, எமது காலில், எமது வளத்தில், எமது பலத்தில் வளர்ச்சி கண்டால் தான் நாம் ஒரு திடமான சுயசார்பான அரசைக் கட்டியெழுப்புதல் சாத்தியம். அதற்கான ஒரு அடிக்கல்லாக இந்த மருத்துவக் கல்லூரி நிறுவப்பட்டுள்ளது. மேலும் மருத்துவத்துறையில் எழுந்துள்ள பின்னடைவை ஈடுசெய்து போராடும் மக்களின் தேவைகளை நிறைவு செய்வதும் இதன் நோக்கமாகும். இங்கு எமது போராளிகளே கல்வி பயில்கின்றார்கள். இலட்சியவாதிகளான இவர்கள், ஒரு நாள் மருத்துவ நிபுணர்களாக மாறப்போகின்றார்கள். போராளிகள் வைத்தியர்களாகப் போகின்றார்கள். தேசப்பற்றும், மக்கள் நேயமும், அர்பணிப்பும் கொண்ட ஒரு புதிய இளம் பரம்பரையிடமிருந்தே அறிவுஜீவிகள் உருவாக வேண்டும் என்பது எனது அவா. எனது இந்த இலட்சியத்தை தமிழீழ மருத்துவக் கல்லூரி நிறைவு செய்து தரும் என்பதில் எனக்கு நம்பிக்கையுண்டு."

இவ்வாறு ஆசிச்செய்தி கூறிய தலைவர் 13-02-93 இல் தமிழீழ பொதுக்கல்வித் தேர்வினை ஒட்டி பின்வருமாறு கூறியிருந்தார். தாயக விடுதலைக்கு தம்மை அர்பணிக்கும் தெரிவிற்கும், கல்விகற்கும் உரிமைக்கும், இடையில் நாம் என்றுமே முரண்பாட்டைக் கற்பிக்க முயலவில்லை. இரண்டுமே எமது சமுதாயத்தின் வாழ்வியக்கத்திற்கு இன்றியமையாதவை. போரும் கல்வியும் இணைந்த வாழ்வு இன்று எமது வரலாற்றுத் தேவையாக உள்ளது. எமது போராட்டம் கல்விக்கு காப்பரணாக இருப்பது போல கல்வியும் எமது போராட்டத்திற்கு கவசமாக அமையவேண்டும். எமது விடுதலைப் போராட்டத்தின் உன்னதத்தை உணர்ந்து கொள்ளும் வகையில் விழிப்புணர்வை ஊட்டுவது எமது கல்விமான்களின் தேசியக் கடமையாகும்.

நாம் கல்விமான்களை மதிக்கின்றோம். அவர்கள் எமக்கு கற்பிக்கத் துடிக்கும் இந்த வெள்ளைக்காரன் தந்த கல்வி எமது மண்ணிற்கு பொருத்தமான முறையில் மாற்றப்படவில்லை, தேசப்பற்றை உருவாக்கவில்லை, மாறாக இந்த நாட்டைவிட்டு தப்பியோடச் சரியான தருணத்தை எதிர்பார்த்துக் காத்திருக்கத் தூண்டுவதுடன், தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்களை மையமாகக் கொண்டுமே அமைக்கப்பட்டுள்ளது.

கடந்தமாதம் யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில், புத்திஜீவிகள் எமக்கு வழிகாட்டுவார்கள் என எதிர்பார்த்து பல்கலைக் கழகத்தினுள் புகுந்தோம். ஆனால் அவர்கள் எமக்கு பட்டத்தை மட்டுமே வழங்கத் தயாராக இருக்கின்றார்கள். சமூகக் கரிசனையோ, சமூக நலன் பற்றியோ சிந்திக்கக்கூட விடுவதாகத் தெரிவில்லை. அதாவது இந்தக் கல்விமான்கள் பேரினவாதிகளின் கருத்தாதிக்கத்தை திணிக்க முற்படுபவர்களாகவும், தாய்த்தமிழ் மண்ணிற்கு துரோகம் இழைப்பவர்களாகவுமே காணப்படுகின்றார்கள். ஒட்டுமொத்தத்தில் இவர்கள் பயனற்றுப் போனார்கள்.

21ஆம் நூற்றாண்டில் காலடி எடுத்து வைத்துள்ள இளைஞர், யுவதிகளாகிய நாமே இந்த மாற்றத்திற்கு வழிசமைக்க வேண்டும். எந்தவொரு நாட்டின் பொருளாதார உயர்ச்சிக்கும் அதன் சீரிய வளர்ச்சிக்கும் இளைஞர் யுவதிகளே முதுகெலும்பாகத் திகழ்ந்திருக்கின்றார்கள். 16ஆம் நூற்றாண்டின்பின் மழுங்கடிக்கப்பட்ட எமது வீரமரபு மீண்டும் புத்துயிர் பெற்றிருக்கின்றது. இதுதான் சரியான தருணம் தன்னிகர் இல்லாத் தேசியத் தலைவர் வழிகாட்டுகின்றார். இளைஞர் யுவதிகளாகிய நாம் தன்னம்பிக்கை பெற்றவர்களாகவும், நாணயமானவர்களாகவும் விளங்கி, சமுதாய செயற்பாடுகளில் உயிர்ப்புடன் செயற்படுகையிலேயே இம் மாற்றம் இலகுவாக நிகழும். இம்மாற்றத்தை ஏற்படுத்தியே தீருவோமென கற்றுணர்ந்த கல்விமான்களும், அறிஞர்களும், எழுத்தாளர்களும் கங்கணம்கட்டி நிற்கவேண்டும். எந்தக் குறையாக இருந்தாலும் தத்தம் துறைகளில் சீரிய மாற்றங்களை எற்படுத்துவது மனித நேயமுள்ள யாவரினதும் கடமையாகும். மாட்டின் லூதர் கிங் கூறிய வாக்கியத்தை இங்கு நினைவு கூர்ந்து சொல்லுவது சாலப்பொருத்தமானதாகும்.

"நாம் இந்தத் தலைமுறையில் மிகவும் வருந்த வேண்டியிருக்கின்றது. கொடியவர்களின் ஈனச் செயல்களுக்காக மட்டுமல்லாது அதற்கும் மேலாக நல்லவர்களது பயங்கரமௌனத்திற்காகவும்."

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றின் ஒரு திருப்பு முனையில் இளைஞர் யுவதிகள் எல்லோரும் எழுச்சி கொண்டு புரட்சிக்கு வித்திட்டு நிற்கின்றார்கள். இந்தச் சந்தர்ப்பத்தில் மாணவர்களாகிய எமக்கு இம்மாற்றங்கள் ஏற்படுத்துவதில் முக்கிய கடமைப்பாடு உண்டு. சமுதாயத்திற்கு நீண்டகால நோக்கில் பாதிப்புக்களை ஏற்படுத்தக்கூடிய நிகழ்வுகளை சுட்டிக் காட்ட வேண்டிய தார்மீகப் பொறுப்பு மாணவர்களாகிய எம்மையே சார்ந்து நிற்கின்றது. எனவே பொறுப்பாகச் செயற்பட்டு நாமெல்லாம் ஒன்ற சேர்ந்து இந்த விடுதலையை வென்றெடுத்து எமது தமிழ்ச் சமூகத்தைப் பாதுகாக்க வேண்டும். அதாவது எமது தமிழ்ச் சமூகத்தின் முன்னேற்றத்தில் நேர்மையான நல்லெண்ணம் கொண்ட மாணவர்கள் நாம் உயிர்ப்புடன் செயற்படவேண்டியது தவிர்க்கமுடியாத தேசியக் கடமையாகும்.

**-பொழிலன்-**



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஓராயிரம் வேர்ப்பின்னல்கள்

வார்த்தைகளில் சிக்காத
ஓர் உன்மத்தம் உள்ளே
திமிறும்
வான் முகடுகளைத்
தொட்டபடி
ஓடும் புகைச்சுருள்களில்
என் எண்ணத்தின் வேர்கள்
விரைந்து செல்லும்.
இரையெடுத்து ஏப்பம் விடும்
பாம்புகளின் வாசனை
என் சுற்றாடலை நிரப்பும்.
சிலந்திகள் பின்னிய
வலையாய்
என் வீடு
கனத்துப் பிசிறடிக்கும்.
ஒற்றைக் குரலில்
ஓர் ஆன்மாவின்
சோகம் பிழிந்த அலறல்
காற்றில் கரையும்.

எங்கள் வீதிகளுக்கு
வேலிபோட வந்தவர்கள்
வட்டத்துள்
நாம் வெளியே விழிகளைத்
திறந்தபடி
வாழ்ந்து பங்கப்பட்ட
வரலாறொன்றின் சாட்சியாய்
எச்சமாகிப்போன
எலும்புக்கூடுகள் நடுவே
ஆனாலும்
பார் பூமியெங்கும்
பாறைபிளந்து
ஓராயிரம் வேர்ப்பின்னல்கள்
இனி அவை துளிர்விடும்

-சுதாமதி





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நீங்காத நினைவுகள்...



## தமிழர் தேசமெங்கும் சிங்களப் பேரினவாதம் கோரத் தாண்டவமாடிய ஜூன் மாதம்



கொக்கட்டிச்சோலை ஒரே இடத்தில்அரிசிஆலை ஒன்றில் 46 பொது மக்கள் கொடூரமான முறையில் படுகொலை.



சுதந்திரபுரப்பகுதியில் விமானக் குண்டு வீச்சில் பலியான ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 4 பச்சிளம் பாலகர்கள்.

### அம்பாறைப் படுகொலை

05.06.1956 ஆம் திகதி பண்டாரநாயக்கா தலைமையிலான அரசு பாராளுமன்றில் சிங்களம் மட்டும் சட்டத்தை கொண்டுவந்ததை கண்டித்து காலிமுகத்திடலில் தமிழர்கள் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபட்டனர். அதனைத் தொடர்ந்து அம்பாறையில் தமிழர்கள் கொல்லப்பட்டனர். 1956 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 10,11 திகதிகளில் கலவரம் ஒன்றை ஏற்படுத்தி சிங்களக் காவல்துறையின் ஒத்துழைப்போடு சிங்களக் காடையர்கள் தமிழர்களை படுகொலை செய்தனர். பட்டிப்பளைப் பிரதேசத்தின் 150 அப்பாவித் தமிழ் விவசாயிகள் வெட்டிக்கொல்லப்பட்டனர். தமிழ்ப் பெண்களின் மானம் பறிக்கப்பட்டது. தமிழர்களின் சொத்துக்கள் சூறையாடப்பட்டன. பட்டிப்பளையின் பெரும்பகுதி சிங்களவர்களால் ஆக்கிரமிக்கப்பட்டது. அம்பாறை மாவட்டத்தில் இரு நாட்களாகத் தொடர்ந்த இந்த அனர்த்தம் தொடர்ந்தது . சிங்களவர்கள் தமிழர்கள் மீது மேற்கொண்ட இனப்படுகொலைகளில் முதலாவது படுகொலை இதுவாகும்.

### கொக்கட்டிச்சோலைப் படுகொலை

12-06-1991 ஆம் திகதி புதன்கிழமை அன்று கொக்கட்டிச்சோலை மண்முனை வீதியில் மகிழடித்தீவிற்கருகே சிங்களப்படையினர் சென்று கொண்டிருந்த உழவு இயந்திரம் கண்ணிவெடியில் பி.ப 12.55 மணியளவில் சிக்கியது. இதன்போது சில சிங்களச் சிப்பாய்கள் காயமடைந்தனர். இச்சம்பவத்தை அடுத்து முதலைக்குடா பாடசாலை மற்றும் மகிழடித்தீவு குமரநாயகம் அரிசி ஆலை ஆகிய இடங்களில் தஞ்சமடைந்திருந்த அப்பாவித் தமிழர்கள் இரத்த வெறி பிடித்த கப்டன் குடிலிகம தலைமையிலான சிங்கள சிப்பாய்களினால் கொடூரமான முறையில் படுகொலை செய்யப்பட்டார்கள். 6 வயது பச்சிளம் பாலகன் தொடக்கம் 80 வயது கிழவன் வரை அனைவரும் வயது பால் வேறுபாடின்றி வேட்டையாடப்பட்டனர். முதலைக்குடாவில் தங்கியிருந்த 21 ஆண்களும் சம்பவம் நடந்த இடத்திற்கு இழுத்துச் செல்லப்பட்டு படுகொலை செய்யப்பட்டனர். குமரநாயகம் அரிசி ஆலையிலிருந்து தமிழர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தின்போது 46 பொதுமக்களும் பலியாகினர். மொத்தம் 67 பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டனர்

### சுதந்திரபுரப் படுகொலை

10.06.1998 ஆம் திகதி காலை 9.00 மணியளவில் அப்பகுதிக்கு திடீரென வந்த சிறீலங்கா விமானப்படையின் இரண்டு கிபிர் விமானங்கள் அப்பகுதியில் சக்திவாய்ந்த குண்டுகளை வீசிவிட்டுச் சென்றதை அடுத்து வந்த 30 நிமிடங்களிலும் சுதந்திரபுரம், வள்ளிபுனம், உடையார்கட்டு குடியிருப்புக்கள் மீது வீழ்ந்த 100ற்கு மேற்பட்ட எறிகணைகள் அப்பகுதியில் இந்நிலைமைகளை மேலும் கொடூரமாக்கியது. இக்கோர வெறியாட்டம் முடிவடைந்தபோது வயோதிபர்கள், பெண்கள், சிறுவர்கள் என 25 தமிழ்ப் பொதுமக்கள் பலியாகியிருந்தனர். 50க்கு மேற்பட்டோர் படுகாயங்களுக்கு உள்ளாகியிருந்தனர். பல தடவைகள் இடம்பெயர்ந்து துன்பங்கள் பலவற்றை அனுபவித்த மக்கள் குடியிருப்புக்கள் உட்பட 31 வீடுகள் அழிக்கப்பட்டன. 51 வீடுகள் பாரிய சேதத்திற்கு உள்ளாகின. 553 குடும்பங்கள் இடம்பெயர்ந்தன.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மக்களுக்காகவே அவர்கள்



பொத்தி தள்ளிக் குலை கொடுத்து
பின் செத்தழிந்து நார்நாராயாகும்
வாழையாயென் வாழ்வு
வருந்தித் தொலைகிறதே!
பெற்ற எம் மக்கட்கே
பெருஞ்சுமையென்றாகிப் போனபின்
உற்றதுணையாய் உதவிட்ட இல்லமதில்
குற்றுயிராய் கிடந்தெமை
துடிதுடிக்க வைக்கவென
கூவி வந்தனவே எறிகணைகள்
சுற்றும் எறிகணைகள் சுடுகாட்டை உருவாக்க
சற்றும் அசைந்தாடமுடியா ஜீவன்களாய்
திகிலுறைய திகிலுறைய
அந்த அகாலப் பொழுதினிலும்
அப்படியே கிடந்துகொண்டோம்.
துள்ளிக் குதிக்குமொரு இயலுமை
எமக்கிருந்தால்...
பாதுகாப்புத் தேடிப் பறந்திருப்போம்
குடல் தெறித்து, குருதி நீரில் குளிப்பாட்டி
அருகதினிலே வேறொன்று
அடிசாய்ந்து கிடக்கையிலும்... அக்குடலிழுத்து
கருங்காகம் சுவைக்கையிலும்...
"சூ" வென்று தானும் கலைத்துவிடும்
சக்தி கூடவற்ற சடங்களாகி
மரணபீதியதில் மௌனித்திருந்தோம் நாம்.
மூர்க்கப் படைகளின் குருட்டுக் கண்களுக்கு
முதியோரில்லம் தானா
புலிவாழ் குகையாயிற்று!
மண்ணும் மனிதமில்லை
மனங்கட்கெலாம்
மனிதாபிமானமென்ன ஓர் கேடா?
அடிக்கட்டைகளாய் போன
இந்த ஆயுட் கடைசியிலும் அவலச்சாவே
எமக்கு சொந்தமென்றானதா?
சுதந்திரத்திற்காய் சுமை தாங்கும் அந்த
தேசத்தின் குழந்தைகள்
போர்க்கால வேளையிலும்
ஆதரவுக்கை நீட்டியெமை
சுமந்து வந்தாரே!
ஆம்
மக்களுக்காகவே அவர்கள்.

-யாழ் வீரன்-



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வயல்வெளியில் நிற்பவர்கள்

**-சிதம்பர திருச்செந்திநாதன்-**

வயல்வெளி நீண்ட கனவுப் பரப்பாக விரிந்திருந்தது. கண்களைக் கூசவைக்கும் ஒளிச்சிதறல்களை ஊடுருவிக்கொண்டு ஆச்சி வயல்வெளியைப் பார்த்தாள்.

அது சூரியன் கீழ்வானில் இளங்கவிஞனாகப் புறப்படும் நேரம். சிவப்பும் மஞ்சளும் கலந்து குளிர்மையான ஒளி சிந்திக்கொண்டிருந்த வேளை.

இந்தக் கோடியில் இருந்து அந்தக் கோடிவரை எத்தனையோ இலட்சம் மக்களின் வயிற்றினை நிரப்ப வழிசெய்யும் அந்த வயல், அதைப்பற்றிய எந்தவிதமான பெருமையோ மிகைநினைப்போ இல்லாமல் தளர்ந்து போய்க்கிடந்தது.

ஆச்சி பார்த்தாள். பார்க்கப் பார்க்க அடிவயிற்றில் நெருப்புப் பற்றி எரிவது போல வேதனை. அதனைப் பார்த்து ஒருபக்கம் பெருமையும் நிறைவும் வந்தாலும் மறுபுறம் இந்த எரிவும் உண்டாகிறதுதான்.

எவ்வளவு காலமாய்ப் பார்க்கிறாள்? இன்று நேற்றா? அவள் சிறுபெண்ணாய் குறுநடைபோட்ட காலத்தில் இருந்து, இன்று வரை எந்தக்குறைவும் இல்லாமல் இந்தப் பார்வை தொடர்கிறது.

1948, ஆச்சிக்கு இளம் வயது நினைப்பு மெல்லென துள்ளலுடன் வெளிக்கிளம்பியது. அன்று தெருவில் சனங்கள் பரபரப்புடன் மாய்ந்து கொண்டிருந்தார்கள்.

ஆச்சி தன் அம்மாவுடன் ஊரில் இருந்த பள்ளிக்கூடம் போய்க்கொண்டிருந்தாள். செம்மண் புழுதி பரந்திருந்த பாதை வழியே புதுச்செருப்பு அதுவும் முதன் முதல்போட்டபடி நடந்தது அந்தரமாக இருந்தது.

அதனைக் கழற்றி கையில் எடுக்க மனம் பலதடவை அவாவுற்றதுதான். எனினும் சன நடமாட்டம் அதிகமாக இருந்ததால் அதனைச் செய்ய மனம் ஏவவில்லை. அதைவிடச் சனங்கள் தன்னையே பார்ப்பது போல ஒரு குறுகுறுப்பு.

எண்ணெய் வழியும் தலையும் பெரிய கறுத்தப்பொட்டும் கழுத்துத் தெரியா ரவுக்கையும் ஆச்சிக்கு அப்போது அழகைக்





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொடுத்திருந்தாலும் எதிரே வருபவர்களைப் பார்க்கும் திராணி ஆச்சிக்கு இருக்கவில்லை.

அப்போதும் வயல்வெளி அம்மணமாகவே இருந்தது.

அந்தப் பெருவெளியில் உழவுத் தொழில் நடக்கவில்லை.

ஆனால் வயல்வெளியை அண்டி சாப்பாட்டுக்கான தேவைகளுடன் பலலட்சம் பேர் காத்திருந்தார்கள்.

தலை குனிந்து நடந்த ஆச்சி சற்றே நடையைக் குறைத்து தன்தாயைப் பார்த்தாள். கடை விழிகள் ஊடாக ஆச்சியின் பார்வை ஆச்சியின் அம்மாவைச் சென்று தாக்கியது.

"பிள்ளை"- என்ற ஆச்சியின் அம்மா, பிறகு "அது ஒரு காலம்" சற்றே படபடத்தாள்.

"என்" ஆச்சியின் விழிக்கோடிகளில் வியப்பு துளிர்விட்டது. உதடுகள் குவிய அவள் சிரித்தாள்.

"அது ஒருகாலம் பிள்ளை. இந்தப் பரந்த வயல்வெளியெல்லாம் இந்தச் சனங்களின் முன்னோர், ஒரு ஆள்கூட மிச்சமில்லாமல் வேலை செய்தார்கள். விடாமுயற்சியுடன் உழைத்தார்கள். வயல்வெளி நெல்மணிகளால் குவிந்து நிறைந்தது. சனங்களும் எந்தவிதமான மனக்கிலேசம் இல்லாமல் உண்டு களித்தார்கள்."

"ம்" - கொட்டினாள் ஆச்சி. "இப்ப அவ்வளவும் தலைகீழாப் போச்சு"

ஆச்சி வயல்வெளியைப் பார்வையால் துளைத்தாள். எல்லோரும் ஒன்று சேர்ந்து வயல் வேலை செய்யும் அந்தக் காட்சியைப் பார்க்க எப்படியிருக்கும் என யோசித்தாள்.

"வயல்வெளி நாலுபக்கமும் அச்சறுக்கையாய் வேலி அடைச்சு என்ன அற்புதமாய் இருந்ததாம். ஆனா இப்ப..." மேலும் சொல்லமுடியாமற் தத்தளித்தாள். வேதனை அவளை அலைக்கழித்தது.

"சொல்லுங்கோ அம்மா" ஆச்சி தூண்டினாள். "இந்த வயல்வெளிக்கு அப்பால் வேற வயல்வெளி. அங்கையும் நெல்லு விளையுதுதான். எங்கட முன்னோர்கள் மாதிரி அந்த வயல்வெளிக்காறரும் வயலிலை உழைச்சு சீவிசிச்சுக் கொண்டுதான் வந்ததுகள்"

"ம்"

"கடற் கொள்ளைக்காறர் மாதிரிவந்த வெள்ளைக்காறர் அந்த வயல்வெளியையும், எங்கட வயல்வெளியையும் ஆக்கிரமிச்சாங்கள். அதோட பிடிச்சது நாசம். முதல்ல தனியத் தனிய பயிர் செய்த அவங்களும் அவங்கட வழிவந்தவங்களும் பிறகு தங்கட வசதிக்காக ரெண்டு வயலையும் ஒண்டாக்கிப் போட்டாங்கள்"

"பிறகு"

"பிறகென்ன பிள்ளை? எங்கட வயல்வெளி சீரான பராமரிப்பில்லாமல் சீரழியத் தொடங்கிச்சு"

"எங்கட ஆக்கள் எங்கட வயலில் உழுது விதைச்சிருக்கலாந்தானே?"

"உண்மைதான். இந்தப் பரந்த வெளிய உழுகிறதுக்கும் விதைக்கிறதுக்கும் கொஞ்ச ஆக்கள் காணுமே. முழுச்சனமும் எல்லே திரளவேணும். அப்பிடியான ஒருநாள் வராமல்போட்டுது."

ஆச்சி அதிர்ச்சியோடு அந்தக் கதையைக் கேட்டுக்கொண்டு இருந்தாள்.




"கொள்ளைக்காறர் மாதிரி வந்த வெளிநாட்டுக்காறர் ரெண்டு வயல்வெளியையும் ஒண்டாக்கிப் போட்டு இப்ப கடைசியாச் செய்துபோட்டுப்போன வேலையைப் பாரம்மா"

"என்ன"

"இப்ப எங்கட வயல்வெளியையும் பக்கத்து வயல்வெளிக்காறரிட்ட ஒப்படைச்சுப் போட்டுத்தானே போறான்"

"அப்ப எங்கட வயல்வெளி எங்களிட்ட இல்லையோ"

"இல்லைப்பிள்ளை மான்குட்டியப் பிடிச்சுச் சிங்கத்திட்டக் குடுத்தமாதிரி, எங்கட வயல்வெளி மான்குட்டியாப் போச்சு"

"இனி என்னம்மா நடக்கப்போகுது?"

"இஞ்சை எங்கட ஆக்கள் கொஞ்சப்பேர் இதை சந்தோசமாய் ஏற்றுக்கொண்டு துள்ளிக்கூத்தடிக்கினம். இனி என்னதான் நடக்கப்போகுதோ?"

நடந்து நடந்து இருவரும் ஊரின் பள்ளிக்கூடத்துக்கு வந்தார்கள். பள்ளிக்கூடத்தில் வரிசை வரிசையாக ஆண்களும் பெண்களும் விரிந்த முகமும் மலர்த்திய புன்னகைகளுமாக...

பள்ளிக்கூட மண்டபத்தின் மையத்தில் அந்தப்பெட்டி வைக்கப்பட்டிருந்தது. ஆச்சியின் அம்மாவிடம் அங்குவைத்து ஒரு தாளைக்கொடுத்தார்கள். தாளில் இருந்த பெயர் - அடையாளத்துக்கு நேரே அம்மா புள்ளடியிட்டு பெட்டிக்குள் தள்ளிவிட்டு வெளியே வந்தாள்.

"எங்கட வயல்வெளிய எங்கட ஆக்களைக்கொண்டு செழிப்பாக்கப் போறமெண்டு ஒரு ஆளோ, கட்சியோ சொல்லிக்கொண்டு வந்திருக்கினம். அதுக்குத்தான் புள்ளடிபோட்டனான். பாப்பம் என்னதான் நடக்கப்போகுதெண்டு."

ஆனால் எந்த மாற்றமும் வயல்வெளியில் ஏற்படவில்லை. புள்ளடிகளால் வெற்றி பெற்றவர்கள் சொந்த வயல்வெளியைப்பற்றிப் பெரிதும் கவலைப்படாமல், பக்கத்து வயல்காரர்களின் மிச்சமான சப்பி நெல்லைச் சாப்பிட்டுத் திருப்திப்படத் தொடங்கினர்.

வயல்வெளிகளில் வரம்புகள் அழிந்தன. தூர் எடுக்கப்படாத குளங்கள் தம் சுவடுகளை மறைத்தன. மந்துக் காடுகள் பெருங்காடுகளாக வயல் பரப்பு பொங்கிச் சரிந்தது.

சனங்கள் வயல்வெளியில் உழைக்கவேண்டும் என்ற எந்த விதமான பிரக்ஞையும் இன்றி பாதைகளைப் பார்த்தபடி இருந்தனர்.

அவர்களின் ஆகாரத்துக்கு பக்கத்து நிலப்பரப்பில் இருந்து புறப்பட்டுவந்த பாதைகள் வழியே அரிசியும் பருப்பும் காய்கறிகளும் வரும். அவை வராதபோது கடைக்கண்ணால் பாதையைப் பார்த்தபடி சிறுபிள்ளைகள் கண்ணீர் விட்டுக்கொண்டிருந்தன.

பிள்ளைகள் அழுவதை பொறுக்கமுடியாத சனங்கள் துன்பமுறும் போதுமட்டும், "எல்லாம் கதைச்சிருக்கு, சாப்பாடு வரும்" என்றுதான் தேர்தலில் வாக்குக்கேட்டவர்கள் சொல்லிக்கொண்டிருந்தார்கள்.

அவர்களைச் சுமந்துவரும் பக்கத்து வயல்வெளி புஷ்பக விமானங்கள் அந்த ஆறுதல் வார்த்தைகளை மாத்திரம் சொல்லிவிட்டு பறந்துபோய்விடும். அது விடும் புகையை சனங்கள் பார்த்து ரசித்து திருப்திப்பட்டார்கள்.

ஆச்சி தன் மகளைச் சுமந்தபடி மீண்டும் பள்ளிக்கூடத்துக்குப் புள்ளடிபோடப் போனாள். பள்ளிக்கூடமும், அந்தப்பெட்டியும்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சனங்களின் வரிசையும் அவர்களின் நம்பிக்கையும் எப்போதும் போலவே வயல்வெளியின் வெறுமையாக மாறாமல் இருந்தன.

அன்றைக்கு புள்ளடி போட்டுவிட்டுத் திரும்பி வந்தபோது நடுப்பகலாகிவிட்டது. சூரியனின் வெம்மையினை நிலம் வாங்கித் திரும்பத் தந்துகொண்டிருந்தது.

ஆச்சியின் கால்களில் அவளின் காலைவிடச் சின்னதான செருப்பு. அதனால் செருப்பைத் தாண்டி நிலத்தில் பட்டகாலின் பகுதிகள் பொசுங்கின.

ஆச்சி அம்மாவை நினைத்தாள். இவ்வளவு காலமும் வயல்வெளியில் மாற்றங்கள் ஏற்படவில்லை. சாப்பாட்டுக்கான வழி குறைந்து வருகிறது என்று எல்லோரும் கவலைப்படுகின்றனரே தவிர எதனால் இப்படி ஏற்படுகிறது என்பதை உணர்கிறார்கள் இல்லை. கடைசி, இடுப்பில் இருக்கும் இந்த மகள் வளர்ந்த காலத்திலாவது இதனை உணர்வார்களா? என்ற நினைப்பில் அமிழ்ந்து போனாள்.

1972, இப்போது அனேகமாற்றங்கள் வந்துவிட்டன. வயல்வெளியின் ஏக்கத்தினையும் தாபத்தினையும் கொஞ்சப்பேராவது உணர்ந்துகொண்டிருக்க வேண்டும். வயலில் உழைப்பாளர்கள் தொகை அதிகமாக இல்லாவிடினும் ஒருவகை வேகம் பிறந்திருந்தது. மூச்சு முட்டும் வேலைகளை அவர்கள் விழி பிதுங்கச்செய்து கொண்டிருந்தார்கள்.

அவர்களைத் தனியே சனங்களாகப் பார்க்கமுடியவில்லை. சனங்களின் மத்தியில் தனித்துக் கிளம்பிய ஒருவகை விற்பன்னர்களாகவே தெரிந்தார்கள். அவர்களிடம் ஒழுங்கு கட்டுப்பாடு இருந்தது.

அவர்கள் வயலில் மந்துக்காடுகளை அழித்தார்கள். நாயுருவிகளை துவம்சம் செய்தார்கள். குளங்கள் தூர் எடுத்து வாய்க்கால்களைச் செப்பனிட்டார்கள். முழுவதையும் உழமுடியாவிட்டாலும் ஓரளவு வயல்களை உழுது பயிரிட்டார்கள்.

விடுப்புப் பார்த்துக் கொண்டிருந்த சனங்களில் சிலர் சற்றே துணிந்து வரம்புகள் அமைக்கவும் களைகள் பிடுங்கவும் எனச் சின்னச் சின்ன வேலைகளைச் செய்யத் தலைப்பட்டார்கள் என்றாலும் முழுமையாக சனங்கள் இறங்கியிருக்கவில்லை.

உடல் தளர்ந்தாலும் மனம் சலிக்காத திடத்துடன் ஆச்சி இப்போதும் வயல்வெளிப் பக்கம் வருவாள்.

சற்றேனும் மூப்புக்காட்டாத வயல்வெளி, இளமைத்துடிப்புடன்தான் இருக்கிறது. மூச்சிரைக்க வேலை செய்யும் கொஞ்சப்பேர் தொடர்ந்தும் வேலை செய்துகொண்டுதான் இருக்கிறார்கள்.

“அட கடவுளே! இவ்வளவு கொஞ்சப்பேர் வயலில் வேலைசெய்து அறுவடைசெய்யிற நெல்லு மாதிரி எல்லா ஆக்களும் வயலில் இறங்கினால் முழு நிலத்தையும் உழலாம்; பயிரிடலாம்; உச்சமாய் அறுவடை செய்யலாம். எல்லாரும் வயிறாறச் சாப்பிடலாம். பக்கத்து வயல்காறனை நம்பி இராமல் வாழலாம்” என்று ஆச்சி இப்போது நினைப்பதுண்டு.

1999 வித்தியாசமாகத்தான் தெரிந்தது. உடல்துவண்ட ஆச்சி அந்த வாகை மரத்தின் கீழ் அமர்ந்தாள்.

சிறு குருவிகள் சில ஆச்சியைச் சுற்றி வட்டம்போட்டுக் குசுகுசுத்தன. என்ன சந்தோசச் செய்தியினை அவை கூற முற்படுகின்றன என ஆச்சி நினைத்தாள்.

ஒரே மாதிரியான மஞ்சள் நிற வண்ணாத்திப் பூச்சிகள் அந்தப் பாதையில் இருபுறமும் அணிவகுத்துப் பறந்தன.

ஆச்சி சந்தோசமாய் இருந்தாள். நீண்டிருந்த பாதையில் ஆரம்பம் மேடாய் உயர்ந்திருந்தது. பெருத்த வாகனம் ஒன்று வருவதுபோல் அசைவு ஏற்பட்டது. ஆச்சி பார்த்தாள்.

ஆட்கள், ஆட்கள்தான். வெவ்வேறு வகையான உடையணிந்த வெவ்வேறு வகையான ஆட்கள் எல்லோரும் இந்த வயல்வெளிக்குரிய ஆட்கள்.

நடந்து வந்தவர்கள் அணிவகுத்து வந்தார்கள். எல்லா இடங்களிற்கும் ஒரே ஒழுங்காக அசைய, அதேபோல் எல்லா ஆட்களின் கால்களும் ஒரே சீராய் ஆண்கள், பெண்கள், வயது போனவர்கள், இளைஞர்கள், யுவதிகள்.

எல்லார் கைகளிலும் மண்வெட்டிகள்; இல்லை கருவிகளாக பொல்லுகள். அவர்களின் பின்னே இவ்வளவு காலமும் வயலில் களைக்கக் களைக்க வேலை செய்யும் அந்த உறுதிமிக்கவர்கள்.

“இதென்ன பொல்லுகள்” என்றாள் ஆச்சி தன்னை மறந்து.

“ஆச்சி அப்படிச் சொல்லாதை அதெல்லாம் பயிற்சி மண்வெட்டிகள்” ஆச்சியின் பக்கத்தில் நின்ற சிறு பையன் ஒருவன் சொன்னான்.

பாழ்பட்டுக் கிடந்த வயலில் இறங்கி அதனைத் திருத்திப் பயிரிடத் தொடங்கியதைவிட, இந்த முழுச் சனத்தையும் வயலில் இறங்க வைத்த கெட்டித்தனத்தையும் ஆற்றலையும் நினைக்க வயலில் நிற்பவர்கள் மீது முன்பைவிட மரியாதை கூடியது.

ஆச்சி பொக்கை வாய் சிரிப்பு அரும்பு உதிர்த்து “என்ரை பேரா” என்று சிறுவனைப் பற்றிப்பிடித்துக் கொஞ்சினாள்.

அணிவகுத்துச் சென்ற ஆட்கள் வயல்வெளியில் இறங்க வயல்வெளி அவர்களை உள்வாங்கத் தொடங்கியது. ■





தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ரத்வத்தவின் பலிக்கடாக்கள்

விடுதலைப் புலிகளின் தாக்குதல்கள் குறித்து எவரும் அஞ்சத் தேவையில்லை. புலிகள் பலாலி விமான ஓடுதளத்தைத் தாக்கினால்கூட பிரச்சனை எதுவுமில்லை எனச் சிறீலங்காவின் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தவின் கூற்றுக்கள் பலருக்கும் ஆச்சரியத்தைக் கொடுப்பதாய் உள்ளது. ஏனெனில், யாழ் குடாநாட்டில் உள்ள ஒரே ஒரு விமான ஓடு பாதை தாக்குதலுக்கு உள்ளாவது குறித்து அவரைத் தவிர வேறு எவருமே இவ்வாறு பொறுப்பின்றி பேசியிருக்க முடியாது.

அவ்வாறு இல்லாது பிரதிப் பாதுகாப்பமைச்சரின் கூற்றுக்களை ஏற்பதாயின் அவர் யாருக்குப் பிரச்சனை இல்லை எனக் கூறுகின்றார் என்பது ஆராய வேண்டியதாகவுள்ளது. ஏனெனில் பாரிய விமானத்தள ஓடுபாதை தாக்கப்படுவது நிச்சயமாக யாழ் குடாநாட்டில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினருக்குப் பிரச்சனை இல்லாததொன்றாக இருக்க முடியாது.

யாழ் குடாநாட்டில் நிலை கொண்டுள்ள சிறீலங்கா இராணுவத்தின் விநியோக மார்க்கங்களில் முக்கியமானதும், அவசரமானதுமான பணிகள் வான்மார்க்கம் மூலமாகவே மேற்கொள்ளப்படுகின்றது. இதற்குப் பலாலியிலுள்ள விமானப் படைத்தளமே ஆதாரமாக உள்ளது. இவ்விமானப் படைத்தளம் தொலைவில் இருந்து பீரங்கித் தாக்குதலுக்கோ அன்றி அண்மையில் இருந்து நேரடித் தாக்குதலுக்கோ உள்ளானால்கூட விமான வழி மூலமான விநியோகம், தொடர்பு என்பன பாதிக்கப்படுவது தவிர்க்க முடியாததொன்றே.

அவ்வாறு இல்லை எனில் அமைச்சர் ரத்வத்த கூறியிருப்பது கொழும்பில் உள்ள அரசியல்வாதிகளுக்கானதா என்ற அர்த்ததிலேயே நோக்கத்தக்கதாகும். ஏனெனில் ஓடுதளம் தாக்கப்படுவது படையினருக்கு பிரச்சனை இல்லை எனக் கூறுவது சிறு பிள்ளைத் தனமானதாகும்.

ஆனால் அமைச்சர் ரத்வத்த அவ்வாறான தாக்குதல்கள் பிரச்சனை எதையும் ஏற்படுத்தாது எனத் தெரிவித்துள்ளமை அவர் எந்த நிலையிலும் சிறீலங்கா இராணுவத்தைப் பலியிடவும் பணயம் வைக்கவும் தயாராகவுள்ளார் என்றே எண்ணவைக்கின்றது. அவ்வாறு இல்லாதுவிடில் அவர் அவ்வாறு கூறியிருக்கமாட்டார்.

தரைவழிப் பாதை ஒன்று இல்லாது யாழ் குடாநாட்டில் சுமார் 35000 இராணுவத்தினரை நிலைகொள்ளவைத்தமை ஏற்கனவே ஒரு தவறான இராணுவத்தந்திரோபாயம் எனச் சுட்டிக்காட்டப்பட்டு வருகின்றது. ஆனால் தற்பொழுது அப்படைகளின் வான் விநியோகத்திற்கான ஒரே ஒரு ஓடுபாதையாக உள்ள பலாலித் தளத்தின் ஓடுபாதை பாதிக்கப்பட்டாலும் பிரச்சனையில்லை என அமைச்சர் ரத்வத்த கூறியிருப்பது அவர் சிங்கள இராணுவத்தை முற்றாகப் பலியிட முற்பட்டு விட்டதையே காட்டுவதாக உள்ளது.

ஏற்கனவே யாழ் குடாநாட்டில் ஒரு சிப்பாய் இருக்கும்வரை புலிகளுடன் போரிடுவார்கள் எனப் பிரதிப் பாதுகாப்பமைச்சர் அனுருத்த ரத்வத்த கூறியுள்ள நிலையில் விமான ஓடுபாதை குறித்து கவலை இன்றிப் பேசுகின்றாரோ என்றே எண்ணவைக்கின்றது.

ஏனெனில் ஓடுபாதை பற்றிக் கவலைப்படாது பேசியுள்ள அமைச்சர் ரத்வத்த இந்நெருக்கடிக்கு எவ்வாறு தீர்வு காணப்படும் என்பது குறித்து எதுவுமே கூறவில்லை. உண்மையில் அவரால் எதுவும் கூறமுடியாது. சிலவேளை கடற் போக்குவரத்தை மனதில் கொண்டிருக்கலாம். ஆனால் பலாலியிலுள்ள விமானத்தளம் தாக்குதலுக்கு உள்ளானால். அதற்கு அடுத்ததாக உள்ள காங்கேசன்துறைத் துறைமுகமும் தாக்குதல் வீச்சிற்கு உள்ளாக்கப்பட்டதாகவே இருக்கும். இந்நிலையில் கடல்வழி விநியோகமும் பாதிப்பிற்கு உள்ளாவது தவிர்க்கமுடியாதுபோகும்.

இந்த வகையில் பார்க்கையில் பிரதிப் பாதுகாப்பமைச்சர் ரத்வத்தவின் கருத்துப்படி யாழ் குடாநாட்டிலுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் அத்தனை பேரும் அழிவுறுனினும் அவருக்கு அது பிரச்சனை அற்றதாகவே இருக்கும். அவ்வாறு இல்லாதுவிடில் யாழ் குடாநாட்டில் சிக்கியுள்ள படையினரை தற்போதுள்ள நிலையில் மீட்டெடுத்தல் மிகக்கடினமானதொரு காரியமாகவே இருக்கும் என இராணுவ நிபுணர்கள், விமர்சகர்கள் கருத்துக் கூறிக்கொண்டிருக்கையில், பிரதிப் பாதுகாப்பமைச்சர் ரத்வத்த விமானப் படைத்தள ஓடுபாதை தாக்கப்படுவதை ஒரு சாதாரண விடயமாக நோக்கியிருக்கமாட்டார். ■

## வன்னியில் மருந்துப்பற்றாக்குறை

சிங்கள அரசால் திட்டமிட்ட வகையில் வன்னிப் பிரதேசத்தில், அடிப்படை வைத்திய வசதிகள் கூட இல்லாமல் ஆக்கப்பட்டுள்ளது. சாதாரண சிகிச்சைகள்கூட நோயாளிகளுக்கு கிட்டுவது கடினமாகி உள்ள நிலையில் தீவிர சிகிச்சை என்பது அறவே இல்லாத நிலையே காணப்படுகின்றது. வன்னிப் பிரதேசத்தில் அக்கராயன், மல்லாவி, புதுக்குடியிருப்பு, ஆகிய இடங்களில் 40 படுக்கை வசதிகள் கொண்ட 3 கிராமிய வைத்திய சாலைகளும் சில மருந்தகங்கள் மாத்திரமே உண்டு. இவ் மருத்துவ நிலையங்களிலும் மருந்து வகைகளோடு, மருத்துவ உத்தியோகத்தர்களுக்கும் பலத்த பற்றாக்குறை நிலவுகின்றது. வன்னியில் கடமையாற்றும் மருத்துவர் நாளொன்றிற்கு 30-40 வரையான உள் நோயாளர்களை பார்வையிடுவதோடு, 300 தொடக்கம் 500 வரையான வெளிநோயாளர்களுக்கும் சிகிச்சை அளிக்க வேண்டியுள்ளது. இதே வேளை 7500 தாய்மார் மற்றும் குழந்தைகள் வன்னிப் பெருநிலப்பரப்பில் தடுப்பூசி மருந்துத் தடையால் பாதிக்கப்பட்டுள்ளனர்

எரிபொருள் தடை மற்றும் மருத்துவ உபகரணங்கள் கொண்டு வர அனுமதியில்லை இதனால் எக்ஸ்ரே வசதிகூட வன்னிமக்களுக்கு சிங்கள அரசு இல்லாமல் செய்துவிட்டது. ■



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# துணிவுடன்

*** நிச்சயிக்கப்பட்ட காலக்**
**தென்லெபனானிலிருந்து**
*** கொடுக்கப்பட்ட வாக்கு**



இஸ்ரேலியப் பிரதமர் எகூத் பராக் அவர்கள் எதனைப்பற்றியும் அலட்டிக்கொள்ளாமல் தமது படையினரை தென்லெபனானிலிருந்து திருப்பி அழைத்திருக்கின்றார். இதன் மூலம் தான் ஒரு இறுக்கமான முன்னாள் இராணுவ வீரர் என்பதை நிரூபித்திருக்கின்றார்.

இந்த நடவடிக்கையானது இஸ்ரேல் பற்றிய எதிர்நிலைப்பாட்டைக் கொண்டிருந்த அண்டைநாடுகளுடன் நல்லுறவைப் பேணும் நோக்கத்தைக் கொண்டதாக உள்ளது. கடந்த மேமாத இறுதியில் திட்டமிடப்பட்ட இஸ்ரேல் படைகளின் வெளியேற்றம் திட்டமிட்ட காலப்பகுதியிலும் பார்க்க வேகமாக நடந்து முடிந்துள்ளது.

இவ்வெளியேற்றத்தினால் பராக் அவர்களின் அரசியல் எதிர்காலம் பாதிப்படையக்கூடிய அபாயம்கூட உள்ளது. ஆனால் எதனைப் பற்றியும் சட்டை பண்ணாத எகூத் பராக் அவர்களோ கண்டனங்கள்தான் எம்மை உயிர்ப்புடன் வைத்திருக்க வல்லவை என்கிறார். பராக்கின் படைகளை வாபஸ் பெறும் நடவடிக்கைக்கு 75 வீதமான இஸ்ரேலியர்களின் ஆதரவு உள்ளதாகக் கருத்துக் கணிப்பு நிறுவனம் ஒன்று தெரிவித்துள்ளது.

1982இலிருந்து தென்லெபனானில் ஆயிரக்கணக்கான இளம் இஸ்ரேலியர்கள் இறந்துள்ளனர். இனி வீணே இஸ்ரேலியர்களின் உயிர்நீத்தலுக்கு முற்றுப்புள்ளி பராக்கினால் வைக்கப்பட்டுள்ளதாக இஸ்ரேலியத் தாய்மார் நிம்மதிப் பெருமூச்சு விடுகின்றனர்.

அவசரஅவசரமாக வெளியேறிய இஸ்ரேல் படைகள் தமது தளங்களிற் பெரும்பாலானவற்றையும், கொண்டு வரமுடியாத ஆயுத தளபாடங்களையும் கிஸ்புல்லாத் தீவிரவாதிகளிடம் சிக்கக்கூடாது என்பதற்காக முற்றாகத் தகர்த்தழித்து விட்டே வெளியேறினர்.

தென்லெபனானின் ஆக்கிரமிப்புக் குறித்து சற்றே பின்னோக்குவோம். இஸ்ரேல் பெரும் தொகையான பாலஸ்தீனர்களின் நிலங்களைப் பிடித்துக்கொண்டு அவர்களை நாடற்றவர்களாக்கியது. பாலஸ்தீனர்களுக்கு ஆதரவாக லெபனானும், சிரியாவும் இருந்தன. பாலஸ்தீன விடுதலைப் போராளிகளின் பிரதான தளமாக லெபனான் விளங்கியது.

1978ஆம் ஆண்டு லெபனான் மீது தாக்குதல் தொடுத்த இஸ்ரேல் லெதானி நதிவரை முன்னேறியது. 1981 ஜூலை மாதம் இடம்பெற்ற தாக்குதலில் 500 லெபனானியர்கள் கொல்லப்பட்டனர். 1200 பேர் காயமடைந்தனர். 1982இல் பாலஸ்தீனிய விடுதலைப் போராளிகள் இஸ்ரேலின் கலில் நகர் மீது எறிகணைத் தாக்குதலை நடத்தினர். இதனைச் சாட்டாக வைத்து 1982 ஜூன் 4ஆம், 5ஆம் திகதிகளில் இஸ்ரேல் கீபீர் மிகையொலி குண்டுவீச்சு விமானங்கள் குண்டுமாரி பொழிய, 120 000 படையினரோடும், 1600 யுத்த தாங்கிகளோடும் படையெடுத்தது. இதனிடையே 30,000 படையினரை லெபனானிய முஸ்லீம்களுக்கு ஆதரவாக சிரியா அனுப்பியது. இன்று வரையும் இப்படையணிகள் லெபனானில் நிலை கொண்டுள்ளன.

1985இல் லெபனானின் பெரும் பகுதியிலிருந்து பின்வாங்கிய இஸ்ரேல் தென் லெபனானில் 328 சதுர மைல் பரப்பளவிலான பாதுகாப்புவலயத்தை உருவாக்கிக் கொண்டது. இதன் மூலம் இஸ்ரேலின் எல்லைப் பிராந்தியமான கலிலீயை கிஸ்புல்லா அடிப்படைவாத முஸ்லீம் போராளிகளின் எறிகணைத் தாக்குதலிலிருந்து இஸ்ரேல் பாதுகாத்துக் கொண்டது.

இப்பாதுகாப்பு வலயத்தில் இஸ்ரேல் படையினரோடு, இஸ்ரேல் உருவாக்கிய (S.L.A- South Lebanon Army) தென்லெபனானிய இராணுவமும் காவற் கடமையில் ஈடுபடுத்தப்பட்டன. பாது



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நடந்த வெளியேற்றம்

**டுவில் இஸ்ரேலியப் படைகள்**
**வளியேறின.**
**தியை எகூத் பராக் அவர்கள் நிறைவேற்றினார்.**

காப்பு வலயத்தில் வாழ்ந்த தென்லெப னானிய கிறிஸ்தவர்களைக் கொண்டு இஸ்ரேலின் நிதியுதவியுடனும் பயிற்சியு டனும் ஆரம்பிக்கப்பட்ட இக் கூலிப் படையினர் ஆரம்பத்தில் பாலஸ்தீன விடுதலை அமைப்பினரோடும் பின்ன தாக லெபனானிய சறியத் அமால் குழு வினரோடும், 1982இன் இஸ்ரேல் ஆக்கி ரமிப்பை எதிர்ப்பதற்காக உருவாக் கப்பட்ட கிஸ்புல்லா முஸ்லீம் போராளி களோடும் மோதினர்.

இப்பொழுது பாதுகாப்பு வலயத் திலிருந்து இஸ்ரேல் வெளியேறுகின்றது. அது உருவாக்கிய ஐந்தாம் படையான தென்லெபனானிய இராணுவத்திற்கு நடப்பதென்ன? தென்லெபனானிலிருந்து வெளியேறுவது என இஸ்ரேலியப் படை கள் முடிவெடுத்ததன் பிற்பாடு தாம் தங் கியிருந்த தளங்களிற் சிலவற்றை தென்லெபனானிய இராணுவத்திடம் ஒப்படைத்தனர். ஆனால் இத்தளங்கள் யாவும் இஸ்ரேல் ஒப்படைத்த மறு தினமே கிஸ்புல்லா முஸ்லிம் போரா ளிகளால் தென்லெபனானிய இராணு வத்திடமிருந்து கைப்பற்றப்பட்டுவிட்டன.



இன்று தென்லெபனானின் ஸ்திரத் தன்மை என்பது கேள்விக்குறியாகி விட்டது. கடந்த 18 வருடங்களாக இஸ் ரேலிடம் பயிற்சியும் நிதியும் பெற்றுவந்த கூலிப்படையினரும் அவர்தம் குடும் பங்களும் நிர்க்கதி நிலையை அடைந் துள்ளனர். அவர்களிற் சிலர் இஸ்ரே லிடம் தஞ்சமடைந்துள்ளனர். மற்றும் சிலரோ கிஸ்புல்லாப் போராளிகளிடம் சரணடைந்துள்ளனர். இஸ்ரேலுடன் ஒத் துழைத்தார்கள் என்பதற்காக, இம் மக்கள் முஸ்லிம் போராளிக் குழுக் களால் களையெடுக்கப்படும் அபாயமும் உள்ளது.

இதில் குறிப்பிடத்தக்க அம்சம் யாதெனில் லெபனானில் வாழும் கிறிஸ் தவர்கள் கி.பி முதலாம் நூற்றாண்டி லிருந்து வாழ்ந்து வருகின்றார்கள். அவர் களுடைய உயிர் வாழ்க்கை நூலிழை யிலேயே நடைபெற்று வருகின்றது. அதி லும் தற்போது முஸ்லிம்களின் அச்சுறுத் தலோடு, இஸ்ரேலோடு இணைந்து வாழ்ந்த துரோகிகள் என்று லெபானி லேயே ஒதுக்கப்படும் அபாயமும் அவர் களுக்கு உள்ளது.

இஸ்ரேலின் பாதுகாப்பு வலயத்தில் இருந்தவர்களில் 30 வீதமானவர்கள் தென்லெபனானிய இராணுவத்தில் இருந் தனர். அவர்களில் 30,000 இராணு வத்தினர் தப்பியோடிவிட்டனர்.

இஸ்ரேல் இப்பிரதேசத்திலிருந்து வெளியேறிய போதிலும் கிஸ்புல்லா தீவிரவாதிகளின் போக்கில் எதுவித மாற்றங்களும் இருப்பதாகத் தெரிய வில்லை. மாறாகத் தீவிரவாதிகள் இஸ் ரேல் தற்பொழுது நிலைகொண்டுள்ள சிறிய நிலப்பரப்பான கோலான் குன்றுகளை அண்மித்த ( Shebaa) சேபா பண்ணையை விட்டும் வெளி யேறுவதோடு, அரசியல் கைதிகளாக இஸ்ரேலினால் பிடித்து வைக்கப் பட்டுள்ள அனைத்து இஸ்லாமியர்களும் விடுவிக்கப்பட வேண்டும் எனவும் தமது கோரிக்கைகளை விடுத்துள்ளனர். இவை நடைபெற்றால் மாத்திரமே போர்ஓய்வு சாத்தியம் என இவ்வமைப்பு குறிப்பிட் டுள்ளது.

இஸ்ரேல் தனது எல்லைப்பகுதி களை கிஸ்புல்லாப் போராளிகளின் கட்சுசா எறிகணைகள் மற்றும் சினைப்பர் சூடுகளிலிருந்தும், இஸ்ரேலுக்குள் நாச வேலை செய்ய வரும் போராளிகளின் ஊடுருவல்களிலிருந்தும் பாதுகாக்க வேண்டிய நிலையிலுள்ளது. இதற்காக அது ஊடுருவல்காரர்களை கண் காணிக்கவென விசேட தேடொளிகளை நிறுவுதல் (search lights), கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளில் எறிகணைகளால் சிதறடிக்கப்படமுடியாத விசேட பாதுகாப்புத் தட்டிகளை நிறு




வுதல், இடையிடையே லெபனான் பகுதி களில் ஆளற்ற விசேட விமானங்களைப் பறக்கவிடுதல், எல்லையோரம் நெடு கிலும் மின்பாய்ச்சிய கம்பி வேலிகளை அமைத்தல், தொடர்ச்சியான இராணுவ ரோந்துகளை மேற்கொள்ளல் இவற் றோடு எறிகணைகளை திசைமாற்றக் கூடிய லேசர் கட்டுப்படுத்திகளை எல் லையோரங்களில் நிறுவுதல் முதலான பல ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது.

என்னதான் ஏற்பாடுகளை இஸ்ரேல் மேற்கொண்டாலும், இப்பிராந்தியத்தின் அமைதி கிஸ்புல்லாப் போராளிகளின் கைகளிலேயே தங்கியுள்ளது என இஸ்ரேல் கூறுகின்றது. ஆனால் இப் பிராந்தியத்தின் ஏனைய நாடுகளோ, இஸ்ரேல் 1967இற்கு பின்னர் கைப் பற்றிய பகுதிகளிலிருந்து வெளியேறி னால் மாத்திரமே அமைதி சாத்தியம் என்று கூறுகின்றன. இதுவே சரியானது மாகும். ■



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அணையாத தீபங்கள்




## கப்டன் ரஞ்சன் லாலா

தமிழீழ மக்களின் தியாகம் செறிந்த விடுதலைப் போராட்டத்தின் படிமுறை வளர்ச்சியில் பல்வேறு தியாக அத்தியாயங்கள் குறைவின்றிக் காணப்படுவதும், வேறெந்தப் போராட்டங்களிலும் இல்லாத பல அரிய சாதனைகள் நிகழ்த்தப்பட்டிருப்பதும் இன்று உலகமே ஏற்றுக்கொண்டுவிட்ட விடயங்களாகும்.

ஒரு சில ஆயுதங்களுடனும் சில போராளிகளுடனும் ஆரம்பிக்கப்பட்ட விடுதலைப் புலிகள் இயக்கம் இன்று தனது சரித்திரத்தில் பல சாதனைகளைப் படைத்து வெற்றியின் விளிம்பில் நிற்பதற்கு ஆரம்பகர்த்தாக்களாக, அத்திவாரக் கற்களாக அமைந்தவர்களில் கப்டன் ரஞ்சன்/லாலா ஒருவராவர்.

2.9.1960இல் பருத்தித்துறையில் பிறந்த இவர் தனது 18ஆவது வயதில் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணைந்து கொண்டார். கனகநாயகம் ஞானேந்திரமோகன் என்னும் சொந்தப்பெயரைக் கொண்ட இவர் இயக்கத்தில் ரஞ்சன், லாலா, கடவுள் என்னும் பெயர்களால் அழைக்கப்பட்டு வந்தார்.

அமைப்பின் மூத்த உறுப்பினர்களில் ஒருவரான இவர் தமிழீழத் தேசியத் தலைவரவரின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவராகவும், தலைவரின் சிந்தனைக்கேற்ப செயற்படுபவராகவும், இயக்கத்தின் இரகசியங்களை சிறந்த முறையில் பேணுபவராகவும் விளங்கினார்.

இவர் இயக்கத்தில் சேர்ந்த ஆரம்பகாலத்தில் போராட்டம் தொடர்பான பிரச்சார வேலைகள் முதல், எதிரியின் நடமாட்டங்களை அவதானித்தல், அமைப்பின் பொருளாதார வளத்தைப் பெருக்குவதற்காக பண்ணை வேலைகள் வரை தம்மை ஈடுபடுத்திக் கொண்டார்.

இவர் பங்கேற்ற களங்கள் பல, யாழ்நகரில் காங்கேசன்துறை வீதியில் பட்டப்பகல் வேளையில் மக்கள் நடமாட்டம் மிக்க நேரத்தில் இராணுவத் தினரைச் சுட்டுக் கொன்றுவிட்டு அவர்களின் 303 சுடுகலன் ஒன்றை கைப்பற்றிய தாக்குதலில், லெப்.சீலன், லெப்.கேணல் புலேந்திரன் ஆகியோருடன் இணைந்து தாக்குதலில் பங்குபற்றினார்.

1983 ஜுலை 23ஆம் திகதி திருநெல்வேலியில் இடம்பெற்ற வரலாற்றுப் பெருமைமிக்க கண்ணிவெடித்தாக்குதலின்போதும் அதில் பங்குபற்றியிருந்தார்.

10.01.1984இல் பருத்தித்துறையில் இருந்த சிங்களப் பொலிஸ்நிலையத்தின் மீது பொதுமக்களை ஒன்று திரட்டி தாக்குதல் நடத்தி அதனை அழித்தார். அத்துடன் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தின் மீதான தாக்குதலிலும், உமையாள்புரம் இராணுவத் தொடர்வண்டி மீதான தாக்குதலிலும், கந்தர்மடம் தேர்தல் வாக்களிப்பு நிலையம் மீதான தாக்குதலிலும் பருத்தித்துறை பொலிஸ் இன்ஸ்பெக்டர் விஜயவர்த்தனா மீதான தாக்குதலிலும் கப்டன் ரஞ்சன்/லாலா பங்குபற்றியிருந்தார்.

13.7.84 அன்று புலிகளிடமிருந்த முக்கிய ஆயுதங்கள் பொலிகண்டியிலிருந்து ஒரு வானில் வேறோரிடத்திற்கு ஏற்றிச் செல்லப்பட்டுக் கொண்டிருந்தது. இந்த வானில் சில தளபதிகளும் போராளிகளும் சென்று கொண்டிருந்தனர். இந்த இடமாற்றும் வேலையை பொறுப்பேற்றிருந்த கப்டன் ரஞ்சன் லாலா இதற்கு முன்னால் ஒரு வண்டியில் சென்று கொண்டிருந்தார்.

கெருடாவில் பகுதியிலுள்ள வீதிவளைவொன்றில் கப்டன் ரஞ்சன் சென்று கொண்டிருந்த வண்டி திரும்பியபோது எதிரே சிங்கள இராணுவத்தின் வண்டி ஒன்று வந்து கொண்டிருந்தது. இந்த நிலையில் இராணுவ வண்டியை எதிர்கொள்ள முயன்றால் ஏற்படப்போகும் விபரீதத்தைப் புரிந்து கொண்ட கப்டன் ரஞ்சன் இராணுவத்தின் கவனத்தை தன் பக்கம் திருப்புவதற்காக தன் வண்டியை அருகிலிருந்த சந்து ஒன்றுக்குள் திருப்பினார்.

அவரின் இந்த முயற்சியால் திசைதிரும்பிய சிங்கள இராணுவம் கப்டன் ரஞ்சனின் வண்டியைத் துரத்திச் செல்லத் தொடங்கியது. சிறிது நேரம் சென்றதும் ரஞ்சனின் வண்டியை இராணுவ வண்டி மோதியது.

வண்டியிலிருந்து வீழ்ந்த கப்டன் ரஞ்சன் இராணுவத்தின் கவனத்தை தொடர்ந்தும் தன்பக்கமே வைத்திருப்பதற்காக ஓடத் தொடங்கினார். சிறிது தூரம் ஓடிய ரஞ்சன் ஒரு வெட்டவெளியினூடாக ஓட வேண்டிய நிலை ஏற்பட்டது. நிராயுத பாணியாக நின்ற ரஞ்சனுக்கு நிலையெடுத்து மறைந்து கொள்ளக்கூட இடம் எதுவும் இருக்கவில்லை. அவ்வேளையில் தன்னுடன் வந்தவரை தப்பிச்செல்லுமாறு சைகை செய்து கப்டன் ரஞ்சன் சிங்கள இராணுவத்தின் துப்பாக்கிகளிலிருந்து புறப்பட்ட ரவைகளை உடலில் ஏற்று வீரச்சாவை அடைந்தார்.

கப்டன் ரஞ்சனின் இந்த சமயோசித நடவடிக்கையை தக்க சமயத்தில் மேற்கொண்டிராது விட்டால் தமிழ் மக்களின் விடுதலைப்போராட்டம் பல போராளிகளையும் முக்கிய ஆயுதங்களையும் இழந்து சில காலம் பின்னடைவிற்கு உள்ளாகக்கூடிய நிலைகூட ஏற்பட்டிருக்கும்.

இவ்வாறு போராட்டத்திற்கு ஏற்படவிருந்த இழப்பைத் தவிர்ப்பதற்காக தன்னுயிரை ஈகம் செய்தார் கப்டன் ரஞ்சன் / லாலா. இவரைப் போன்ற மாவீரர்களின் தியாகங்களே, இன்று எமது விடுதலைப்போராட்டம் வெற்றிப்பாதையிற் செல்லக் காரணமாக அமைந்தன என்றால் மிகையாகாது.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

*(யாழ் குடாநாட்டில் போர் நடக்கும் பிரதேசத்தில் அகப்பட்டுள்ள அப்பாவிப் பொதுமக்கள் பாதுகாப்பான பிரதேசங்களுக்குச் செல்ல சர்வதேச சமூகம் வழிவகை செய்யவேண்டும் எனக் கோரி 19.06.00 அன்று தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடம் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு)*

# சர்வதேச சமூகத்திற்கு ஒரு வேண்டுகோள்!

யாழ் குடாநாட்டின் தென்மராட்சிப் பிரதேசத்தில் சிறீலங்காப் படையினர் நடத்திவரும் தொடர்ச்சியான எறிகணைத் தாக்குதல்களாலும், கண்மூடித்தனமான விமானக் குண்டு வீச்சுக்களாலும், பெரும் மனித அவலங்களை மக்கள் நாளாந்தம் சந்தித்த வண்ணமுள்ளனர்.

இவ்விரக்கமற்ற மிருகத்தனமான படையினரின் தாக்குதல்கள் காரணமாக நூற்றுக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டும், காயமடைந்தும் உள்ளதோடு, உணவு மருந்து போன்ற அத்தியாவசியப் பொருட்களின்றி அப்பகுதிகளில் வாழும் மக்கள் சொல்லொணாத் துன்பங்களைத் தொடர்ச்சியாக அனுபவித்து வருகின்றார்கள்.

கர்ப்பிணித் தாய்மார்கள், குழந்தைகள், கைதடி முதியோர் இல்லத்தில் வாழும் முதியோர், கைதடி சிறுவர் இல்லத்தில் வாழும் வலது குறைந்த சிறுவர்கள் போன்றோர் படையினர் இரவு பகலாக நடத்திவரும் கொடூரமான தாக்குதல்கள் காரணமாக அனுபவிக்கும் துன்பங்கள் அளப்பரியவை.

அத்துடன் இம்மக்கள் வெளியில் நடமாடுவதற்கே அஞ்சுவதுடன் மிகுந்த மனப்பீதியுடன் பதுங்குகுழிகளுக்குள்ளேயே தங்கி உணவு, குடிநீர் போன்ற அடிப்படை வசதிகள் இன்றி பெரும் சிரமங்களை அனுபவித்து வந்துள்ளார்கள்.

கடந்த பல வாரங்களாக ஐ.சி.ஆர்.சி, யூ.என்.எச்.சி.ஆர் வன்னிப்பிரதிநிதிகளுக்கு இம்மக்களின் அவல நிலைமையை பல்வேறு கலந்துரையாடல்களின்போது நாம் தெளிவாக விளக்கிக் கூறியதுடன், இந்த மனிதாபிமான அமைப்புக்களின் வேண்டுகோளின் பேரில் நாமாகவே முன்வந்து ஒரு யுத்த நிறுத்தத்தையும் அறிவித்ததுடன், தென்மராட்சிப் பகுதியில் சிக்கியிருக்கும் மற்றும் காயமடைந்திருக்கும் மக்களையும் பார்வையிடவும், அம்மக்கள் விரும்பும் பாதுகாப்பான பிரதேசங்களுக்கு அவர்களை அழைத்துச் செல்லவும் பல்வேறு பாதைகளைத் திறப்பதற்கான எமது சம்மதத்தையும் தெரிவித்திருந்தோம். எனினும் ஐ.சி.ஆர்.சி, யூ.என்.எச்.சி.ஆர் போன்ற மனிதாபிமான அமைப்புக்கள் இம்மக்களின் அவலங்களை நீக்குவதற்கு இதுவரையில் எந்த விதமான உருப்படியான பதிலையோ தீர்வையோ தர முன்வைக்கவில்லை.

தென்மராட்சி மக்கள் பாதுகாப்பாக வெளியேறுவதற்கான பல்வேறு தரைப் பாதைகள் மற்றும் யுத்தநிறுத்தம் என்பனவற்றை உரிய முறையில் புலிகள் எழுத்து மூலம் தெரிவித்தால் தம்மால் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள முடியும் என்று ஐ.சி.ஆர்.சி, யூ.என்.எச்.சி.ஆர் போன்ற நிறுவனங்கள் வேண்டியதின் பேரில் மே 26, ஜுன் 9 மற்றும் ஜுன் 12 ஆகிய திகதிகளில் உத்தியோகபூர்வமான முறையில் நாம் எழுத்து மூலம், இந்த மனிதாபிமான வேண்டுகோளைத் தெரிவித்த போதிலும், இந்த நிறுவனங்கள் இதுவரையில் மக்களைப் பாதுகாப்பான முறையில் வெளியேற்றுவதற்கு எதுவிதமான ஆக்கபூர்வமான முயற்சிகளையும் எடுக்காததையிட்டு, நாம் பலத்த ஏமாற்றத்தையும் கவலையும் அடைந்துள்ளோம்.

சர்வதேச மனிதாபிமானச் சட்டங்கள் மற்றும் ஜெனீவா உடன்படிக்கைகளின் பிரகாரம் போரின் மத்தியில் சிக்கியுள்ள பொதுமக்கள் யுத்தத்தின் கொடூரத்தில் அகப்படாமல் பாதுகாக்கப்படாமல் வேண்டும் என்பதோடு மக்கள் தாம் பாதுகாப்பான பிரதேசம் என்று கருதும் இடங்களிற்குச் செல்வதற்கான உரிமையும் மதிக்கப்படல் வேண்டும்.

இதன் பிரகாரம் போரின் மத்தியில் சிக்கியிருக்கும் மக்கள் பாதுகாப்பான முறையில் வெளியேறுவதற்கான யுத்த நிறுத்தத்தையும், பாதுகாப்பான பல்வேறு பாதைகளையும் நாம் திறப்பதற்குச் சம்மதித்த போதிலும், சர்வதேச மனிதாபிமான அமைப்புக்கள் தமது கோட்பாடுகளுக்கும் கொள்கைகளுக்கும் அமைவாக இயங்காமல், மக்களைப் பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்துச் செல்வதற்கு ஆக்கபூர்வமான முறையில் உருப்படியான நடவடிக்கைகள் எதனையும் எடுக்காமல் பாராமுகமாக இருந்து வருவது எமக்கு மிகுந்த மனவேதனையை அளிக்கின்றது.

பெரும் எண்ணிக்கையிலான மக்கள் போரில் சிக்கியுள்ள பகுதிகளில் இருந்து வெளியேறுவதற்கு, மனிதாபிமான அமைப்புக்களின் உதவிகளையும் ஒத்தாசைகளையும் எதிர்பார்த்து ஏமாற்றமடைந்த நிலையில் தமது உயிரைக் கையில் பிடித்தபடி, பல்வேறு சிரமங்களுக்கும் ஆபத்துக்களுக்கும் மத்தியில் வெளியேறிவிட்டார்கள். தற்போது சில நூற்றுக்கணக்கான வயோதிபர்கள் மற்றும் நடமாட முடியாதவர்கள் உட்பட ஒரு தொகுதி மக்கள் தென்மராட்சிப் பகுதியில் வாழ்ந்து வருகின்றார்கள். இவர்களுக்குத் தேவையான உதவி ஒத்தாசைகளை தமிழர் புனர்வாழ்வுக் கழகம் போன்ற உள்ளூர் தொண்டர் நிறுவனங்கள் வழங்கிவருகின்றன.


எனவே எஞ்சியிருக்கும் இந்த மக்களையாவது பாதுகாப்பான முறையில் வெளியேற்றுவதற்கு சர்வதேச மனிதாபிமான அமைப்புக்களும் சர்வதேச சமூகமும் முன்வரவேண்டும் என்பதே இந்த அவலப்பட்டிருக்கும் மக்களினதும் எமது அமைப்பினதும் வேண்டுகோளும் எதிர்பார்ப்பும் ஆகும். ■



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





## இரு டோராப் படகுகள் மூழ்கடிக்கப்பட்டன.

கடந்த 05-06-00 அன்று இடம்பெற்ற கடற்சமரின்போது விடுதலைப் புலிகளினால் இரு டோராப் படகுகள் மூழ்கடிக்கப்பட்டன. மற்றும் இரண்டு படகுகள் பாவிக்கமுடியாத அளவிற்கு சேதமாக்கப்பட்டன. வடமராட்சி கிழக்குக் கடற்பிரதேசத்தில் அதிகாலை நேரம் இம்மோதல் இடம்பெற்றது. எம்.ஐ- 24 உலங்குவானூர்திகளின் வழித்துணையோடு வந்த 15ற்கு மேற்பட்ட கடற்கலங்களின் தொகுதியை ஊடறுத்த கடற்புலிகள் இத்துணிகரத் தாக்குதலை நடத்தினர். இதன்போது இரு டோராப் படகுகளினதும் கட்டளை அதிகாரிகள் உட்பட 23 கடற்படையினரை தான் இழந்துள்ளதாக சிறீலங்கா அரசு ஒப்புக்கொண்டுள்ளது.

மூழ்கடிக்கப்பட்ட டோராக்களில் இருந்த பீரங்கிகள் மற்றும் யுத்த தளபாடங்களும் விடுதலைப் புலிகளினால் கைப்பற்றப்பட்டன. இவ்வெற்றிக்கு வித்தாக 12 கடற்புலிகள் வீரச்சாவடைந்தனர்.

## சந்திரிகாவின் அரசியல் இலாபத்திற்காக இராணுவ வீரர் தினம்.






வழமை போல் அப்பாவி பொது மக்கள் மீது பழி தீர்க்கும் சிங்களப்படைகள்.

சிறீலங்கா வரலாற்றில் முதன்முதலாக இராணுவவீரர் தினம் கடந்த 07-06-00ஆம் திகதி சிறீலங்கா எங்கும் கொண்டாடப்பட வேண்டும் என அரசு அறிவித்த போதும் எதிர்பார்த்த அளவில் வெற்றியளிக்க வில்லை. ஆக்கிரமிப்புப் போரில் இறந்த படையினரின் உடல்களின் எண்ணிக்கையை குறைத்து வெளிவிடுதல், இறந்தவர்களின் குடும்பத்தாருக்கு நட்டஈடு வழங்கப்பட வேண்டும் என்பதற்காக காணாமல் போனோர் பட்டியலில் சேர்த்தல். போரில் காயமுற்ற படையினரை களமுனைகளில் இருந்து எடுத்துச் செல்வதில் அக்கறை காட்டாமை, என சிங்களம் பல்வேறு வகைகளில் போரிலீடுபடும் இராணுவத் தினரை தனது பதவி இலாபத்திற்காக பலிக்கடாக்களாகக் கருதி கணக்கிலெடுக்காமலே இதுவரை காலமும் இருந்து வந்துள்ளது. தற்பொழுது தொடர் தோல்விகளைக் கண்டு அஞ்சங்கொண்ட சிங்களம், இனவாத்தை நிறுவனமயப்படுத்தி அதன் மூலம் சிங்களவர்களின் இன எழுச்சியை தூண்டிவிடுவதன் மூலம் போரைத் தொடரலாம் என்ற சந்திரிகா அம்மையாரின் நப்பாசையே இந்த போர்வீரர் நாள். அந்நிகழ்வில் கலந்துகொண்டுவிட்டு நிதி சேகரிப்பில் ஈடுபட்ட வேளையில் கைத்தொழில் அமைச்சர் சி.வி. குணரட்ணா தற்கொடையாளியின் குண்டுத்தாக்குதலில் கொல்லப் பட்டார். இதன்போது அமைச்சர், அமைச்சரின் மனைவி, தெகிவளை பிரதி மேயர், மற்றும் அமைச்சரின் மெய்ப்பாது காவலர்கள் உட்பட 20ற்கும் மேற்பட்டோர் பலியாகினர்.

தமிழகத்திலிருந்து வெளிவரும் தினகரன் நாளிதழ் மற்றும் ஜூனியர் விகடன் சஞ்சிகை என்பவற்றில் வெளிவந்த கருத்தோவியங்கள்......











தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மீள்பார்வை 2000

## மே



24.05.00 அன்று சுட்டு வீழ்த்தப்பட்ட எம்.ஐ 24 உலங்குவானூர்தி.

**08.05.00**
யாழ் குடாநாட்டில் யுத்தநிறுத்தம் ஒன்றை மேற்கொண்டு படையினரை வெளியேற்றுவதற்கு வசதியாக தாங்கள் போர்நிறுத்தம் செய்யத் தயாராக இருப்பதாக விடுதலைப் புலிகள் அறிவித்திருந்தனர்.

**10.05.00**
யாழ்நகரை நோக்கிய ஓயாத அலைகள் விசேட படையணிகளால் நாவற்குழிப் பாலம் மீட்கப்பட்டது.

**11.05.00**
யாழ்மாநகர எல்லைக்குள் உள்நுழைந்த விடுதலைப் புலிகளின் படையணிகளால் கொழும்புத்துறை இறங்குதுறைப் பகுதியும் அரியாலைப் பகுதியும் மீட்கப்பட்டன.
-அரியாலையை ஊடறுத்து விடுதலைப் புலிகள் மணியந்தோட்டம் வரை முன்னேறினர். இதேவேளை கோயிலாக்கண்டி, தனங்கிளப்பு ஆகிய இடங்களிலுள்ள தளங்கள் கைப்பற்றப்பட்டன.

**12.05.00**
பூநகரியில் சிறீலங்காப் படையினரின் விமானத் தாக்குதலுக்கு இலக்காகி ஐந்து பொதுமக்கள் பலியாகினர்.

**14.05.00**
திருகோணமலை பூவரசந்தீவில் இராணுவப் பயிற்சி பெற்ற பொலிசாரின் முகாம் தாக்கியழிக்கப்பட்டது.

**15.05.00**
சிறீலங்கா இராணுவத்தினால் ஏவப்பட்ட ஏறிகணை குருநகரில் வீழ்ந்து வெடித்ததில் நால்வர் பலி.

**16.05.00**
யாழ் மாநகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளான பாசையூர், குருநகர் பகுதிகள் மீட்கப்பட்டுள்ளன.

**17.05.00**
- கைதடிச்சந்தி இராணுவ முகாம் கைப்பற்றப்பட்டது.
- மட்டக்களப்பில் வெசாக் தினத்தன்று இடம்பெற்ற குண்டு வெடிப்பையடுத்து வெறித்தனமாக நடந்து கொண்ட சிங்களப்படையினரால் 10 மாணவர்கள் உட்பட 24 பொதுமக்கள் பலியாகினர். 74ற்கு மேற்பட்ட பொதுமக்கள் காயமடைந்தனர்.

**18.05.00**
நீண்ட காலமாக யாழ்நகரில் இயங்கி வந்த UNHCR அலுவலகம் தொடரும் யுத்த நெருக்கடிகளால் பண்டத்தரிப்பிற்கு இடமாற்றப்பட்டுள்ளது.

**19.05.00**
- கைதடி வயோதிபர் இல்லத்தின் மீது சிறீலங்கா இராணுவம் ஏவிய எறிகணைகள் வீழ்ந்து வெடித்ததில் 15 அப்பாவித் தமிழ் மக்கள் பலியாகினர். முப்பத்தைந்து பேர் படுகாயங்களுக்குள்ளாகினர்.
- தென்மராட்சிக் கோட்டத்தில் மட்டுவில், சரசாலைப்பகுதிகள் மீட்கப்பட்டன.

**19.05.00**
சிறீலங்கா இராணுவத்தின் ஆக்கிரமிப்பிலிருந்த யாழ் குடாநாட்டிலிருந்து வெளிவரும் ஒரேயொரு நாளிதழான உதயன் பத்திரிகைக் காரியாலயம் சிறீலங்கா இராணுவத்தால் காலவரையறையின்றி இழுத்து மூடப்பட்டுள்ளது.

**20.05.00**
- யாழ் குடாநாட்டில் இரண்டாவது பெரிய நகரமான சாவகச்சேரி மீட்கப்பட்டது.
- யாழ் குடாநாட்டை ஆக்கிரமித்துள்ள இராணுவத்தினர் சரணடைந்தால் பாதுகாப்பாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினூடாக அவர்களின் சொந்த இடங்களுக்கு அனுப்பிவைக்கப்படுவர் என விடுதலைப் புலிகளால் அறிவித்தல் விடுக்கப்பட்டது. இதற்கு ஒரு வாரகால அவகாசம் விடுவதாகவும் அறிவித்தல் விடுக்கப்பட்டது.

**22.05.00**
- வன்னிப் பெருநிலப்பரப்பில் யோகபுரம் பகுதியில் பல்லாயிரக் கணக்கான மக்கள் திரண்டு, தமிழீழத்தை அங்கீகரிக்க கோரியும், வெளிநாட்டு இராணுவத் தலையீடுகள் தமிழீழத்தில் இருக்கக் கூடாது என வலியுறுத்தியும் பேரணி நடத்தியுள்ளனர்.
- கொழும்பிலிருந்து வரும் பிரபல வாரப் பத்திரிகையான சண்டே லீடரை சிறீலங்கா அரசு தடைசெய்துள்ளது.

**24.05.00**
- தென்மராட்சியில் விடுதலைப் புலிகளின் விமான எதிர்ப்புப் படையணிகளால் சிறீலங்கா விமானப்படைக்குச் சொந்தமான ஒரு எம்.ஐ 24 உலங்குவானூர்தி சுட்டு வீழ்த்தப்பட்டது.
- நோர்வே தூதரகத்தின் மீது சமாதானத்தை எதிர்க்கும் சிங்கள இனவாதிகளால் குண்டு வீசி சேதப்படுத்தப்பட்டுள்ளது.

**26.05.00**
யாழ் குடாநாட்டில் சிறீலங்கா இராணுவம் சரணடைதலுக்கான ஒரு வாரகால அவகாசம் இன்றுடன் முடிவடைந்துள்ளதைத் தொடர்ந்து சிங்களப்படைகளின் மீதான தாக்குதலை ஆரம்பிப்பதற்கு முன்னராக பொதுமக்கள் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்ல வசதியளிக்கு முகமாக 12 மணித்தியால போர் ஓய்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**30.05.00**
வவுனியா மன்னார் வீதியில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட கண்ணிவெடித் தாக்குதலில் இராணுவக் கொமாண்டோப் பொலிசார் சென்ற றக்வண்டியொன்று முற்றாக சிதைந்தது. இதில் பயணம் செய்த பொலிசார் பத்துப்பேர் கொல்லப்பட்டுள்ளனர். 17 பேர் காயமடைந்துள்ளனர்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 'கண்கள் கூறும் வார்த்தைகள்'



**காணும் கண்களே,**
**கூறும் வார்த்தை என்ன?**
**அஞ்சல் ஊடாக எரிமலைக்கு.**




குறிப்பு: **உங்கள் ஆக்கங்களை பத்து வரிகளுக்கு மேற்படாமல் எழுதவும்.**



வாழவேண்டிய இளைஞன் இவன்
வாழ்வில் கண்ட கனவுகளோ ஏராளம்
எல்லாம் ஒரு நொடியில் இழந்து விட்டான்.
வீட்டில் உறக்கத்தில் இவன் கைதானான்.

தமிழர்கள் எல்லாம் புலியென்றால்- இவன்
மட்டுமென்ன விதிவிலக்கா சிங்களத்துக்கு.
விசாரணை என்ற பெயரால் கைகட்டியபடி-
பலர் பார்க்க
அழைத்துச் செல்லப்பட்டான் ஊர்வலமாக.

திருமண ஊர்வலத்தில் செல்ல வேண்டியவன்.
மரணத்துக்காக ஊர் முன்னால் போகின்றான்.
இவன் திரும்ப வருவானா என்று பார்த்திருக்கும்,
இவன் வயது முதிர்ந்த பெற்றோருக்கு யார்
ஆறுதல்
இனி இப்படித் தவறு எம் மண்ணில் நிகழாது.

*-நயினை பாரதி*
*பேர்ண் -சுவிஸ்*

மண்ணின் மைந்தனே மண்ணை நீ பார்ப்பது
எனக்கு மட்டும் புரிகின்றது தமிழீழ மண்ணில்
எதிரி என்னை பிடித்து விட்டான்.
என்று நான் தலை குனியவில்லை
என் தாய் அவள் மண்ணில் எதிரியின்
பாதம் மிதிக்க விட்டுவிட்டேன் என்று
உன் தாய் மண்ணிடம் கைகட்டி
தலை குனிந்து அவளிடம் என்னை
மன்னித்து விடு என்று கேட்கின்றேன்
என் கால்கள் இனி தாய்த் தமிழீழத்தில் தான் பதியும்

*-நவாலி ரூபன்*
*சறே- ஐக்கிய இராச்சியம்.*

## கண்கள்கூறும் வார்த்தைகள் ஏப்ரல்

உண்மைக்கு மேலே
நடாத்தப்படும் பேரினவாதத்தின்
பொய்மை விதைப் பொன்று
இங்கே நடந்தேறுகின்றது.
குற்றம் என்ன கண்டாயடா என்று கேட்க
யாருமில்லை என்றா?
கூண்டுக்கிழுத்துச் செல்கின்றாய் கயவனே
கூண்டுடையும் நாள் வெகு தொலைவில் இல்லை
எண்ணிக்கொள்
பெற்ற வயிறு பற்றி எரிய
சுற்றமெல்லாம் சூழ்ந்து நிற்க
விலங்கு போடப்பட்ட இவனுக்கு விடிவெப்போது ?

*-பாலன்*
*பாரிஸ்- பிரான்ஸ்*

நிராயுத பாணியாய் கைகள் கட்டப்பட்டு
எங்கு கொண்டு செல்லப்பட்டாய்
வதை முகாமா? புதை குழியா?
உப்பளக் காற்றின் வெற்றிச் செய்தி
உன்னையும் தொட்டதா- அல்லது
முன்னமே உன் மூச்சுக்காற்று
வெட்டிப் புதைக்கப்பட்டு விட்டதா
இனியும் தொடராது சகோதரனே
எந்தத் தமிழனுக்கும் உந்தன் நிலை

இது எங்கள் புதல்வர்களின் வீரம்
வெற்றிகளைக் குவிக்கின்ற நேரம்.

*-சந்திரவதனா செல்வக்குமாரன்*
*சுவாபிஸ் கால்- ஜேர்மனி*

கைகள் கட்டியதால்
கண்கள் பனித்தனவோ?
சிறை வைக்கப்பட்டதால்
சிரம் தாழ்த்தினாயோ?
குற்றங்கள் புரியாமல்
குற்றவாளிகள் முத்திரை!
சித்தங்கலங்கிடும் சித்தரவதைகள்!
ஓ..! இதுதான் இன்று..........
இசைபாடும் யாழின் நிலையோ?
நித்திரையின்றி நித்தம் நிமிரும்
வேங்கைகள் நாளை இந்நிலை
மாற்றிடுவர், இது நிச்சயம்!


*-வல்வைத் தேவகி*
*எவர்டுன்- சுவிஸ்*

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அன்பான வாசகர்களே!
# "உணர்வுப்பாலமாக" "உறவுப்பாலமாக" வெளிவரும் எரிமலை இதழ்,

உலகமெலாம் பரவி வாழும்
நம்மவர் எல்லோரையும்
சென்று எட்டவேண்டும்
என்பது எமது ஆவல்.
உங்களை வந்தடையும்
எரிமலை உங்கள் உறவுகளை,
நண்பர்களை
சென்றடைகின்றதா?
இல்லையானால்....
அது உங்கள் பணி
நாளையே அவர்களும்
எரிமலை வாசகர்கள்
ஆகட்டும்!




## மாதம் ஒருமுறை எரிமலை நாடிவர நாடுங்கள்

| சுவிற்சலாந்து | இங்கிலாந்து | ஜேர்மனி | பிரான்ஸ் | இத்தாலி |
|---|---|---|---|---|
| T.E.C.C<br>Postfach 2274<br>8031 Zurich<br>Tel:(41) 127 33 407 | U.T.O<br>202 Long Lane<br>London SE1 4QB<br>Tel:(44) 207 403 45 54 | T.C.C<br>Postfach 101613<br>46016 Oberhaousen<br>Tel:(49) 208 205 991 03 | T.C.C<br>341 Rue Des Pyrenees<br>75020 Paris<br>Tel:(33) 1 43 58 11 42 | T.C.C<br>Via Paolo Balsamo -11<br>90100 Palermo<br>Tel:(49) 208 205 991 03 |
| **நெதர்லாந்து** | **டென்மார்க்** | **நோர்வே** | **சுவிடன்** | **கனடா** |
| T.C.C<br>P.O.Box 18600<br>2502 EP Den Haag | L.T.T.E<br>P.O.Box 47<br>7400 Herning<br>Tel:(45) 97 21 76 49 | T.C.C<br>P.O.Box 1699,Vika<br>0110 Oslo<br>Tel:(47) 22 35 09 80 | T.C.C<br>Glomminge Grand-25<br>3rd Floor,<br>16362 Spanga | W.T.M<br>64 Eaton Ave, Toronto<br>Ontario M4J 2Z5<br>Tel:(1) 416 46 15 991 |
| **அவுஸ்திரேலியா** | **அமெரிக்கா** | | | |
| T.C.C<br>P.O.Box 375<br>Preston<br>Victoria 3072<br>Tel:(61) 03 95 47 83 00 | W.T.C.C<br>170-10 Cedarcroft Road<br>Suite 1-L, Jamaica<br>New York 11432<br>Tel:(1) 718 657 94 63 | | | |

எரிமலை இதழ் சார்ந்த தொடர்புகளுக்கும், உங்கள் நாடுகளில் தொடர்பு முகவரிகள் இல்லாதவர்களும் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

ERIMALAI
C/O T.C.C -France
341 Rue Des Pyrenees
75020 Paris
FRANCE.

Fax: (33) 1 43 58 11 91
Email: erimalai@freesurf.fr

வாசகர்களே! எழுத்தாளர்களே!
உங்கள் மேலான கருத்துக்களை, ஆக்கங்களை எமக்கு எழுதி அனுப்புங்கள். அவை எரிமலையை ஊக்கப்படுத்தும். அதன் தரத்தை மேலும் உயர்த்தும். இது உங்களின் எரிமலை.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




உதயம்

சீரற்ற வாழ்வை
சீர் செய்ய
சீறி எழுந்தவன்.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்